3068

அன்பளிப்பு
திருமதி: கி. வா. ஜ.
'காந்தமலை'
சென்னை - 600 028

கி. வா. ஜ
மணிவிழா மலர்

இலங்கை,..1966

For

HARDWARE

Estate Supplies

&

Factory Requisites

TILLYS HARDWARE STORES

377, Old Moor Street, Colombo 12

427, Sri Sangaraja Mawatte, Colombo 10.

Dial : 7 4 3 9

Gram : 'Tillys'

கி. வா. ஜ.
மணிவிழா
மலர்

ஆசிரியர்கள் :

கி. லக்ஷ்மணன்
செ. தனபாலசிங்கன்

தயாரிப்பு:

சில்லையூர் செல்வராசன்
வீ. சுந்தரலிங்கம்

சீடனுக்குத் தகுந்த குரு

கடலும் கறையானும் காலமும் இரைகொண்ட முது தமிழ்க் காப்பியங்களை மீட்டளித்ததால் மட்டுமன்றி, ஜகந்நாதன் என்னும் தமிழ் நாதனைத் தலைமாணாக்கனாகப் பெற்றதாலும் பெருமைக்குரியாராகும் மகாமகோபாத்தியாயர் உ. வே. சாமிநாதையர் அவர்களின் சிலாரூபம்.

குருவுக்குத் தகுந்த சீடனும்
சீடனுக்கு வாய்த்த திருமகளும்



கி. வா. ஜ. தம்பதிகள்

'மலையளவு சுவாமிக்குத் தினையளவு புஷ்பம்'

திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்களின் மணி விழாவையொட்டி ஒரு மலரினை வெளியிடுவதைப்பற்றி நாம் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம். திரு. கி. வா. ஜ. அவர்களின் பெருமைக்கோ புகழுக்கோ பல துறைத் திறமைக்கோ எதுவிதத்திலும் ஏற்ற முறையில் இம்மலர் அமைந்துவிட்டது என்பது எமது எண்ணமல்ல. 'மலையளவு சுவாமிக்குத் தினையளவு புஷ்பம்'' என்ற ஆன்றோர் வாக்குப்போல் கி.வா.ஜ. அவர்கள்பால் எமக்குள்ள அபிமானத்தை வெளிப்படுத்தும் சிறிய அடையாளமே இதுஎனக் கொள்வதே பொருத்தம்.

கி.வா.ஜ. அவர்களைப் பற்றி ஊன்றி நினைக்க நினைக்க அவர்கள் ஒரு அசாதாரண மனிதர் என்ற எண்ணமே மேலோங்குகின்றது. தமிழ், சைவம் ஆகியவற்றை யொட்டிய பல்வேறு துறைகளிலே அவர்கள் கைவைக்காத துறை எதுவுமே இல்லை எனலாம். கைவைத்த துறைகளிலும் அவர் கைபட்டுச் சிறப்படையாத துறை எதுவுமே இல்லை.

இலக்கியத்திலே ஆற்றல் படைத்தவர்களுக்கு இலக்கணத்திலே அதே அளவு ஆற்றல் கைவருவது அருமை. அதேபோல இலக்கண விற்பன்னர்கள் அதே சமயம் இலக்கிய விற்பன்னர்களாவதும் அருமை. ஆனல் கி. வா. ஜ. அவர்களோவெனில் இலக்கியம் இலக்கணம் இரண்டினும் நிகரற்ற புலமை பொருந்தியவர்.

சங்க இலக்கியங்களிலே நன்கு கைதேர்ந்தவர்கள், சிறுகதை, நாவல், தற்காலக் கவிதை ஆகிய தற்கால இலக்கிய ஆற்றல் அற்றவர்களாக இருக்கின்றனர். தற்கால இலக்கிய ஆற்றல் உடையவர்கள் சங்க இலக்கியப் பயிற்சி அற்றவர்களாயிருப்பதைக் காண்கிறோம். கி.வா.ஜ. அவர்கள் சங்க இலக்கியங்கள் ஆயினும் சரி, அவற்றை அடுத்த காப்பியங்களாயினுஞ் சரி, பின்வந்த புராண இதிகாசங்கள் ஆயினும் சரி, அவற்றிற்குப் பின்வந்த கலம்பகம் உலா போன்ற சிற்றிலக்கியங்களாயினுஞ் சரி, அவை எல்லாவற்றிலும் ஈடிணையற்ற பயிற்சியும் அதே சமயம் தற்கால இலக்கிய ஆற்றலும் ஒருங்கு கைவரப்பெற்ற சிறப்புடையவர்.

கட்டுரை சிறுகதை முதலியன எழுத வல்ல பலருக்குக் கவிதை இயற்றும் ஆற்றல் கிடையாது. கி.வா.ஜ. அருமையான கவிதைகளை இயற்ற வல்லவர் மட்டுமன்றி அவற்றையும் நினைத்தவுடனேயே மிக அநாயாசமாக இயற்றும் அற்புத சக்தி படைத்தவர். உரும்பராய் சிதம்பர சுப்பிரமணிய சுவாமிமீது அவர்கள் பாடிய திவ்வியமான ஆயிரம் பாடல்களுமே அவர்களது அபாரமான ஆற்றலுக்குத் தக்க சான்று.

பாக்களை இயற்ற வல்ல பலர் தாம் இயற்றிய பாக்களை ஓசை நயத்தோடு பாட இயலாதவராயிருக்கக் காண்கின்றோம். பாக்களை இயற்ற மட்டுமன்றி இனிய ஓசை நயத்துடன் அவற்றைப் பாடவும் வல்லவர் கி. வா. ஜ.

சிலர் பேசுவதில் மட்டும் வல்லவர்கள். சிலர் எழுதுவதில் மட்டும் வல்லவர்கள். கி. வா. ஜ. அவர்கள் பேச்சு, எழுத்து இரண்டிலுமே ஒப்பற்ற சாதுரியம் உடையவர். கி. வா. ஜ. இன்றுவரை நிகழ்த்திய ஆயிரத்துக்கு மேற்பட்ட இனிய சொற்பொழிவுகளும் இயற்றிய நூற்றுக்கு மேற்பட்ட அரிய தமிழ் நூல்களும் இதற்குச் சான்ருகும்.

சமயப் பிரசங்கங்கள் செய்வதிலும் சமய நூல்கள் எழுதுவதிலும் மட்டுமே ஆற்றலும் ஈடுபாடும் உடையவர்கள்

சிலர். வேறு சிலர் இலக்கியச் சொற் பொழிவுகள் நிகழ்த்துவதிலும் இலக்கிய நூல்கள் இயற்றுவதிலும் மட்டுமே ஆற் றலும் ஈடுபாடும் உடையவர்கள். கி.வா.ஜ. அவர்களுக்கோவெனில் சமயம், இலக்கி யம் ஆகிய இரண்டிலும் அற்புதமான ஆற்றலும் அளவு கடந்த ஈடுபாடும் பொருந்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இன்றைய எழுத்தாளருள் பெரும்பா லோர் முதியவர்களுக்கு மட்டுமே பயன் படக்கூடிய நூல்களை எழுதுவதில் வல்லவர் கள். கி.வா.ஜ. அவர்கள் எழுதிய ''விளை யும் பயிர்'' போன்ற நூலை அறிந்தவர் கள் கி.வா.ஜ. அவர்கள் முதியவர்களுக்கு மட்டுமன்றிச் சிறுவர்களுக்கான நூல்க ளைக்கூட எழுதுவதில் எத்துணை கைதேர்ந் தவர்கள் என்பதை உணர்வர்.

தலை சிறந்த எழுத்தாளர்கள் பலர் தாம் மட்டுமே எழுதித் தம் புகழை மட் டுமே பரப்புவதில் கண்ணுயிருப்பர். புதிய எழுத்தாளர்களை உருவாக்க அவர்களுக்கு வாய்ப்பு இல்லாதிருக்கலாம். அல்லது ஆற்றல் இல்லாதிருக்கலாம். கி. வா. ஜ. அவர்கள் தான் தலை சிறந்த எழுத்தாள ராகத் திகழ்வது மட்டுமன்றித் தமிழ் நாடெங்கணும் நூற்றுக்கணக்கான தலை சிறந்த எழுத்தாளர்களை உருவாக்கிய பெரு மைக்கும் உரியவராவர்.

இவ்வாறு என்ன என்ன விதமாக நோக்கினும் தமிழ் வரலாற்றிலே கி.வா.ஜ. அவர்கள் வகிக்கும் இடம் அசாதாரண மானது, அற்புதமானது என்ற எண்ணமே வலியுறும்.

கி. வா. ஜ. அவர்களிடம் காணப்படும் இத்தகைய அரிய அம்சங்கள் அனைத்துக் கும் மகுடம் வைத்தாற்போல அமைந் திருப்பது அவரிடம் இயல்பாகவே பொரு ந்தியுள்ள உயரிய பண்பாடும் இனிய சுபா வமும். அவர்களோடு பழகும் வாய்ப்பைப் பெற்ற அனைவரும் இதனை நன்கு உணர்ந் திருப்பர்.

ஒரு சமுதாயத்தின் இலட்சியம், கலா சாரம், பண்பாடு ஆகிய யாவற்றையும் பிரதிபலிப்பவையும் அவற்றைக் காலாதி காலமாகப் பேணி வளர்ப்பவையும் அச்ச முதாயத்தில் காலத்துக்குக் காலம் வாழும் சான்றோர்கள் எழுதிவைக்கும் நல்ல நூல்களேயாகும். அச்சமுதாயத் தின் மொழி அழியாது நிலைக்கவும் மேலும் வளரவும் காரணமாயுள்ளவையும் இந்த நூல்களேயாகும். எனவே ஒரு சமுதாயத் துக்குரிய பண்பாடு, மொழி, சமயம் ஆகி யவை நிலைப்பதும் மேன்மேலும் விருத்தி யடைவதும் அச்சமுதாயத்திலே தோன் றும் சான்றோர்கள் ஆரோக்கியத்துடன் நெடிது நாள் வாழ்ந்து இயற்றும் நூல் களையும் ஆற்றும் அருஞ் சேவைகளையும் பொறுத்தது.

ஏறத்தாழத் தமது பத்தாவது வயது தொடக்கம் சென்ற ஐம்பது ஆண்டு காலம்முழுவதையும் தமிழுக்காகவும் சைவ த்துக்காகவும் அர்ப்பணித்த தியாக வாழ்வே திரு கி. வா. ஜ. அவர்களுடைய வாழ்வு. அவர்கள் இன்னும் பல ஆண்டுகள் எல்லா நலன்களோடும் இனிது வாழ்ந்து தமிழ்ப் பண்பாடு மேம்படவும், தமிழ் வளரவும், சைவம் தழைக்கவும் தம்மால் ஆனசேவைகளைச் செய்வதற்கு இறையருள் பாலிக்க வேண்டுமென மனமார விழை கின்றோம்.

— ஆசிரியர்கள்

பழைய சம்பந்தம்

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

இற்றைக்கு நூறு வருடங்களுக்கு முன் 1864ம் ஆண்டு ஜனவரித் தொடக்கத்தில், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் வடக்கே சிதம்பரத்தில் ஒரு வித்தியாசாலை தாபிக்கும் பொருட்டு, யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டார்கள். அப்பொழுது நாவலர் அவர்களுக்கு 41ம் வயசு பூர்த்தியாய் 42ம் வயசு ஆரம்பமாகிறது.

மேற் குறிப்பிட்ட ஆண்டு தைமாதத்தில் அத்தோதய புண்ணிய காலம் வந்ததனால் இராமேச்சரம் போய்ச் சேது ஸ்நானமும் சுவாமி தரிசனமுஞ் செய்தார்கள். அதன்பின் மாசிச் சிவராத்திரிக்கு மதுரைக்குப் போக வேண்டுமென்று நினைத்து அங்கு நின்று புறப்பட்டு இராமநாதபுரத்துக்குச் சென்றார்கள். இராமநாதபுரத்தில் திருவாவடுதுறை ஆதீனத்தாருக்கு ஒரு மடம் உண்டு. அம்மடத்திலிருந்த விசுவலிங்கத் தம்பிரானுடைய வேண்டுகோளின்படி நாவலர் அவர்கள் சில தினம் அம்மடத்தில் தங்கியிருந்தார்கள்.

அப்பொழுது இராமநாதபுர சமஸ்தானாதிபதியாயிருந்தவர் பொன்னுச்சாமித் தேவர். இவர் நான்காவது தமிழ்ச் சங்கத் தாபகரான பாண்டித் துரைத் தேவரின் தந்தையார். நாவலர் அவர்களுக்கும் பொன்னுச்சாமித்தேவருக்கும் முன்னமே பழக்கமுண்டு. பொன்னுச்சாமித் தேவரின் வேண்டுகோளின் படி திருவள்ளுவர் பரிமேலழகர் உரையை 1860ம் ஆண்டு ஐப்பசியிலும், திருக்கோவையாரையும் தருக்க சங்கிரகம் அன்னம்பட்டீயத்தையும் அடுத்த ஆண்டு வைகாசியிலும் நாவலர் அவர்கள் அச்சிட்டு வெளியிட்டவர்கள். அப்புத்தகங்கள் மூன்றும் அப்பொழுது திருவாவடுதுறையாதீனத்து மகா வித்துவானாய் விளங்கிய திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களின் சிறந்த சிறப்புப் பாயிரங்களோடு கூடியவைகள். சிறப்புப்பாயிரங்களில் பொன்னுச்சாமித் தேவர் பெரிதுஞ் சிறப்பிக்கப்பட்டிருக்கின்றார்.

பொன்னுச்சாமித்தேவர் முன்னமே பழக்கமானவராயும் புத்தகங்கள் அச்சிட உதவியவராயுமிருந்தும், இராமநாதபுரஞ் சென்றிருந்த நாவலர் அவர்கள், எக்காரணத்தினாலோ சமஸ்தானத்துக்குப் போய்த் தேவரைக்காண விரும்பவில்லை. இச்செயல் அந்தச் சமஸ்தானத்தில் பேராச்சரியத்தை விளைத்தது. அப்பால் நிகழ்ந்தவைகள் விரிவானவைகள். அவற்றின் சுருக்கம் பின்வருமாறு.-

"இவர் (நாவலர் அவர்கள்) வந்திருந்ததை அறிந்த தேவர், தமது சமஸ்தானத்துக்கு வந்த வித்துவான்களுள் ஒருவராவது தம்மைக் கண்டு பரிசு பெற்றுப் போகாதவர் இலராகவும், இவர் மாத்திரம் அங்ஙனம் போவது தமக்குப் பெரியதோர் அவமானம் என்றெண்ணி, தமது சமஸ்தான வித்துவானொருவரை இவரை அழைத்து வரும்படி பலமுறை அனுப்பினார். இவர் உடன்பட்டிலர். அது கண்டு "நம்மிடத்திற் சில வைஷ்ணவ வித்துவான்கள் வந்து விஷ்ணுமதப் பிரசங்கஞ் செய்கின்றார்கள். அவர்களைக் கண்டித்துச் சைவஸ்தாபனம் செய்தல் வேண்டும்" என்று உபாயமாகச் சொல்லி அவ்வித்துவானை அனுப்பினார். அதற்கும் இவர் உடன்படாமை கண்டு அவ்வித்துவான் இவரை நோக்கித் "தாங்கள் தேவரைப்போய்ப் பாராமல் இந்தச் சமஸ்தானத்தை விட்டு உயிர் கொண்டு போதல் அரிது" என்று அச்சுறுத்திச் சொன்னார். அது கேட்ட

இவர், தேவருடைய பல அக்கிரமங்களையும் எடுத்துச் சொல்லி ''இவைகளெல்லாவற்றையும் இங்கிலிஷ் கவர்ண்மெண்டுக்கு அறிவித்துவிட்ட பின்னர்தான், நாவலன் மறவன் கையால் இறப்பது'' என்று சொல்லி அனுப்பி விட்டார். இவைகளெல்லாவற்றையும் அறிந்த தேவர், இனித் தாம் இவரை அழைத்து உபசரியாதொழியின், தமக்குக் கேடுண்டாகுமென்று நினைந்து, பசுக் கன்று தாயை விட்டுப் பிரிந்தாலும், தாயானது தனது கன்று நிற்குமிடந்தேடி அதனைச் சென்றணைந்து அதற்கு மிக்க அன்போடும் பாலைச் சுரந்து கொடுத்தல்போல், தாங்களும் நாம் அறியாது தங்களுக்குச் செய்திருக்கும் குற்றங்களைப் பொறுத்து இது கண்டவுடன் எழுந்தருளிவரல் வேண்டும் என்னும் பொருளை உள்ளடக்கிய ஒரு கவியைப் பாடிப் பின்னும் அந்த வித்துவானிடத்திலேயே கொடுத்தனுப்பினர். அதன்பின் தேவர் எழும்போதெல்லாம் எழாமை, தேவரிடத்தே பரிசு பெறுமை, தேவர்முன் அங்க வஸ்திரம் எடாமை, பாத குறட்டோடு போதல், தம்மொடு வருபவர் எல்லாம் அரண்மனையிற் சேறல் என்னும் கட்டுப்பாடு ஐந்தும் அவருக்கு உடன்பாடாயின் வருவோம் என்று சொல்லியனுப்ப அவைகளுக்கெல்லாம் தேவர் உடன்பாடு என்று சொன்னபின், தம்முடைய பரிசனங்களோடும் தேவருடைய சபைக்குப் போனர். தேவர் எதிர்கொண்டு அழைத்துக் கொண்டுபோய் ஆசனத்திருத்திப் பேசிக்கொண்டிருக்கும்போது, இவருடைய சாமர்த்தியத்தைக் கண்டு, இப்போது ஒரு பிரசங்கஞ் செய்தல் வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். ''சைவ சமயமே சமயம்'' என்னுந் தாயுமான சுவாமி பாடலைப் பீடிகையாகக் கொண்டு சைவத்தின் மேன்மையையும், வைஷ்ணவத்தின் குறைவையும் அப்பயதீக்ஷிதர் அரதத்தாசாரியர் முதலானவர்களுடைய நூற்பிரமாணங்கள் கொண்டு பிரசங்கித்தார். தேவர் அந்தப் பிரசங்கத்தைக் கேட்டு மிக மகிழ்ந்து மற்றொரு வித்துவானுக்குஞ் செய்யாத உபசாரங்களையெல்லாஞ் செய்தார்''

த. கை. எழுதிய நாவலர் சரித்திரம்
101ம் பக்கம்

விரிவைக் கனகரத்தினம் பிள்ளை எழுதிய நாவலர் சரித்திரத்திற் காண்க. 59-67ம் பக்கங்கள்.

பின்பு நாவலர் அவர்கள் இராமநாதபுர சமஸ்தானத்தை விட்டு நீங்கித் திருவுத்தரகோசமங்கைக்குப் போய்ச் சுவாமி தரிசனஞ் செய்து கும்பகோணஞ் சென்ருர்கள். தலங்கள் தோறும் நடந்த உபசாரங்களில் இரண்டு குறிப்பிடத் தக்கவை.

ஒன்று மதுரையிலுள்ள திருஞான சம்பந்த சுவாமிகள் ஆதீனத்துப் பண்டாரச் சந்நிதிகள் செய்த உபசாரம்.

''பிரசங்க முடிவிலே, மகாசந்நிதானம் சந்தோஷங்கொண்டு தமது திருச்செவிகளில் அணிந்திருந்த சுந்தர வேடங்களைக் கழற்றி நாவலருடைய திருச் செவிகளிலணிய, அது கண்ட சின்னச் சந்நிதானம் தாம் அணிந்திருந்த ஆறு கட்டிகளைக் கழற்றி அவ்வாறு செய்தது. இவ்வாறு உபய சந்நிதானங்களும் பிரசங்கத்தை இனிது பாராட்டி நாவலர் அவர்களை வரிசையோடு அனுப்பி வைத்தார்கள்.

மற்றொரு உபசாரம் திருவண்ணமலை ஆதீனத்தில் நடந்தது.

''வேறு மடத்துப் பண்டாரச் சந்நிதிகள் தாமும் அத்திருமடத்து வீதி வழியே பல்லக்கில் ஏறிக்கொண்டு போனல், தமது கட்டுப்பாடு அழிந்து போமென்று அதற்கிடங்கொடாத பண்டாரச் சந்நிதிகள், நாவலர் அவர்கள் பிரசங்கஞ் செய்து முடிந்தபின், பல்லக்கொன்று திட்டப்படுத்தி, சித்தாந்த சைவப் பிரவர்த்தகராகிய நாவலரை அதின்மேலேற்றி, தம்பிரான்கள், ஓதுவார்கள், சாஸ்திரிகள் முதலானவர்கள் சூழ்ந்து செல்ல, கட்டியத்தடி, வாணத்தடி, கோணத்தடி, வெள்ளிப் பந்தி முதலிய விருதுகளும், பெரியமேளம்

முதலிய வாத்தியங்களும் முன் செல்ல பட்டணப் பிரவேசஞ் செய்வித்தார்கள்." இது நிற்க. இனிக் கும்பகோணத்துக்கு வருவோமாக.

"நாவலர் கும்பகோணம் வந்திருக்கிருர் என்பதைக் கேள்வியுற்ற திருவாவடுதுறை யாதீனத்துப் பண்டாரச் சந்நிதிகள், வித்து வான்களிற் சிறந்தவரென்று தமிழ்நாடெங் கும் புகழ்படைத்தவரும், தேவாரம் பெற்ற அநேக ஸ்தலங்களுக்குப் புராணஞ் செய்த மகா வித்துவானுமாகிய மீனுட்சி சுந்தரம் பிள்ளையையும், நாவலரை மடத்து க்கு அழைத்துக் கொண்டு வரும்படி அனு ப்பி வைத்தார்கள்".

" மாமகவிசே டங்கொண்டு
வைகிய தலத்தில் வந்து
தாமகலா திருந்தார்
தஞ்செய்திதனைக் கோமுத்திக்
கோமகராச யோகங்
கொண்டசற் குருவென்ருேத
லாமகாசந் நிதான
மறிந்துதம் மடாலயத்தில் "

" வித்துவா ஞயிருந்து
விரும்புதே வாரமேய
வுத்தம விசேடமுற்ற
வுயர்பல தலங்கட்கோங்கும்
புத்தமு தனையபாடற்
புராணஞ்செய் போதமாருஞ்
சுத்தநற் குணமீனுட்சி
சுந்தரத் தோன்றலோடு "

" ஓதுவார் சிலரையுஞ்சேர்த்
தொருங்குடன் சென்று நீரிப்
போதுநா வலரைநம்பாற்
புகுவியும் போமென்ருேதச்
சாதுவா மவருஞ் சென்று
சைவபோதகரைக் கூட்டித்
தீதுதீர் மடத்தில் வந்தார்
தேசிகர்தமைச் சேவித்து "

" போதக ரிருக்குநாளிற்
புறமதப் புரட்டுப்போக
வேதவா கமசித்தாந்த
விரோதமில் விதமதாக
வேய்தமிழ்ப் பிரசங்கத்தா
லிலக்கண விலக்கியத்தின்
வாதஞ்செய் வார்கட்கைய
மறுத்தலான் மகிழ்தலாஞர் "

கவி மேகமாகிய மீனுட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் பிரசங்கமேகமாகிய நாவலர் அவர்களைத் திருவாவடுதுறையாதீனத்துப் பண்டார சந்நிதிகளின் முன்னிலைக்கு அழைத்துச் சென்று, ஆண்டுக் குழுமியி ருந்த வித்துவ சபையில் பண்டாரச் சந் நிதிகளின் ஆணையை மேற்கொண்டு நாவ லர் அவர்களை வீற்றிருக்கச் செய்து பெரு மகிழ்ச்சியைப் பெருக்கஞ் செய்தார்கள். அப்பொழுது திருவாவடுதுறையிற் பிர சித்தி பெற்று விளங்கியவர்கள், சிவஞான சித்தியாருக்கு உரை செய்த அறுவருள் ஒருவராகிய மேலகரம் சுப்பிரமணிய தேசிக சுவாமிகள்.

சுப்பிரமணிய தேசிக சுவாமிகளே நாவலர் அவர்களுக்கு நாவலர் என்ற பட் டத்தை வழங்கியவர்கள். நாவலர் அவர் கள் மீனுட்சி சுந்தரம் பிள்ளை அவர்களுக்கு ஏழாண்டு இளையவர்கள். அவ்வாறிருந்தும் தமது இருபத்தேழாம் வயதில் 1849ம் ஆண்டில் நாவலர்ப் பட்டத்தைப் பெற் றுக்கொண்டார்கள். நாவலர் அவர்கள் பட்டம் பெறும்போது மீனுட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் ஆதீனத்தைச்சேரவில்லை. மீனுட்சி சுத்தரம் பிள்ளை அவர்கள் திருவா வடுதுறையாதீனத்து வித்துவாஞகியது 1860ம் ஆண்டை அடுத்தேயாம்.

பிள்ளையவர்கள் இப்பொழுது நாவலர் அவர்களை எதிர்கொண்டழைக்க முன்னமே

'கற்றுணர் புலவர் உட்களிக்கும்
முற்றுணர் ஆறுமுக நாவலனே'

என்று திருக்கோவையார்ப் பதிப்புப் பாயி ரத்திற் பாராட்டியிருக்கின்ருர்கள். பிள்ளை அவர்களின் தலைமாணவர் பிரசித்தி பெற்ற

தியாகராசச் செட்டியார் அவர்கள். செட்டியார்,

'என்னுளங் குடிகொண் டிருக்கும்
முன்னுசிர் ஆறுமுக நாவலனே'

என்று நாவலர் அவர்களைத் துதிக்கின்றார்.

மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களும் அவர்களின் மாணவரும் அக்காலத்தில் நாவலர் அவர்களைப் பொன்னேபோற் போற்றினார்கள். பிள்ளை அவர்கள் ஆதீன வித்துவானாகிய காலத்தில், அவர்களிடம் படித்தவர்கள் நமசிவாயத் தம்பிரான், வன்றொண்டஞ் செட்டியார், இராமசாமிப் பிள்ளை என மூவர். இந்த மூவரும் 1864-ம் ஆண்டு தொடக்கம் நாவலர் அவர்களுக்கும் மாணவராயிருந்தார்கள். நமசிவாயத் தம்பிரான் சுப்பிரமணிய தேசிக சுவாமிகளுக்கு கீழே இரண்டாம் பட்டமாயிருந்தவர். அவருடைய மாணவர் அருணாசலக் கவிராயர். கவிராயர் நாவலர் சரித்திரத்தைக் கவி செய்திருக்கின்றார். மேற்காட்டிய கவிகள் கவிராயரின் கவிகள்.

பிள்ளை அவர்களும் நாவலர் அவர்களும் இருவராயினும் ஒருவரேயாவர். பிள்ளையின் மாணவர்கள் நாவலரின் மாணவர்களாயுமிருந்தார்கள்.

சிதம்பரத்துக்குப் புறப்பட்ட நாவலர் அவர்களைத் திருவாவடுதுறையாதீனத்திலிருத்தி விட்டுப் பழைய வயசுபோன கதைகளை விரிப்பதன் காரணத்தை இனி மெல்லச் சொல்லப் போகின்றேன்.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் இறுதிக் காலத்து மாணவர் மஹாமஹோபாத்தியாயர் டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள். ஐயர் அவர்கள் தமது பதினேழாம் வயசில் 1872-ம் ஆண்டு பிள்ளை அவர்களை அடைந்தவர்கள், 1864-ல் வடக்கே சென்ற ஆறுமுக நாவலர் அவர்கள் 1870 மாசியிலே யாழ்ப்பாணத்துக்கு மீண்டு வந்தார்கள். வெகுநாட் பிரிந்திருந்த யாழ்ப்பாணத்தவர்கள் மிகப் பெரும் வெற்றிகளுடன் வந்த நாவலர் அவர்களைப் பாரிய முறையில் வரவேற்று உபசாரஞ் செய்தார்கள். அந்த வரவேற்பொலி இரண்டு ஆண்டுகள் கழிந்தும், மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் முன்னிலையில் ஒலித்ததை, ஐயர் அவர்கள் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் சரித்திரம் இரண்டாம் பாகத்தில் தாம் முதன் முதற் பிள்ளையைச் சந்தித்தபோது நிகழ்ந்த நிகழ்ச்சிகளிற் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அச் சரித்திரத்தில் 1870 என்றிருப்பதை 1872 என்று திருத்தஞ் செய்ய வேண்டும். 1870 மாசிக்குப் பின் நாவலர் அவர்கள் வடக்கேசெல்லவில்லை. ஆகையால் நாவலர் அவர்களைச் சந்திக்க ஐயர் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. கிடைத்திருந்தால் ஐயர் அவர்கள் நாவலர் அவர்களுக்கும் மாணவராயிருந்திருப்பார்கள். ஐயர் அவர்களின் அன்புக்கும் ஆசிக்கும் பாத்திரமான உத்தம மாணவர் நமது கி. வா. ஜகந்நாதையர் அவர்கள்.

மாணவ பரம்பரையில், மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களுக்கு ஜகந்நாதையர் அவர்கள் பௌத்திரர். ஆகவே ஐயரவர்கள் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களில் வேறாகாத நாவலர் அவர்களுக்கும் பௌத்திரரேயாவர்.

இவ்வாற்றால் கி. வா. ஜகந்நாதையா நமர். அவர்களுக்கும் நமக்கும் உள்ள சம்பந்தம் புதுச் சம்பந்தம் அன்று; பழைய சம்பந்தமேயாம்.

ஐயர் அவர்களின் சஷ்டியப்த பூர்த்தி விழா சென்னையிலும் தமிழ் வழங்கும் பிற இடங்களிலும் வெகு கோலாகலமாகக் கொண்டாடப் படுகின்றது.

நமது நாட்டிலும் அவர்களை அழைத்து உபசாரஞ் செய்ய முயற்சிகள் நடைபெறுகின்றன. நாவலர் அவர்களுக்கு அக்காலத்தில் அங்கே நடந்த உபசாரங்கள் இமாசலம் போன்றவை. நாமோ நகுலாசலவாசிகள். எனினும் எம்மாலியன்ற உபசாரஞ் செய்து நம்மைப் பெருமைப் படுத்திக் கொள்வோமாக.

ஐயா அவர்களே, உங்கள் வரவு நல்வரவாகுக. உங்கள் சம்பந்தம் பழஞ்சம்பந்தம்

"இதைக் கேளப்பா"

அ. வி. ம.

யாழ்ப்பாணத்துப் பேச்சுவழக்கில் வாழைப் பழம் பெரும்பாலும் வாளைப்பளமாகவும் மரவள்ளிக் கிழங்கு பெரும்பாலும் வரவளிக் கிளங்காகவும் மாறி ஓசைபெற்று உருக்கொள்ளுவதைக் காண்கின்றோம். இப்படி 'ழ' கரச் சொற்கள் பேச்சுவழக்கில் திரிபு படுவதால் எழுத்து வழக்கிலும் இவை சிலவேளை இப்படியே உருவெடுத்துவிடுகின்றன.

இவைபோன்றே, 'ந', 'ன' என்னும் எழுத்துக்களும் ஆகும். இவை நேரும் இடம் ஒரு சொல்லின் இடையில் இருப்பின், தம்முள் தடுமாறி வழங்கப்படுவதைக் காண்போம் — "ஆநந்தன் புறநடையாவான்" எனவும் "ஆனந்தன் புறனடையாவான்" எனவும் வழக்கு உண்டு. இவை இரண்டும் சரியேயாயினும் பின்னையதை நன்றெனக் கொள்வோம் — இவ்வெழுத்துக்களை வேறுபடுத்தி அறியத் தந் 'ந' கரம், றன் 'ன' கரம் என்றும் வழங்குகின்றோம். இப்படியே 'ண', 'ன' களை மூன்று சுழி இரண்டு சுழி என்று வேறுபடுத்திக் கூறுகின்றோம்.

இதுபோலவே 'ழ', 'ள' எனும் எழுத்துக்களை வேறுபடுத்த மவ்வளவு, கொம்பளவு என்று இரண்டு பதங்களை வழங்கி மாணவருக்கு வேறு பாட்டை விளக்குகிறோம். ஒன்று 'ம' இன் அளவாகவும் மற்றையது 'ெ' கொம்பின் அளவாகவும் உளது என்றும் காண்பிக்கின்றோம். இச் சொல்லாக்கம் செப்பமானதா? இவ்வெழுத்துக்கள் அந்த 'அளவை'க் கொண்டனவா?

இது நிற்க, 1939 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் சென்னையில் திருவல்லிக்கேணியில் ஒரு அக்கிரகார வீதியில் மூவர்ணக் கொடி ஏற்றிய மாடிவீடொன்றில் மகாமகோபாத்தியார் தமிழிற்குப் பேருந்தொண்டு புரிகையில் ஒருநாள் விடியற்காலை இரண்டு நிமிடம் பேசும் உத்தரவுடன் அவரைச் சென்று காணும் பாக்கியம் கிடைத்தது. யாழ்ப்பாணத்தவர் ஒருவர் வந்திருக்கிறார் என்று அறிவித்தபடியால்தான் அவ்வளவு இணக்கம்; இல்லாவிட்டால் அந்தக்காலை நேரத்தை எவருக்குமே கையளித்து வீணாக்க இடம் கொடுப்பதில்லை என்று விட்டார் திரு. ஐயர் அவர்கள். அதிகாலை நேரமே தன் ஏடுகளை வாசித்து ஒப்பிட்டு உவந்த பாடங்களைக் கொப்பியில் எழுதிக் கொள்ளச் சிறப்பான பொழுது என்றும் சொன்னார்கள்.

ஆதலால், இரண்டு நிமிடத்திற்கு மேல் நிற்கவே எனக்கு மனம் விரும்பவில்லை. ஆயினும், சில விடயங்களை ஐயரவர்கள் விசாரித்தார்கள். நாவலரையா, தாமோதரம்பிள்ளை அவர்கள், இன்னும் இவர்களைத் தொடர்ந்து தமிழிற்குத் தொண்டு புரிந்த கணேசையா, குமாரசுவாமிப் புலவர் முதலியோரின் வழித்தோன்றல்களைப் பற்றியும் விசாரித்தார்கள். தெரிந்ததைக் கூறினேன்.

யாழ்ப்பாணத்தவர் பேச்சில் மவ்வளவு கொம்பளவு வித்தியாசம் தோன்றினாலும் எழுதும்போது கவனமாக எழுதுவார்கள் என்னும் கருத்துப்படக் கூறினார். அது 'மவ்வழகு', 'கொம்பழகு' என்றிருக்குமோ; என்று விநயத்துடன் கேட்டேன். ஏனெனில் 'ம' இனுடைய அழகை (உருவத்தை) உடையது 'ழ' என்றும், 'ெ' கொம்பினுடைய அழகை (உருவத்தை) உடையது 'ள' என்றும் அமையலாம் ஆதலால் — என்றேன். அவர்கள் யோசித்துச் சிறிது புன்னகை செய்தார்கள். பின்பு, அருகே ஆழ்ந்த யோசனையுடன் கூர்ந்து சரவை பார்த்துக்கொண்டிருந்த ஒருவரை நோக்கி "இதைக் கேளப்பா" என்றார். அவருக்குப் பக்கத்தில் பல ஏடுகளின் மத்தியில் இருந்த, அவருடைய 'வாரிசு' என்னும் பெருமைக்குப் பாத்திரமான, நன்றாக 'முடிசூடியிருந்த மன்னர்' கி. வா. ஜ. தலையை நிமிர்த்தினார். மவ்வி'ழ'வு, கொம்பி'ழ'வு என்பவைதான் பேச்சு வழக்கில் மவ்வளவு, கொம்பளவு என்றாயின போலும். என்றார். முன்னர் உடம்படு மெய்யேற்று இரட்டித்துப் பின்னர் அசை கொண்டு, 'ழ' உம் 'ள' உம் இச்சொற்களுள் தோன்றுகின்றன என்றார்.

ஆனல், தம்பி சொல்லுகிற 'மவ்வழகு, கொம்பழகு' என்னும் சொல்லுகளும் அழகாயிருக்கின்றன. கருத்தும் கூற இடம் கொடுக்கின்றன என்றார். ஐயா அவர்கள் கலந்தாலோசிக்கும் அத்துணை பெரியாரோ இவர் என்று இறுமாந்தேன்.

ஐயா அவர்களுக்கு உறுதுணையாக இருந்து உரைகளை வாசித்துச் சரிபிழை பார்த்துக் கொப்பிகளில் எழுதி அச்சேற்றிய துணை ஆசிரியராகிய கி. வா. ஜ. இன் சஷ்டியப்தபூர்த்தி விழா இன்னும் தமிழ் நாட்டு எல்லைப்புறங்களில் நடந்து கொண்டேயிருக்கின்றது. இவர் நாட் செல்லச் செல்ல ஐயா அவர்களை ஞாபகப்படுத்துவாரென்பது என் நம்பிக்கை. இவருக்கும் அவருடைய பூணூல் உண்டு, ஆழ்ந்த அறிவு உண்டு, கற்பனுசக்தி உண்டு, ஆராய்ச்சித் திறன் உண்டு. அவருடைய உத்தூளன விபூதி உண்டு, அன்று அவரிடமிருந்த முடித்துக்கொள்ள முடியாத மூன்று தலைமயிர் எப்படியோ இவரிடமும் வந்து சரண் புகுந்து உச்சியிலுமே ஏறி வீற்றிருக்கின்றன.

இதற்கிடையில் ஐந்து நிமிடங்கள் சென்றிருக்கும். ஞாபகத்தில் இருந்த இந்தச் சந்திப்பை எழுத்தில் பொறிக்க வாய்ப்பளித்த கி. வா. ஜ. அவர்கள் பல்லாண்டு வாழ்க.

பெருவாழ்வு

— முருகையன் —

பகைபோல் நினைந்து, பயமாகி,
பலபேர் அணைந்து பழகாத
தொகையான சங்க முதனூல்தம்
சுவை ஓது கின்ற தொழிலாளி!
திகழ் சாமிநாத குரவோனின்
செயல் நீள வந்த ஒரு மாணி!!
ஜகந்நாதன் என்ற திருவாளா,
தமிழ்நாடு கண்டபெருவாழ்வே.

புலவோர் விரும்பு தமிழ் ஆய்வே
பொருளாய் வணங்கும் அடியானே!
சலியாமல் இன்சொல் பொழிவோனே,
தளரா தெழுந்த பணியாளா,
கலைஞான நன்மை நிறை தூயா,
கவிதா விருந்து நுகர்வோரின்
உலையாத நண்ப—உறுதோழா!
உணர்வாய் நிரம்பி ஒளிர்வோனே.

மடைபோய் உடைந்து வெளியேறி
வருவாரி வென்ற உரையாளா,
விடைவேணும் என்று விழைவோரின்
விரிவான கோரல் நிறைவேறக்
கொடை ஈவுவந்த குணசீலா,
குறையாத சொந்த நினைவாளா!
—அடடா!— தெளிந்த பதகாரா
அயரா துயர்ந்த பெரும் ஆளே.

உரைகாரர் என்ற பழையோரும்
ஒருமூலை சென்று புகுமாறு
விரிவாய் அகன்ற, எளிதான
மிளிர்வான பண்பு நயனுய்வு
பரிவோடு தந்து பழநூலின்
பயனுய் அமைந்த செயல்வீரா!
முருகோனில் என்றும் உலவாத
முதிர்காதல் கொண்ட முனைவோனே.

'இதுகாறும், இன்றும், இனிமேலும்,
எவரேனும் இல்லை இணையாக;
புதிதே இவன்செய் திருவேலை;
புகழாளன்!' என்று பிறர்பேச
இதமாக நின்று பலவூழி
இசையோ டியைந்து பெயர்வாழி;
மதஞான சிந்தை வழி வாழி;
மனமேல் இவர்ந்த ஒளி வாழி.

(மாணி—மாணவன்; தெளிந்த பதகாரன்—சொற்களைத் தெளிவாய்ப் பிரயோகிப்பவன்)

கி. வா. ஜகந்நாதனின் எழுத்தும் பேச்சும்

ச. தனஞ்சயராசசிங்கம், B. A. (Hons) ; C. L., M. Litt.

வித்துவான் கி. வா. ஜகந்நாதனின் தமிழ்த் தொண்டினைச் சஞ்சிகையாசிரியர், சிறுகதையாசிரியர், கட்டுரையாசிரியர், நாடோடி இலக்கியத் தொகுப்பாசிரியர், ஆராய்ச்சியாளர், சொற்பொழிவாளர் என அறு கூறுகளாக நாம் பிரிக்கலாம்.

திரு. கி. வா. ஜகந்நாதன் சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்வித்துவான் தேர்வில் முதலாகத் தேர்ச்சிபெற்றவர். அப் பல்கலைக் கழகத்தின் முதுகலைப் பட்டத்தினையும் பெற்றவர். கலைமகள் என்னும் தரம்வாய்ந்த திங்கள் ஏட்டின் ஆசிரியராராகக் கடமையாற்றிவருகையில் ஈழத்து வாசகரின் உள்ளத்தினைத் தம் சிறுகதைகளாலும் கட்டுரைகளாலும் முதலிற் கவர்ந்தார். 1932 - ஆம் ஆண்டு தொடக்கம் 1952-ஆம் ஆண்டு வரையும் உள்ள காலப் பகுதியில் இவர் சிறு கதைகள் பலவற்றினை எழுதியுள்ளார். அவற்றில் நீலமணி, கலைஞனின் தியாகம், விடுதலை, பிராயச்சித்தம், சிற்பியின் கனவு, அவலட்சணத்தின் விலை, சாதித்தடை, துப்பறிபவன், கலைச் செல்வி, அறுந்த தந்தி, தீபாவளி விருந்து, நழுவிய பழம், முதலியன குறிப்பிடத்தக்கன. வரலாற்றுச் செய்திகளுடன் ஒன்றிய கற்பனை, நீதிக் கருத்துக்கள், சமுதாய வாழ்வில் மூட நம்பிக்கைகள், கடவுட் பற்று, நகைச்சுவை முதலிய அம்சங்களை இவரின் சிறுகதைகளில் நாம்காணலாம். இவர் தம் சிறுகதையாக்கத் தொடக்கத்திற்கதைகளில் காட்டிய பழந்தமிழ் இலக்கியப் பின்னணியை இவரின் பிற்காலப் படைப்புக்களில் பெரிதும் காணமுடியாது. பிற்காலப் படைப்புக்களில் மக்களின் அன்றாட வாழ்க்கையில் நிகழும் சச்சரவுகளைச் சிறுகதைக்கு நிகழ்ச்சியாகக்கொண்டு எழுதிப் பெரும் புகழினை ஈட்டியுள்ளார்.

இவர் பேசாதபேச்சு, மல்லிகை மாலை, முல்லை மணம் என்ற தலைப்புக்களில் கட்டுரைகள் பலவற்றினை எழுதித் தொகுத்து வெளியிட்டிருக்கிறார். இவற்றுள் மல்லிகை மணம் என்னும் தலைப்புக்கொண்ட தொகுதியில் அடங்கிய கட்டுரைகள் முதலில் வானொலியில் பேச்சாய் அமைந்தவை. இக்கட்டுரைகளிலே கனம் கிருஷ்ணையர், டாக்டர் சாமிநாதையர் போன்றவர்களின் வரலாற்றுக் குறிப்புகளும் மண்சுமந்த கதை, சரபேந்திர பூபால குறவஞ்சி நாடகம் போன்ற இலக்கியக் கட்டுரைகளும் தமிழ் வசனநடை, கட்டுரை, கொச்சைத் தமிழ் முதலிய எழுத்தாளர்க்கும் மாணவர்க்கும் உதவுவனவும் அடங்கியுள்ளன. முல்லை மணம், பேசாத பேச்சு, என்னும் கட்டுரைத் தொகுதிகளில், திருக்குறள், திருக்கையிலாய ஞானவுலா, பெரிய புராணம், கம்பராமாயணம், பெரியபுராணம், வில்லிபாரதம் போன்ற நூல்களின் பாடல்கள் சிலவற்றின் இலக்கியச் சுவையினை விளக்கி, அவற்றினைப் படிப்போரை அப்பாடல்கள் கொண்ட நூலை முற்றுகப் படிக்கத் தூண்டும் கட்டுரைகள் உள்ளன. சங்க நூல்களை இன்று கற்றல் எவர்க்கும் எளிதன்று. அவை இன்று பொருள்மாற்றம் பெற்றும் வழக்கிறந்துமுள்ள சொற்கள் பலவற்றினைக்கொண்டும் தொகைகளினுற் சொற் சுருக்கம் பெற்றும் விளங்குகின்றன. அவற்றிற்குப்பதவுரை, பொழிப்புரை, சிறப்புரை முதலியவற்றை எழுதித் தமிழ்ப் புலமை உடையவர்க்குப் பயன்படும் வகையில் அவற்றினை வெளியிடும் வழக்கம் பல்லாண்டுகளாக இருந்துவருகிறது. அவ் இலக்கியங்களிற் காணப்படும்

அரிய செய்திகளில் ஓரிரண்டினை அடிப்படையாக அமைத்துக் கதைபோல எழுதுகிற புதிய முறையினைக் கையாண்டு அதில் இவர் ஈடில்லா வெற்றிபெற்றிருக்கிறார். சங்க நூற்காட்சிகள் என்னும் தலைப்பில் சங்க நூலிற் சித்திரிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சிகளை விரித்துக் கதைவடிவில் உரையாடற் பகுதிகளுடன் வெளியிட்டிருக்கிறார். சங்கப் பாடல்களைப் பாமரரும் படித்துச் சுவைக்கத்தக்க எளிய நடையில் பற்பல நூல்களுடன் ஒப்பிட்டு ஆசிரியர் எழுதியிருப்பதுபோற்றற்குரியது. சைவத் திருமுறைகளின் பொருளை முற்றாக அறிந்தவர் இல்லையெனலாம். திருமுறைகளிற் சில பாடல்களைத் தேர்ந்து அவற்றிற்கு எளிய தமிழில் விளக்கம் தந்துள்ளார். திருமுறை மலர்கள் என்னும் தலைப்பிலே இவரால் வெளியிடப்பட்ட நூல்கள், தமிழ்ப் பாடல்களின் இலக்கியச் சுவையை நுகர்வதற்கு மேனாட்டு இலக்கியத் திறனாய்வாளர் கூறியவற்றினை அளவுகோலாகக் கொள்ளவேண்டியதில்லை என்பதனை நன்கு வெளிப்படுத்துகின்றன. ஆசிரியர் தமக்கே சிறப்பாக உரிய முறையில் சைவநாயன்மார்களின் பாடல்களின் நயத்தினைத் தமிழ் மரபு பிறழாது ஆராய்ந்துள்ளார். எவர்க்கும் எளிதில் விளங்கமுடியாத திருமுறைக் கருத்துக்களைப் பொதுமக்களும் விளங்குமாறு இவர் விரித்துரைத்திருப்பது இவரின் அரிய ஆற்றல் எனலாம். இறைவன் அருளாற் பகைப்பொருள்கள் தம் பகைமை நீங்கி ஒன்றுபடும் என்பதை விளக்கும் கீழ் வரும் பகுதி இவரின் எடுத்த பொருளைப் படிப்போர் உள்ளத்தில் பசுமரத்தாணிபோற் பதியவைக்கும் ஆற்றலுக்கு எடுத்துக்காட்டாகும்:-'உலகில் பகையென்றும் நட்பென்றும் கேட்டுக்கேட்டு பழக்கப்பட்டுவிட்டோம். ஆகையால் பகைவர்கள் ஒன்றுபட்டால் நமக்கு வியப்பாகத்தான் இருக்கிறது. சிவபெருமானுடைய செஞ்சடையிலே பிறையும் பாம்பும் இருக்கின்றன. பாம்புக்கும் திங்களுக்கும் பகை. முற்றிய திங்களை ராகு என்னும் பாம்பு விழுங்கும்; அதனால் பகை என்பது ஒன்று. திங்களும் பாம்பும் தம்முடைய இயற்கையால் மாறுபடுவன. யாவரும் காண வானத்தில் உலாவருவது திங்கள்; பிறர் கண்ணிற் படாமல் வளைக்குள் ஒளிந்திருப்பது பாம்பு. தன்னுடைய தோற்றத்தால் யாவருக்கும் மகிழ்ச்சியைத் தருவது மதி; தன்னைக்கண்டால் படையும் நடுங்கும்படி செய்வது பாம்பு. வெண்ணிறம் உடையது சந்திரன். கருநிறமுடையது பாம்பு. அமுதமயமாக இருப்பது சந்திரன். அதனால் அமுத கிரணன் என்ற பெயர் அமைந்தது; பாம்போ நஞ்சு கொப்புளிப்பது. சந்திரன் ஒளி உருவமானது. பாம்பு நிழலுருவமானது. ஒன்றுக்கொன்று மாறுபட்ட இவ்விரண்டும் ஓரிடத்தில் இருப்பது அருமை. இருந்தால் அது வியப்பைத் தரும் காட்சிதான்' கஞ்சியில் இன்பம், நாடோடி இலக்கியம் என்னும் தலைப்புக்களில் தமிழ்நாட்டில் வழங்கிவரும் நாடோடி இலக்கியத்தின் சிறப்பியல்புகள் பற்றி எழுதியுள்ளார்.

கி. வா. ஜகந்நாதனின் தமிழாராய்ச் சிக்குக்கோவூர்கிழார், தமிழ்க் காவியங்கள் முதலிய நூல்களும் புறநானூறும் சரித்திரமும் போன்ற கட்டுரைகளும் எடுத்துக்காட்டுக்கள். சங்க காலப் புலவருள் சிறந்துவிளங்கிய கோவூர்கிழாரின் வரலாற்றினைப் புறநானூறு முதலிய நூல்களின் துணைக்கொண்டு ஆராய்ந்துள்ளார். இவர் சென்னைப் பல்கலைக்கழகத்துத் தமிழ் ஆராய்ச்சி மாணவனாகவிருந்த காலத்தில் தமிழ்க் காப்பியங்களாகக் கருதப்படும் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி முதலியவற்றினை ஆராய்ந்தார். காப்பியங்கள் பற்றித் தண்டியாசிரியர் முதலிய இலக்கண ஆசிரியரும் உரையாசிரியரும் கூறியவற்றினையெல்லாம் நடுநிலைநின்று ஆராய்ந்துள்ளார். தமிழ்க் காப்பியக் கதைகளிற் பல எவ்வெப் பிறமொழி மூலக்கதையினின்றும் பெறப்பட்டவை என்பதைச் செவ்வனே இந்நூலில் விளக்கியுள்ளார். இவர் டாக்டர். உ. வே. சாமிநாதையர் பழந்தமிழ் நூல்களைப் பதிப்பிக்கும்பொழுது அவருடன் இருந்து குறிப்பெழுதுதல், ஒப்புநோக்குதல், பிரதி செய்தல் முதலிய

பணிகளைச் செய்தவர். டாக்டர், சாமிநாதையர் பதிப்பித்த பதிற்றுப்பத்து, பத்துப்பாட்டு, மணிமேகலை போன்ற பனுவல்களின் முகவுரைகளில் இவருக்கு டாக்டர் சாமிநாதையர் பெரிதும் கடமைப்பட்டுள்ளார் என்பதை 'என்னுடைய சக்திக்கு இயன்ற அளவு இவர்களுக்கு ஏதோ பொருளுதவி செய்துவருகிறேனேயன்றி இவர்களுடைய பேருழைப்புக்கு எவ்வளவு உதவினாலும் பற்றாதென்பது என் கருத்து' போன்ற அடிகளால் அறிகிறோம்.

வித்துவான் ஜகந்நாதனின் பேச்சு கேட்போரைப் பிணிக்கும் தகையதாயும் கேளாதோரை வேட்கும் தகையதாயும் அமையும் பெற்றியது. சமய இலக்கியம் பற்றியே பெரும்பாலும் இவர் பேசுவார் ஆயினும் இந்திய வானொலியிலும் பிற இடங்களிலும் பல்வகைப்பட்ட கருத்தரங்குகளிலும் கவிதையரங்குகளிலும் பங்குபற்றி அரிய தொகுப்புரைகளை நிகழ்த்தியுள்ளார்.

''எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்
பிறர்வாய் நுண்பொருள் காண்ப தறிவு''

என்பது குறள். இவரின் பேச்சு இவ்விலக்கணத்திற்குப் பொருந்துகிறது. இவர் பேச்சில் அதிக மேற்கோள்களைக் கையாளாது ஓரிரண்டினைத் துணைக்கொண்டு தான் கூறவிரும்பியதைத் தெளிவான முறையிற் கூறும் வல்லமை உடையவர். தன் பொருளுக்கு ஒவ்வாத அடுக்குமொழிகளை வழங்கிப் பொருட்சிதைவு உண்டு பண்ணும் வழக்கம் இவரிடமில்லை. சொற்கள், சொற்பொழிவாளர் விளக்கவேண்டியவற்றிற்குக் கருவிகள் என்பதை நன்கு அறிந்தவர். இவரின் சொல்லாற்றலை யான் ஈழத்திலும் இந்தியாவிலும் மலேசியாவிலும் கேட்கும் வாய்ப்பினைப் பெற்றுள்ளேன். அப்பேச்சுக்களில் நகைச்சுவைக்குப் பஞ்சமில்லை. அவற்றில் சொற்கள் தங்குதடையின்றி வந்துகொண்டிருக்கும். பிறமொழிச் சொற்கள் இவை, தூயதமிழ்ச்சொற்கள் இவை என்று சொற்களிற் சிலவற்றை வெறுத்தும் சிலவற்றை விரும்பியும் கருதுகிற வழக்கத்தினைக் கொண்டிலர். தன் கருத்தினைச் செவ்வனே வழங்கக்கூடிய தகுதி பிறமொழிச் சொல்லுக்கோ தமிழ்ச் சொல்லுக்கோ உண்டெனில் அதனைப் பயன்படுத்துவதற்குத் தயங்கார். இக்கூற்று இவர் எழுத்திற்கும் பொருந்தும். பிறமொழிச் சொற்கள் எவ்வாறு பொது மக்கள் நாவிலே நடமாடுகின்றனவோ அவ்வாறே இவர் அவற்றினைத் தம் பேச்சிலும் எழுத்திலும் வழங்குவர். இதனால் இவர்க்கு மொழிப்பற்றில்லை என்று நாம் கூறிவிடமுடியாது. இதனை இவர் எழுதிய 'கொச்சைத்தமிழ்' முதலிய கட்டுரை வாயிலாக அறியலாம்.

வித்துவான் கி. வா. ஜகந்நாதன் இவ்வாண்டு அறுபதாம் வயதினை அடைகிறார். இவர் மேன்மேலும் தம் பேச்சாலும் எழுத்தாலும் தமிழுக்குத் தொண்டாற்றுவதற்குப் பல்லாண்டுகள் எக்குறையுமின்றி வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவானாக.

பா மூலம்

இ. இரத்தினம்

பழுத்த தமிழ்ப் புலமையும் ஈசற்கே மாருத சிந்தையும் கொண்ட பெரியார் ஒருவரின் மணி விழாமலரில் தமிழால் என்ன 'எழுதலாம்' என்று நான் எண்ணி னேன். உருவுகண்டு பயிலாத ஒருவரை எண்ணில் அவர் உள்ளம்தான் நமக்குத் தோன்றும். எழுத்து மூலமும் பேச்சு மூல மும் உளந்தொடும் ஒருவரை நம் உள்ளத் தோடு பிணிப்பது அவர்தம் சிந்தனைச் செல்வமே. எனவே அவரைப் பற்றி நான் எண்ணும் போது என்னையுமறியாமல் ஓர் உண்மை என்முன் வந்து நின்றது. அதைப் பற்றியே இங்கு நான் எழுதுகிறேன்.

கி.வா.ஜ. அவர்களை எண்ணும்போது புலமையும் இறைப்பற்றும் தான் நம் உள் ளத்தில்தோன்றும். எனவே இவ்வீர் இயல் புகளுக்கும் இயல்பாக உள்ள பிணிப்பு என் உள்ளத்தில்பட்டது. அதுதான் பா மூலம்.

'பா' என்பதை ஆராய்ச்சிப் பொரு ளாக்கி அளவை முறையில் ஆராயும்போது அது பல் காலும் அசை, சீர், தளையாகி நிற்பதை நாம் காணலாம். பா என்பது என்ன ? கவிதை என்பது என்ன? இவற் றிடை நான் வேறுபாடு கூறவில்லை. 'பா' என்பதற்கு நேரியதோர் வரைவிலக்க ணம் கூற முடியுமா, இறைக்குக் கூற முடியுமா ? ஆயினும் அவை உள, அவை யா என நாம் அறிவோம். 'இவ்வண்ணத் தன் இவன் இறைவன்' என்று சொல் லொணுததுபோலவே பாவிற்கும் நாம் சொல்ல முடியாது.

உலகம் அளந்த தனைத்தும் அளப்பது பா. இன்னும் பிரெஞ்சுக் கவிஞர் மல்லாமே கூறியவாறு தூய பா என்பது மெய்ம்மை யான உலகை விட்டு வெறும் நீள்நினைவில் உலவுவது. இறைவன் "சொற்பதம் கடந்த தொல்லோன் உள்ளத்துணர்ச்சியில் கொள்ளவும் படா அன்". அத்தகைய ஒரு பொருளை நாடும்போதுதான் பா தேமருவும் இன்பச் சோலையாகின்றது.

சமய உண்மைகளை, இறைவனைப், பாடும் உரிமை பாவிற்குண்டு. உலகத்துப் பா எல்லாம் உண்மைப்பாவாஞல் பாவி னுள் உயர்ந்த பா என்று சொல்வதற் குரிய கட்டளை பாவின் பொருளில்தா னுண்டு. பா ஒன்றே மற்றை எல்லா வகைக் கலைகளிலும் கூடிய அளவில் இறை வனை அணுகவல்லது. ஏனெனில் இறைப் பற்றும் பாவலமும் 'உள்ளொளிக்கும் உள் ளொளி'யில் வெவ்வேறிடங்களில் தோன் றுகின்றன. ஆதிமூலம் இறையை நமக்குக் காட்டுவது. ஆனல் அடுத்து நிற்பதுதான் பாமூலம். 'குறியும் குணமும் கோலமும் இல்லாப்' பரம்பொருளுக்குக் குறி குணங் கொடுத்துக் கோலமும் அளிப்பது பா. 'தோடுடைய செவியன் உள்ளங்கவர் கள் வன். பாமூலத்தையும் வரலாற்றுண் மையையும் நாங்கள் இங்கு காண்கிறோம்.

சமயம், மானதக் காட்சி. அனுபவம் அனுபூதி இவற்ருேடியைந்தது. இவற்றை எவ்வகை உள்ளக் கிழியாலும் அடக்க முடியாது. இவற்றைச் சுட்டப் பா ஒன் றினல்தான் முடியும். சீலம் மிகுந்த சித் தத்தோர் கற்பனையுட் பிறப்பவன் இறை வன். பாடல் சொற்குறிக் கற்பனையில் பிறப்பது. எனவே சீலம் மிகுந்த சிந்தை யோராகினுல் சொற்குறிக்கற்பனை எவ்வள வில் உயரும்! 'எடுக்கும் பொருள் இன் தமிழ் செய்யுளாய் நடக்க வைக்க' வல் லது இறையருள் ஒன்றுதான். 'உள்ளம் கவர்ந்த கள்வனைத்' தோடு முதற் காட்டி

மதி காட்டி, நீறு காட்டி, விடைகாட்டி பின் கள்வனைக் காட்டுவது சம்பந்தன் சொற்குறிக் கற்பனை.

நல்ல பாவிற்கு நல்லிரத்தம் வேண்டும். உணர்வு வேண்டும். குறியிறந்ததோர் பரத்தை நாடினல் சொற்குறி யாப்பு எழும் உயர்வினைச் சொல்ல முடியுமோ?

இருபதாம் நூற்றுண்டில் ஒரு நாகரிகம் 'மதச்சார்பற்ற அரசு'. இது மனித வாழ்வில் சகல துறைகளிலும் பரவி, இசை, நடனம், ஓவியம், முதலியவற்றையும் குடிகொண்டுவிட்டது. இதனல் மதம் சாராதனவற்றைக் கேட்டல் சிந்தித்தல் வாழ்த்தலே பெருநெறி என்பதாயிற்று. இப்பொழுது 'பா' உலகும் அந்நெறியே செல்தல் உயர்வு என்று கருதுகிறது.

வானூர்தியை, ஒரு பாலத்தை, ஒரு ட்ராக்டரைப் பாடினல் பாடல் எவ்வாறிருக்கும்? நாட்டினைத்தான் பாடினலும் எவ்வளவில் இருக்கும்? எங்கள் கவிதைகளின் தரம் வீழ்வதேன்? யாப்போடு உத்தி பல சேர்த்துப் பின்னினலும் கம்பனைப்போல். சேக்கிழாரைப்போல், வள்ளுவனைப்போல் கவிதை ஓங்காததேன்? ஆழ்வார் நாயன்மாரைப்போல் உயராததேன்? விடை எளிது. எங்கள் மூலம் சமயஞ்சாராதது. சில பயன்தரு சிறுபொருள்சார்ந்தது. எங்கள் வாழ்வு, வகுத்து வகுத்தாய்ந்து வணிகவளம் வளர்க்க விரும்புவது. இந்நிலையில் பா வளருமா? வகுத்து வகுத்து ஆயும் விஞ்ஞானம் எம்மில் கலந்துறையும் உணர்வை விழுங்கிவிட்டது. எம்மைத் தனியர், தனியராக்கி, உயர்த்திப் பரிவற்றவராக்கி விட்டது. இதனல் நல்வாழ்வும் நற்பாவும் தோன்றுவதற்கியைந்த புத்தியும் உணர்வும் கலந்த அடிக்கனம் எம்மில் அற்றுப் போய் விட்டது.

இந்நிலையில் எங்கள் பாக்கள் சோகை பிடியாமலிருக்குமா? சிறு சிறு பொருள்களை நாம் பாடும்போது சிறு சிறு இன்பத்தை யல்லவோ எங்கள் பாக்கள் நாடுகின்றன.

தினைத்தனை உள்ளதோர்
பூவினில் தேன் உண்ணுதே
நினைத்தொறும் காண்தொறும்
பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும்பு உள்ளுக
ஆனந்தத் தேன் சொரியும்
குனிப்புடை யானுக்கே
சென்றூதாய் கோத்தும்பீ

(தும்பி-பா)

ஆத்திகத்தின் அபயக்குரல் கேட்கிறது!

செ. தனபாலசிங்கன் B. A. (Lond.)

திருநாவுக்கரசு சுவாமிகள்,

" ...வாழி திருத்தொண்டெனும்
வான்பயிர் தானோங்குவதற்குச்
சூழும் பெரு வேலியானீர்.. "

என்று சமணரை வெற்றி கொண்ட சம்பந்தரைப் பாராட்டுகிறார். இப்பாடலை அப்படியே திரு. கி. வா. ஜ. அவர்களின் மேல் பாடி மகிழ ஆசைப்படுகிறோம். சமுதாயத்தில் ஒவ்வொரு துறையும் ஒரு தடுமாற்றமான கால கட்டத்தைக் கடக்க வேண்டிய சூழ்நிலையில் மிதந்துகொண்டிருக்கிறது. கலை, மொழி, அரசியல், சமயம் முதலிய எத்துறையை நோக்கினாலும் இந்நிலையைப் பார்க்கலாம். இந்தத்தடுமாற்றமான நிலையிலே-சிறப்பாகச் சொன்னால் - இந்தப் போராட்டச் சூழ்நிலையிலே இருட்பாதையிலும் இடர்ப்பாதையிலும் வாழ்வு சென்றுகொண்டிருக்கிறது. ஒன்றை அழிக்கும் முயற்சியை விட ஒன்றை உருவாக்கும் முயற்சி அதிகப் பயனுடையது. வரவேற்கத்தக்கது. மக்கள் அறிவை எந்த நெறியுடன் வளர்க்க முனைகிறார்களோ அவ்வாறுதான் அவர்கள் அறிவுவளரும்; அதை ஒட்டியே அவர்கள் வாழ்வும் அமையும். இன்று ஒரு சிலர் மக்களின் பலவீனத்தைப் பயன்படுத்திக்கொண்டு திசை தவறிய வாழ்வுக்குச் சமுதாயத்தை இட்டுச் செல்கிறார்கள். அவர்கள் பின்னால் மக்கள் கூட்டமும் மந்தைபோல் திரள்கிறது. சமய உணர்வைப் பெருக்கி மக்களுக்கு வழி காட்ட இன்று மன்னர்களும் இல்லை. சமய நெறி இன்று நேற்றுத் தோன்றியது என்று எண்ணிவிடக்கூடாது. சமயக் கொள்கை அறிவாலும் உணர்வாலும் குறைவுடையதாயிருக்கின்ற மனித இனத்தை நிறைவுடையதாக்கத் தோன்றிய ஒன்றாகும். அன்பே சிவம் என்ற தத்துவம், அருள் வழியே பொது உடைமையைப் பரப்பும் தத்துவம். தமிழரின் சமய நெறி உலகப் பொது நெறியாக விளங்கக் கூடிய தகுதிப்பாடுடையது. வாழ்வியலமையமாகவைத்தே சமய நெறி ஒழுக்க நெறிகளைப் போதிக்கின்றது. புற வாழ்வு வளமாக இல்லாவிட்டால் அக வாழ்வு அழிந்தே போகும். நல்ல பாதை தென்படும் போது வழிநடப்போர்க்கும் நடத்திச் செல்வோர்க்கும் கருத்து வேறுபாடுகருத்துப் போராட்டமாக மாறி அமையும். அருளறிவு இல்லாமல் பொருளறிவு பெருகிப் பயன் இல்லை. அன்புவளராமல் அறிவு வளர்ந்தும் பயனில்லை.

இக்காலத்தின் போக்கை அறிந்து கடமையை உணர்ந்து மக்கள் மத்தியிலே வந்திருக்கிறார்கள் திரு. கி. வா. ஜ அவர்கள். செந்தமிழ் ஆத்திக உலகில் திரு. கி. வா ஜ. அவர்களின் நுழைவு ஒரு திருப்பத்தையே ஏற்படுத்திவிட்டது. சமயத்தைச் சமுதாயத்தோடு இணைத்துச் சிந்திக்கச் செய்த சிறப்பு கி. வா. ஜ. வுக்குரியது. சமுதாய வளர்ச்சியைச் சாகடிப்பது சமயம் என்று பறைசாற்றிய பகுத்தறிவாளர்களுக்கும் சமயத்தில் பாசத்தை உண்டாக்கிய பெருமையும் அவருடையது தானே! ஏழாம் நூற்றுண்டிலே செந்தமிழ்ச் சைவ உலகைச் சமண இருள் கவ்வியது. இன்று நாத்திகம் என்னும் பேரிருள் நம்மை நாடி வந்துகொண்டிருக்கின்றது. ஆத்திகத்தின் பேரினால் அபயக்குரல் கொடுக்கிறார் நம்முடைய கி.வா.ஜ. அவர்கள்.

சைவத்திருமுறைகள் பன்னிரண்டு. முதல் மூன்றும் திருஞான சம்பந்த மூர்த்தி

நாயனுர் இயற்றியவை. நான்கு முதல் ஆருவது திருமுறைகள் வரையில் உள்ளவை திருநாவுக்கரசு நாயனுர் இயற்றியவை. ஏழாவது திருமுறை சுந்தரமூர்த்தி நாயனுர் அருளியது. மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாந்திருமுறை. திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஒன்பதாம் திருமுறை. திருமூலர் திருமந்திரம் பத்தாந் திருமுறை. ஆலவாய் இறைவன் திருமுகப்பாசுரம் முதல் காரைக்காலம்மையார், சேரமான் பெருமான் நாயனுர் முதலிய பலர் பாடிய நூல்களின் தொகுதி பதினேராம் திருமுறை. பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறையாகும். திருமுறைப்பாடல்கள் தமிழர் பெற்ற அரும் பெருஞ் செல்வம். ஆனுல் பன்னிரண்டு திருமுறை முழுவதையும் படித்துப் பொருளுணர்ந்து இன்புறல் மிக மிக அருமையான காரியம். கி. வா. ஜ. அவர்கள் எழுதிய திருமுறை மலர்களைப் படிக்கும்போது திருமுறைகளின் தீந்தமிழ்ச் சுவையையும் தெய்வீகப் பண்பையும் நாம் அறிகின்ருேம். முருகனுடைய துதியாக இருப்பதோடு கந்தரலங்காரம் வாழும் வகையையும் நமக்குச் சொல்கிறது. நம்முடைய சமயக் கருத்துக்கள் பலவற்றை வாழும் வகைக்கு ஏற்பக் கூறுகின்றது. பல்வேறு துறைகளில் வாழ்பவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருமுறை எளிதாக இருக்கும் வண்ணம் பல பல முறைகளைப் புலப்படுத்துகிறது. இம்மா பெரும் தமிழர் கருவூலத்தைத் திரு. கி. வா. ஜ. அவர்கள் கந்தரலங்காரச் சொற்பொழிவுகள் வாயிலாகக் காட்டுகிருர்கள். முருகப்பெருமானுடைய வற்ருத புகழையும் புராண வரலாற்றின் உட்கிடையையும் உண்முகக் காட்சிக்குரியவழிகளையும் சமய நெறியில் உண்டாகும் அநுபவத்தையும் கட்டுரைகள் வாய்திறந்து பேசுகின்றன. ஒவ்வோர் அலங்காரப் பாட்டின் பொருளும் ஒவ்வொரு கட்டுரையாக விரிந்து மலர்கின்றது.

சங்க நூல்கள் பொருளாழமுடையன. அதனுல் அவ்வாழங்கண்டு அஞ்சுவோர் பலர். 'சங்க நூற் காட்சிகள்' என்ற வரிசையினுல் அவர்கள் அச்சம் போக்க வந்தவர் கி. வா. ஜ. பழைய அருமையைப் புதிய எளிமையாக்குந்திறன் அவர் பேனுவுக்கு உண்டு. அவர் பேச்சுக்கும் உண்டு. சங்க நூல்களில் உள்ள அழகை அனுபவிக்க அதில் உள்ள கருத்தை முதலில் எடுத்துக் காட்டி சொற்களையும் இடையிடையே புகுத்தி எழுதினுல் ஒருவாறு கவிகளை உணரலாம். அந்த முறையில் சங்க நூல்களை நாம் படிக்க வழி தேடித் தந்தார்கள் கி. வா. ஜ. அவர்கள். தமிழ்ப் புலவர்கள் தம்முடைய கவித்திறமையினுலே செய்த செயல்கள் எழுத்திலடங்கா அந்தச் செயல்களுக்கு உரம் தந்தது புலவர்களிடத்திலே இருந்த தமிழ். இவ்வரலாறுகளில் வரும் நிகழ்ச்சிகள் எல்லாம் தமிழின் ஆற்றலை வெளிப்படுத்துவன. இந்த அருமையையும் பெருமையையும், காட்டித்தர, தாம் எழுதிய ஒரு நூலுக்கே. கி. வா. ஜ. 'எல்லாம் தமிழ்' எனப் பெயரிட்ட பெருமையை நாம் என்னென்போம். வில்லுக்குச் சேரன் சொல்லுக்குக் கீரன் என்பது பழமொழி. இந்தக் கீரன் சங்க நூல்களில் முதன்மை பெற்ற திருமுருகாற்றுப்படையை நமக்குக் கொடுத்தார். இத்திருமுருகாற்றுப்படையை 'வழிகாட்டி' ஆக்கினுர் நம்முடைய கி. வா. ஜ. அவர்கள். திருமுருகாற்றுப்படைக்கு இத்தகைய எளிய உரை இதுகாறும் வெளிவரவில்லை! கவிஞர்கள் மனங்கனிந்து பாடும் பாடல்கள் ஆழ்ந்தபொருளுடன் விளங்குகின்றன. அவற்றில் மனத்தால் ஒன்றிப்போனுல் எங்கெங்கோ செல்லலாம் பாடலாகிய வாசலின் வழியே நுழைந்து பல அழகிய காட்சிகளைக் காணலாம். செறிவும் உணர்ச்சியும் மிகுந்த அப்பாடல்களைப் பல மணி நேரம் பாடிப்பாடி இன்புறலாம். பொருள் வளத்தைச் சிந்தித்து சிந்தித்து மகிழலாம். இந்தச் சிந்தனை ஊற்றிலே எழுந்தன அவர் படைப்புக்கள்! சுவாமி விவேகானந்தரின் நூற்ருண்டு விழா வெளியீடாகத் திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பைத் தமிழுலகம் பெற்றிருக்கின்றது. இது தேடக்கிடையாத மாணிக்கம். திரு. கி. வா. ஜ. அவர்கள் படைப்புக்கள் நூற்

றுக்கதிகமானவை. அவற்றை எல்லாம் எழுத முற்பட்டால் நீண்டோடும் இக்கட்டுரையை நிறுத்தவே முடியாது!

இராமேஸ்வரக் கடற்கரையில் நின்று கொண்டு ஈழத்தின் இரு பெருங்கோயில்கள் மேல் பாடினார் நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தர். அப்பதிகங்கள் கடல் கடந்த தமிழருக்கு-ஈழத் தமிழ்ப்பெருமக்களுக்கு-அப் பெருமான் அளித்த அன்புப் பரிசு. திரு. கி. வா. ஜ. அவர்கள் ஈழத்திரு நாட்டிலே உரும்பராயிலே கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் சிதம்பரசுப்பிரமணியன் மேல் பத்துப் பிரபந்தங்களையே பாடிவிட்டார்கள். இத் தெய்வீக நூலுக்கு அவர் எழுதிய முன்னுரையில் ஒரு பகுதியை இங்கே எழுதாமல் இருக்க முடியாது. ''சென்ற டிசம்பர் மாதம் (1964) எனக்கு வெப்பு நோய் உண்டாயிற்று. மருத்துவர்கள் 'டைபாயிடு என்று கூறினார்கள். உணவுக்கட்டுப்பாடு பேச்சுக் கட்டுப்பாடு நடைபாடுதலுக்குக் கட்டுப்பாடு யாவும் இருந்தன. ஆனால் என் மனத்தில் எண்ணங்கள் தோன்றுவதைக் கட்டுப்படுத்தவில்லை. அது அவர்களால் முடியாது. ஏன் என்னாலும் முடியாது தானே! படுக்கையில் கிடந்தபடியே பல தலங்களுக்கும் சென்று வந்தேன். மனம் என்றும் இல்லாத வேகத்தில் சிறகு கட்டிப்பறந்தது. அருமையான கற்பனை ஊற்றுப் போல் எழுந்தது......... பேனா விரைவாக ஓடியது. நூறு இருநூறு என்று பாடல்கள் வந்துகொண்டே இருந்தன. சில நாள் இருநூறு முந்நூறு என்று கூடப் பாடினேன். ஒரு வாரத்தில் ஆயிரம் பாடல்கள் பாடி முடித்து விட்டேன்.... நோய்வாய்ப்பட்ட காலத்திலும் முருகனை நினைப்பதற்கு இந்தப் படைப்பு ஒரு காரணமாக உதவியது. அவ்வளவுதான் எனக்குச் சொல்லத் தோன்றுகின்றது. மற்றவை இவற்றைப் படிக்கிறவர்களின் உணர்ச்சியைக்கொண்டு தெரிந்துகொள்ளவேண்டியவை.''

திரு. கி. வா. ஜ. வின் முருகபக்திக்கு இதைவிட வேறு என்ன சொல்ல இருக்கிறது! சிதம்பரசுப்பிரமணியன் புகழ்க் கதம்பமாம் அவர் நூலில் இதோ ஒரு பாடல்!

அமைகின்ற ஆணவத்தில் அழுந்துமுயிர் நின்னன்பிற்
சமைகின்ற நெறிபழகிச்சாரின் அதுசிவமேயாம்
சிமை ஒன்றும் உரும்பைநகர்ச் சிதம்பர சுப்பிரமணியா
இமையஞ்சேர் காக்கையும் பொன் ஆகுமென இயம்புவரே

இந்நூல் இப்பெரியாரது மணிவிழாக் காணும் நல்லாண்டிலே வெளிவருவதும் முருகன் திருவருளே. தாய் நாட்டுப்பெரியார் சேய்நாட்டுக்கு அளிக்கின்ற சிவப் புதையலுக்கு நாம் என்ன கைம்மாறு செய்யமுடியும்? சிதம்பரசுப்பிரமணியனே அருள்புரியவேண்டும்!

ஆலயமும் ஆண்டவன் வழிபாடும் நமக்கு வேண்டும். மனித சமுதாயத்தின் வளர்ச்சிக்குச் சமயமும் வேண்டாம், கடவுளும் வேண்டாம் என்ற கொள்கையினால் மனிதனின் அகவாழ்வு ஆட்டம் கொடுக்கும் என்பதை இன்று மக்கள் உணர்கிறார்கள். சமயநெறி மக்கள் மத்தியில் நேரடியாக வந்து செயல்படுகிறது, செயல்பட்டுத்தான் ஆகவேண்டும். வேறு வழியே இல்லை. சமுதாயக் கட்டுக்கோப்பு சமயத்தினால்தான் வளர்ந்து வந்திருக்கிறது. இதையாரும் மறுக்க முடியாது! சமயத்துறையில் சாதிபேசும் சம்பிரதாய வலையம் தகர்த்து எறியப்படவேண்டும், ஆன்மநேய ஒருமைப்பாடு அகில உலகத்திலும் பரவவேண்டும் என்ற இன்னோரன்ன கருத்துக் கருவூலங்களுடன் தெளிவான பாதையில் ஏறுநடை போடுகிறார் திரு.கி. வா. ஜ. அவர்கள். நாத்திகம் பரவிவரும் இந்நாட்களில் அவருடைய ஆத்திகத்தின் அபயக்குரல் கேட்கிறது! ஈழ மணித்திருநாடு சிறப்பாகச் சிதம்பர சுப்பிரமணியன் கோயில் கொண்ட சீர்மிகு உரும்பராய் இருகை நீட்டி அழைத்து வாழ்க, வாழ்க! என்று அவரை வாழ்த்துகிறது! தமிழ்த்திரு நாட்டின் தவப்பெரும் புதல்வர் திரு. கி. வா. ஜ. அவர்களால் நாமும் நாடும் வளம்பெற வள்ளிக்கு வாய்த்தவனை வாழ்த்துகிறோம்.

"பாட்டிபடை புறப்பட்டுவிட்டது" பாருங்கள்!

கனக. செந்திநாதன்

பாட்டிகள்! ஆமாம், பஞ்சுபோன்ற தலையோடும், ஒட்டகத்தின் முதுகுபோல் வளைந்த கூனலோடும், ஊன்றிச்செல்லும் தடியோடும், சதா 'தொண, தொண'க்கும் பேச்சோடும் இருக்கும் பாட்டிகள்தாம்! உங்களைக்காண, உங்களுக்குத் தங்கள் குறைகளைக்கூற, பெருமைகளைப் பேசப் புறப்பட்டுவிட்டார்கள். சற்றே வழிவிட்டு நில்லுங்கள்! புதுமைத்தமிழிலே அவர்கள் பேசுவதைக் கேட்டு மகிழுங்கள்! 'குமரிப் பெண்களின் உள்ளத்திலே குடியிருக்க' ஆசைப்படும் நீங்கள் பாட்டிகளின் பேச்சைக் கேட்கமாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும். ஆனாலும் அனுபவத்தில் முதிர்ந்த வாழ்க்கையில் அடிபட்ட அவர்கள் வார்த்தைகள் வேறுவேறாக பலவர்ணக்கோலங்காட்டி நிற்கும். நமக்கு உபயோகமாகும். வெறும் காதல் வர்ணனைகளாக இராது என்பது உண்மை. ஆனால் கருத்துள்ளவைகளாக இருக்கும் என்பது நிச்சயம்.

முதலில் பலபல பாட்டிகளைப் பலப்பல கவிஞர்கள் தங்கள் கவிதைகளிலே படம் பிடித்துக் காட்டுகிறார்கள். அந்தப் 'பாட்டி'ப் படைப்புகளிலேதான் எவ்வளவு ஒற்றுமை! எவ்வளவு வேற்றுமை! "நீட்டி விட்ட காலாள், நில்லாதாடும் தலையாள்- கோட்டமான முதுகாள், குழறிப்பேசும் பேச்சாள்" எனக் கவிஞர் வாணிதாசன் பாட்டியின் புறஉருவத்தைக் காட்டிவிட்டு அவள் செயலில் ஒன்றை விபரிக்கிறார்.

"பாக்கிடிப்பாள் பாட்டி
பாய்மேல் காலை நீட்டி
கையும் தலையும் ஆட்டி"

" இடித்த வெற்றிலை எடுப்பாள்
இட்டு வாயில் களிப்பாள்
எச்சில் துப்பித் துடைப்பாள்."

"பல்லில் லாத வாயும்
பாக்கு வெற்றிலை மேயும்
கல்லில் இடிப்பும் ஓயும்"

ஆமாம், பாட்டிமார் இருக்கும் வீட்டிலே பாக்கிடிக்கும் ஓசை கேட்கத்தான் செய்யும். ஆனால் அதோடு மாத்திரம் நின்று விடுகிறவளா அவள்? இல்லவே இல்லை. கதைகள், விடுகதைகள், தாலாட்டுப்பாடல்கள் சொல்லாதபாட்டியும் உண்டா? இதோ குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அந்தக்காட்சியை அழகாகப் பாடுகிறார்:-

"பாட்டி எங்கள் பாட்டி — எல்லாப்
பல்லும் போன பாட்டி
கேட்கக் கேட்கக் கதைகள் - இன்னும்
கேட்கச் சொல்லும் பாட்டி
கடினமான பண்டம் — அதைக்
கடிக்கத் தெரியாப்பாட்டி
படிப்பே இல்லாப் பாட்டி — ஆனால்
பலவும் தெரிந்த பாட்டி
விடுகதைகள் போட்டே — என்னை
விழிக்க வைக்கும் பாட்டி
குடுகுடு வயசாச்சு — கையில்
கோல் பிடிக்கும் பாட்டி"

அழ. வள்ளியப்பாவைப் போலவும், கவிஞர் வாணிதாசனைப் போலவும் தான் நாக. முத்தையா அவர்களும் "பாட்டி எங்கள் பாட்டி" என்ற பாடலிலே, பாக்கிடிப்பதையும், கதைகள் சொல்வதையும்

சாட்டி முடிக்கிறார். கவிஞர் தமிழ்முடி அவர்கள் மற்றவர்கள் போன பாதையிலே போனாலும் முத்துப்பாட்டி செய்தபிட்டை நமக்கெல்லாம் காட்டி வாயூற வைக்கிறார்.

''முத்துப்பாட்டி செய்த பிட்டு
மூங்கில் குழாயில் வெந்த பிட்டு
மதுரைச் சொக்கர் மண்ணு சுமந்து
வாங்கி வாங்கித் தின்ற பிட்டு''

என, செம்மனச் செல்வியின் கதையை அழகாக ஞாபகப்படுத்தும் பாடல் குழந்தைகளுக்கு ஏற்றதுதான். இப்படி நுங்கு விற்கும் பாட்டியைப் பாரதிதாசனும் அழுகின்ற பாட்டியை அ. கி. பரந்தாமனாரும் 'சீடை உனக்கு வடை எனக்கு' என்று கூறும் பாட்டியை இன்பவண்ணனும் காட்டி உள்ளார்கள். ஆஹா, குழந்தை இலக்கியத்திலே 'பாட்டிகள்' ஆக்கிரமித்திருக்கும் வகையை விவரிக்கப்புகுந்தால்....... ஒரு கட்டுரையா? பல கட்டுகளல்லவா எழுதவேண்டும். ஈழத்துக் கவிஞர் க. வேந்தனார் காட்டும் பாட்டி இவற்றை எல்லாம் விட ஒரு படி விஞ்சியே நிற்கிறாள். ஈழத்தின் பண்பாட்டைப் பிரதிபலிக்கிறாள். 'காக்கைக்கும் தன்குஞ்சு பொன் குஞ்சு' என்ற கருத்தில் எழுந்த அபிப்பிராயமல்ல இது. நாவலர் பிறந்த யாழ்ப்பாணம், கோவில்-சமயம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டது. எனவே மற்றக் கவிஞர்கள் காட்டாத ஒரு காட்சியைக் கவிஞர் காட்டுகிறார்.

கோவிலுக்குப் போகும் போது
கூட்டிச் செல்லும் பாட்டி
கும்பிடு நீ தம்பி என்று
குனிந்து சொல்லும் பாட்டி

தங்களை வீணாகத் தொந்தரவு செய்வார்களே என்ற எண்ணத்தில் தாய் நாலைந்து வயசுச் சிறுவர்களைக் கோவிலுக்குக் கூட்டிச் செல்வதில்லை. தந்தைக்கு எவ்வளவோ வேலை. பையனை அரவணைத்துக் கோவிலுக்குக் கூட்டிச்செல்லும்ஒரே ஒரு ஆத்மா பாட்டிதான். கூட்டிச் சென்றாலும் அப்பால் இப்பால் நகர விடுகிறாளா? வேடிக்கை பார்க்க விடுகிறாளா? நேரே மூலஸ்தானம் தெரியும் இடம் வரைக்கும் கொண்டு போகிறாள். தீபாராதனை நடைபெறும் போது 'அப்பனே, முருகா' என்று தான் கும்பிடுவதோடு நின்று விடாமல், 'கும்பிடு நீ தம்பி' என்று பழக்கம் கூடச் செய்து வைக்கிறாளே. இந்த காட்சியை அவதானித்து, குழந்தைகள் அனுபவிக்கும் விதமாகப் பாடியுள்ள வித்துவானை எவ்வளவு பாராட்டினாலும் தகும். இதுமாத்திரமா? இன்னும் ஒரு காட்சியைப் பாருங்கள்:-

''அப்பா அம்மா அடிக்க வந்தால்
அலறித் துடிக்கும் பாட்டி
தப்பாய் நானும் பிழைகள் செய்தால்
தானே புலம்பும் பாட்டி''

பேரன் பேர்த்திகள் பிழைகள் செய்தால் தனக்குள் தானே புலம்பும் பாட்டியைக் கண்டீர்களா? போகட்டும். இவள் எங்கள் வீட்டிலும் இருக்கிறாள், உங்கள் வீட்டிலும் இருக்கிறாள். இந்தப் பாட்டியைவிட நிலாவில் ஒரு பாட்டி இருக்கிறாளே. 'ஔவையார்க் கிழவி' என்று எந்தக் குழந்தையும் சொல்லுமே. அந்தப் பாட்டியைக் கூட ஒரு கவிஞர் பாடியிருக்கிறார். நல்ல கற்பனை வளத்துடன் பாடியிருக்கிறார். இன்பவண்ணன் என்ற அந்தக் கவிஞரது பாடலையும் கேளுங்கள்.

''கூனற் கிழவி கோலை ஏந்தி
வானம் பார்க்கச் சென்றாள்—அவள்
வானம் பார்க்கச் சென்றாள்.

வானக் கிழவன் அவளைத்தூக்கி
நிலவில் வைத்து நின்றான்—அவன்
நிலவில் வைத்து நின்றான்

நேரம் போக ராட்டை சுற்றி
நூலை நூற்கக் கற்றாள்—அவள்
நூலை நூற்கக் கற்றாள்

பாராய் வானில் நிலவின்மீதே
பஞ்சு நூற்கக் கண்டாய்—பாட்டி
பஞ்சு நூற்கக் கண்டாய்''

அவள் நூற்க எடுத்துக் கொண்ட பஞ்சு தான் மேகங்களோ? என்று நாம் வியப்

படைகிறோம். மேக மண்டலத்தில் ஒரு கிழவி நூற்கும் வேலையில் ஈடுபட்டிருப்பதைக் கண்டு வியப்படைந்து நாம் திரும்பிப் பார்த்தால் 'மேக மண்டலம்' என்ற கவிதை நூலில் ஒரு பாட்டியைக் காட்டி நம் கதா நாயகர் - கலாநாயகர், - கி. வா ஜ. - அவர்கள் இறும்பூ தெய்தச் செய்கிறார்.

'கி. வா ஜ.' காட்டும் பாட்டியைச் சந்திக்க முன் நன்றாகக் கதைக்கக்கூடிய இரண்டு பாட்டிமாரைச் சந்தித்தேயாகவேண்டும். அல்லது அவர் காட்டும் பாட்டியின் விசேடம் - தனித் தன்மை எங்களுக்குத் தெரியாமற்போய்விடும் ஒரு கிழவி, சதா இருமிக்கொண்டும், சிறு உரலில் வெற்றிலை பாக்கைப் போட்டு இடித்துக் கொண்டும் பொக்கைவாயை அசைபோட்டுக்கொண்டும் இருப்பாள். அவள் பேரக் குழந்தைகளை அதட்டுவாள். அவர்களுக்குச் சிரிப்புக் காட்டுவாள்: கதை சொல்வாள். அவளிடம், பாட்டி எப்படிச் சுகம்? என்று கேட்டேன். அவள் தன் மெலிந்த கால்களை உருவியபடியே தன் பாஷையிலே அளக்கத் தொடங்கிவிட்டாள்.

''கண்கள் இரண்டும் தெரியவில்லை, இரு
கைகளும் கண்களாய் ஆச்சுதப்பா
திண்ணையை விட்டு நகர்வதற்கும் எந்தன்
தேகத்தில் சத்துக் கிடையாது''
''மேனி சுருங்கி மெலிந்து வெளுத்தது
மெத்தவும் காய்ந்த சருகாச்சு
கூனிக் குறுகிக் குலுங்கிப் பழுத்துடல்
கூடாயிருக்குது கண்டிடுவாய்''

என்பது அவள் பதில். பாட்டி தனக்குத் தெரிந்த வெற்றிலைச் சருகை, உடல்தளர்ந்த நிலைக்கு உவமானமாகக் காட்டியதும், வேல்விழி, மான்விழி என்றெல்லாம் ஒரு காலத்தில் வர்ணிக்கப்பட்ட விழிகள் இப்போது தனக்கு உபயோகமற்றுவிட, கைகளே தடியை ஊன்றி வழிகாட்டுகின்றன என்று சொல்லும் பரிதாப வார்த்தைகளும், ''கூனிக் குறுகிக் குலுங்கிப் பழுத்துடல் கூடாயிருக்குது'' என்ற தத்ரூப வர்ணனையும், இந்த வயதிலும் எல்லாரோடும் பேச ஆசைதான், என் செய்வது? ''திண்ணையைவிட்டு நகர்வதற்கு எந்தன் தேகத்தில் சத்துக் கிடையாது'' (கிழவிப் பாஷையில் பலம் என்ற சொல் சத்து என மாறிக் கவிதையையே ஒருபடி மேலெழுப்புகிறது.) என ஏங்கும் ஏக்கமும் அருமையாக இருக்கின்றன.

அப்போது வீட்டினுள் இருந்து ஒரு 'குட்டிப் படை' - பத்துப் பன்னிரண்டு குழந்தைகள் - வெளிப்பட்டது. அத்தனையும் அவள் பேரக்குழந்தைகள். குழந்தைகள் சும்மாபோகவில்லை திண்ணையில் இருக்கும் பாட்டியைக் கண்டவுடன் கேலியாகப் பாடத் தொடங்கிவிட்டார்கள்.

''கூனற் கிழவியைப் பாருங்கடோ' என்று
கூக்குரல் செய்கிறார் குட்டிப்படை
'தேன் குழல் முறுக்குத் - தித்திக்கும் கரும்பு
தின்றிடு இந்தா' எனச் சொல்லுவார்.
'பாட்டி நடையிது பாரு' மென்று சிலர்
பாவனை பண்ணி நடப்பார்கள்
'கேட்டியடா அவள் கீச்சுக் குரல்' என்று
கேலியாகப் பேசிக் காட்டிடுவார்''

குழந்தைகளின் பேச்சையும் செயலையும் கண்ட எனக்குப் பெருங்கோபமே வந்துவிட்டது. பாட்டி வைத்திருந்த தடியை எடுத்துக்கொண்டு அவர்களைத் துரத்தினேன். பாட்டி என் செயலைக் கண்டு சிரித்தாள். ஆம். பலமாகவே சிரித்தாள் ஏன் பாட்டி சிரிக்கிறாய்? என்ற என் வினவுக்கு ''உன் செய்கையைப் பார்த்துத்தான்'' என்ற அவளது விடை என்னைத் தூக்கிவாரிப்போட்டது. பாட்டி பின்வருமாறு சொன்னாள் :-

''இந்த மாதிரிக் குதூகல மாகவே
ஏளனம் செய்கிறார் சின்னவர்கள்
பந்துபோல் துள்ளிடும் பாலர்கள் சொல்லிந்தப்
பாட்டிக் கமுதாய் இருக்குதப்பா''
என்னைத் தேடிவர யாரே இருக்கிறார்
இந்தக் குழந்தைகள் இல்லாவிட்டால்?
சின்னஞ் சிறுசுகள் சூழ்ந்து விளையாடச்
செய்திருக்க வேணும் நல்லதவம்''

நான் வாயடைத்து நின்றேன். ''என்னைத் தேடிவர யாரே இருக்கிறார்?'' என்ற பாட்டியின் வினா உள்ளத்தை உருக்கிற்று 'அற்ற

குளத்தில் அறு நீர்ப் பறவைபோல்' என்ற பாடல் என் நெஞ்சில் நிழலாடி யது. 'சின்னஞ் சிறுசுகள் சேர்ந்துவிளை யாட' என்ற தொடர், 'மக்கள் மெய் தீண்டல்' 'குழலினிது யாழினிது' என்ற குறட்பாக்களையும் 'பொன்னுடையரேனும் புகழுடையரேனும்' 'சொன்ன கலையின் துறையனைத்தும்' என்ற நளவெண்பாப் பாடல்களையும் நினைவுக்குக் கொண்டுவந் தது. இந்த அருமையான பாடலைப் பாடி, பாட்டியைக் காட்டிய சாமிசரணனை வாழ்த்தி விட்டு அப்பால் நகர்ந்தேன்.

அடுத்த பாட்டிதம் குறைகளைச் சொல்லிப் பிலாக்கணம் பாடுகிருள். அவளிடம் நமக்கு இரக்கந்தான் ஏற்படுகிறது. ''தாயுமிலைத் தந்தையிலைத் தமருமில்லைத் தமியேனைப் பேயினுடன் நின்ருலும் பிரித்தறிய ஒண்ணுது. தீயதென திலம்பாடு'' எனப் பிட்டு விற்ற செம்மனச் செல்வி மதுரையிலுள்ள சொக்க நாதரிடம் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டாளே. அது போல இந்தப் பாட்டியும் கூறுகிருள்

''மகளில்லை மகனில்லை மாதா உள்ளேன்
மதியில்லை ரவியில்லை வான முண்டு
இகழில்லைப் புகழில்லை இரப்பதுண்டு
எளியவள்காண் இவ்வுலகில் என்ன
செய்வேன்''

''கதியில்லை நிதியில்லை கவலையுண்டு
கதை சொல்வேன் குழந்தைகளே
கருத்தாய்க் கேட்பீர்
புதிதான குருத்தோலை பழுப்பைக் கண்டு
புன்னகைக்கும் பின்னதுவும் கனவாய்ப்
போகும்''

கவிஞர் கம்பதாசன் காட்டும் பாட்டி, ''குருத்தோலைகளே, காவோலைகளைக் கண்டு புன்னகை செய்யாதீர்கள்; உங்கள் கதியும் இப்படியாகும்'' என்று எச்சரிக்கை செய்கிருள்.

மேகமண்டலம் என்ற கவிதைத் தொகுதியில் அறிஞர் கி. வா. ஜ. அவர்கள் காட்டும்பாட்டி சுறு சுறுப்பானவள்; பலதும் தெரிந்தவள்; முக்கியமாக நாட்டு வைத்தியத்தில் கைதேர்ந்தவள்

''பாட்டிதலைவலி என்று சொன்னேன், அவள்
'பட்' டென்று சுக்கை அரைத்துப் போட்டாள்
கேட்ட வியாதிக்குக் கீரை கிழங்கு
கிராம்பு கடுக்காய் மருந்துரைப்பாள்
வீட்டில் எவருக்குக் காய்ச்ச லானுலும்
விடிவதற்குள் அவள் சொஸ்தம்செய்வாள்
நாட்டு மருந்துக்குப் புத்தகம் ஏதுக்கு?
நான் சொல்லும் சரக்கினைக்
கேட்டிடென்பாள்''

தலைவலிக்குச் சுக்கை அரைத்துப் போட்டும் நாட்டு மருந்துக்குப் புத்தகம் ஏதுக்கு என்று நகைத்தும் வைத்தியம் செய்யும் பாட்டியை, மற்றைய பாட்டிகளைவிட தனிச்சித்திரமாகவே நாம் பார்க்கிருேம். இந்தப் பாட்டி ஒரு வீட்டுக்கு மாத்திரம் உரியவளல்லள். ஊருக்குப் பொது. பொதுவுடைமை அவள், 'மருத்துவ அம்மா' என்று விளம்பரப் பலகையைத் தூக்கி விட்டு மேனி மினுக்கித்திரியும் சிங்காரிகள் வருவதற்கு எத்தனையோ வருடங்களுக்கு முந்திச் செய்த சேவையைப்பற்றி - பொதுத் தொண்டைப் பற்றி - கவிஞர் பாடுகிருர்:-

''எங்கள் கிராமத்தில் முப்பது வருஷமாய்
எத்தனையோ பிள்ளைப் பேறுகளைச்
சங்கட மில்லாமல் விளக்கெண்ணெய்
பூண்டினுல்
சாமர்த்தியமாகச் செய்துவிட்டாள்''

மருத்துவம், சோதிடம் இவற்றில் மட்டுந்தானு இந்தப் பாட்டி கெட்டிக்காரி? இல்லவேயில்லை. நிழலுக்குத்தானும் பள்ளிக்கூடத்தில் ஒதுங்காத இவள் கணக்கிலே புலி. காகிதமும் பென்சிலும் இல்லாமலே கைவிரல்களிற் கூட்டிப் பெருக்கும் இவளது சாமர்த்தியத்துக்கு ஈடேது? இணையேது?

மருத்துவம், சோதிடம், வாய்க்கணக்கு இவைகள் மாத்திரம்தானு பாட்டிக்குரிய வேலைகள்? கதை சொல்லத் தெரியாத பாட்டி இருந்தென்ன? இல்லாவிட்டாலென்ன? கதை சொல்லும் கலையில் இந்தப்பாட்டி எப்படிப்பட்டவள்? கவிஞர் அருமையாகச் சொல்கிருர்:-

,,பாட்டி! பாட்டி!! ஓர் கதை சொல்லமாட்டயா?
படுத்துக் கொள்வோம்'' என்று சொல்லி
விட்டால்
நீட்டி இனித்த சுவைக்கதை எத்தனை
நேரஞ் சொல்வாள் அதில் ஈடுபட்டால்
வீட்டில் இருக்கும் எங்கள் மனம் காட்டிலும்
விண்ணிலும் ஓடிவிளையாடும்
நாட்டிலில்லாத புத்தம் புதுக் கற்பனை
நனவினிலே கனவாகி விடும்''

பாட்டிக்குக் கதை சொல்லப் புதுப்புது உத்திமுறைகள் தெரியாது என்பதுண்மை. ஆனாலும் அவள் 'ஒரே ஒரு ஊரில் ஒரே ஒரு ராசா இருந்தார். அவர் வேட்டையாடக் காட்டுக்குச் சென்றார்' என்று கதை சொல்ல ஆரம்பித்ததும் பேரக்குழந்தை 'உம்' போட்டபடியே மாடமாளிகைகளையும் காட்டு விலங்குகளையும் கற்பனையிலே கண்டு இரசிக்கும் காட்சியை, 'வீட்டிலிருக்கும் எங்கள் மனம் காட்டிலும் விண்ணிலும் ஓடிவிளையாடும்' எனக்கவிஞர் சுருக்கமாகப் பல விஷயங்களை உள்ளடக்கிப் பாடியிருப்பது நன்றாகவே உள்ளது.

காரிகை கற்றுக்கவிபாடும் புலவர்களே! நீங்கள் ஒருமுறை இந்தப் பாட்டியின் தாலாட்டுப் பாடலை வந்து கேளுங்கள். இந்தத் தாலாட்டுப் பாடல்களுக்கு உங்கள் பாடல்கள் 'உறை' போடமுடியுமா? 'செய்யுள் இலக்கணம்' என்று ஒன்றை வைத்துக்கொண்டு நீங்கள் 'மார டிக்கிறீர்'களே அவளைக் கேட்டுப்பார்த்தால் 'வித்தையா பாடுதல்; 'எகனை மொகனை'கள் வேணுமென்றால் வந்து நிற்கும்' (கிழவியின் பாஷையில் எதுகையும் மோனையும் 'எகனை மொகனை' யாகிப் பாடலைச் சிறப்பிக்கின்றது) என்று கேலியும் செய்கிறாளே!

''எத்தனை பாட்டுக்கள் கேட்டாலும் பாட்டியின்
இனிய தாலாட்டுக் கீடாவதில்லை
அத்தனையும் அவள் நெஞ்சிலிருந்துதான்
அவ்வப்பொழுது புறப்படுமாம்
சுத்தமாக அவள் செய்யுள் இலக்கணத்
தொந்தரவை அறியாதவள்தான்
''வித்தையாபாடுதல் எகனை மொகனைகள்
வேணுமென்றால் வந்து நிற்கு'
மென்பாள்''

மேகமண்டலம் என்ற கி. வா. ஜ. வின் கவிதைப் பெருமழையில் ஒரு துமி இந்தப் பாட்டிப் பாடல். அவளைத் தரிசிக்கும் முகமாக அவளைப்போன்ற வேறும் பல பாட்டிகளை உங்கள் முன் காட்டியிருக்கிறேன். இனி நாங்கள், ''யாருங்காட்டா அன்பை எனக்குக் காட்டும் பாட்டி; நூறு நூறு ஆண்டு - இன்னும் நூறு ஆண்டு வாழ்க!'' என வாழ்த்தி அப்பாட்டிகளிடமிருந்து விடைபெறுவோம்

('சங்க இலக்கியக் காட்சி'களைக் காட்டி 'திருமுறை மலர்களை' நுகர்வித்து, கம்பராமாயணப் பரவையுள் மூழ்கச் செய்து திருக்குறளின் விளக்கந் தந்து 'பயப்படாதீர்கள்' என இலக்கணம் போதித்து பாமரர் பாடல்களை இரசிப்பித்து புது 'மெருகு' காட்டி, 'கலைஞன் தியாகமாகிப' நல்ல சிறு கதைக் கோவைகளை எழுதி, சமயம் இலக்கியம், சிறுகதை, தனிப்பாடல் விளக்கம் ஆகிய பல துறைகளிலும் நற்சேவை செய்து, கலைமகளை வளர்த்து புதுமைக்கும் பழமைக்கும் பாலமாக விளங்கும் 'கி. வா. ஜ. வின் ஆழ்ந்து, அகன்ற முழுப் புலமையை இப் 'பாட்டி' பாடல் எடுத்துக் காட்டாவிட்டாலும் அவரது இலக்கிய வாழ்க்கையின் ஒரு சிறு துமியையாவது காட்டும் என்ற நம்பிக்கையில் இக்கட்டுரை எழுதப்பட்டது வாழ்க அவரது புகழ்! வளர்க அவரது ஆயுள்!)

திரு. கி. வா. ஜ.

'சம்பந்தன்'

கல்வியும் அறிவும் சம்பந்தமுடையன. ஆனால் கல்வி வேறு; அறிவு முற்றிலும் வேறு.

இன்று சமுதாயத்தைக் கசக்கிப் பிழியுங் கருவியாகக் கல்வி பயன் படுகின்றது. வஞ்சிக்க - திருட - சுயநலத்தை விருத்தி செய்ய உலகம் கல்வியின் நிழலை நாடி நிற்கிறது அதாவது இழிவாகிய சரீர சுகத்தை மையமாகக் கொண்டே அது பொருள் செய்யப்படுகிறது. கலியுக தர்மமும் இதுவே போலும்.

அறிவின் திசை வேறு. அது தடுமாற நடந்தராதது சரி செய்வது. எல்லா உலகங்களிலும் ஊடுருவிக் கலந்து நின்று காத்தருளுந் திருவருட் சக்தி போல அறிவும் பிரபஞ்சத்தைக் காக்க ஆற்றுப் படுத்துவது அது பல ஜன்மங்களின் தவப் பயன்.

திரு. கி. வா. ஜ. அறிஞர் நீண்ட வாழ்வுடையவர். அவரால் பிறருக்கும் வாழ்வு சித்திக்கிறது.

புகழ் மிக மிக இனிப்பது; ஆயினும் பயங்கரமானது. துரியோதனனை அவன் காலத்தவர் பலரும் வாயாரப் புகழ்ந்தார்கள் அவன் புகழ்க் கடலுட் கிடந்து திளைத்தவன் அந்தப் புகழே அவனையும் அவனைச் சார்ந்தவர்களையும், மற்றவர்களையும் கூட முற்றாக அழித்துவிட்டது.

தருமனையும் உலகம் புகழ்ந்தது அந்தப் புகழ் தர்மத்தையும் அதைச் சரணடைந்தவர்களையும் காக்க உதவியது.

தருமன் புகழத்தக்கவன். அறத்தின் வழி நின்றவன். திருவருளின் வழியும் அதுவே. அந்த வழியிற் கால்வைத்தவர்கள் புகழை விரும்பாத விடத்தும் அது தானாகவே ஓடிவந்து சேருகிறது.

திரு. கி. வா. ஜ. புகழத்தக்கவர். புகழ் அவரைத் தேடி வருகிறது.

சம்பத்து என்றதும் மனிதன் உலக போகங்களுக்கு இன்றியமையாத பொன் முதலியவைகளையே கருதுகிறான். அவற்றை மகான்கள் மதிப்பதில்லை. அழியும் இயல்பினது எதையும் அறிவு பொருள் செய்வதில்லை.

திருவருளே கண்ணாகக் கொண்டு உயிருக்கு உய்தி தரும் சம்பத்தைத் தேடுவதையே மேலோர்கள் கருத்தாகக் கொள்வர்.

திரு. கி. வா ஜ. அத்தகையவர், அஞ்சாமை, உளத் தூய்மை, அடக்கம், சினவாமை, தவம் முதலாகிய தெய்வ சம்பத்தை இடையீடின்றித் தேடுங் கருத்தும் முயற்சியு முடையவர்.

அவர் சிறந்த பக்தர். மரண பயமில்லாதவர். அதைத் தடுக்க, நிறுத்தி வைக்க எண்ணுகிறார்களே என்று வாய் விட்டுச் சிரிப்பார். கொல்லுங் கொடு நோயுற்ற காலத்திலும் மருந்தைத் தீண்டாதவர். அவருடைய மருந்தும் டாக்டரும் ஆன்ம நாயகனாகிய பரம கருணாநிதியே.

அவர் மகான்களைச் சரணடைந்து தெளிந்தவர். மகான்களின் நிழல் எத்தகைய உயர்வுடையது, சுகந்தருவது, என்பவைகளை நன்கு தெரிந்தவர்.

'எல்லோரும் வாருங்கள்; சுகமிருக்கிறது. பாருங்கள்' என்று சார்ந்தவர்களையும் அழைத்தேகும் பெருவிருப்புடையவர். சீலர் .

திரு. கி. வா. ஜ. அறிஞர்; புகழத்தக்கவர்; தெய்வ சம்பத்துடையவர்; பக்தர்; அக்ஷர புருஷர்.

கலைமகள் காரியாலயத்தில் நான் கண்ட கி. வா. ஜ.

அருள் செல்வநாயகம்

கலைமகள் உரிமையாளரான திரு. என். ராமரத்தினம் அவர்களை நேரடியாகச் சந்தித்துப் பேசவேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஈழத்து வரலாற்றையும், சோழ நாட்டு வரலாற்றையும் நிலைக்களமாகக் கொண்டு உருவாக்கும் நாவலினுக்காகத் தஞ்சாவூரையும், கங்கை கொண்ட சோழ புரத்தையும் பார்க்கவேண்டிய அவசியமும் ஏற்பட்டது. ஆகவே இரண்டு நோக்கங்களையும் நிறைவு செய்வதற்காகச் சென்ற ஆண்டு தென்னிந்தியாவினுக்குச் சென்றேன்.

மட்டக்களப்பிலிருந்து புறப்பட்ட நான் இந்திய மண்ணில் கால் வைத்தவுடன், எங்குமே தாமதிக்காமல் முதலில் சென்னைக்கே சென்றேன்.

முதல் நாள் பிரயாணக் களைப்பினைப் போக்கிக்கொண்டு, மறுநாள் மயிலாப்பூரில் உள்ள கலைமகள் காரியாலயத்தினுக்குச் சென்றேன்.

நூற்றுக்கணக்கானவர்கள் சுறுசுறுப்பாகப் பணியாற்றும் கலைமகள் காரியாலயம் எடுப்பாகவே தலைநிமிர்ந்து நின்றது.

கலைமகள் காரியாலயத்தின் கீழ்ப்பகுதி புத்தகங்கள் விற்பனை நிலையமாகவும், அச்சுக்கூடமாகவும் இருந்தது. மாடியிலேதான் காரியாலயம் அமைக்கப்பட்டிருந்தது. மாடியிலே நுழைந்தவுடனே பெரியதோர் வாசிகசாலை காட்சிதருகிறது. வாசிகசாலையின் வழியாகச் சென்றால் கலைமகள் காரியாலத்தினுள் செல்லலாம். அடுத்தடுத்து மூன்று அறைகள்

ஒரு பெரிய அறையில் எதிர்ப்புறத்திலே இரண்டு சிறிய அறைகள். சிறிய அறையொன்றிலே கணக்குகள் சரிசெய்யப்படுகின்றன. மற்ற அறைதான் கலைமகள் ஆசிரியர் காரியாலயம்.

காலையில் நான் சென்ற வேளையில், கலைமகள் உரிமையாளர் வராமையினால் கலைமகள் மனேஜரான திரு. ச. கு. கணபதி ஐயர் என்னை வரவேற்றார்.

திரு. கணபதி ஐயர் அவர்களுடன் வார்த்தையாடிக்கொண்டிருந்த போது, எதிர் அறையிலே பலர் எழுதிக்கொண்டும் படித்துக்கொண்டும் இருந்தார்கள். அவர்களுள் திரு. கா. ஸ்ரீ. ஸ்ரீ, திரு. செல்லம் ஐயர், திரு. ரங்கநாதன், திரு. நடராசா என்பவர்கள் முக்கியமானவர்களாவர்.

அந்த அறையின் நடுநாயகமாக ஓர் அழகிய மேசை போடப்பட்டிருந்தது. அந்த மேசைக்கென்று போடப்பட்டிருந்த நாற்காலி விசித்திரமாகவே இருந்தது. அந்த நாற்காலி அழகிய சித்திரவேலைப்பாடுகள் கொண்டதாக இருந்தது. ஓர் அழகிய அரியணை போலவே அந்த நாற்காலி இருந்தது. கலைமகள் காரியாலயத்தினுக்கே அந்த நாற்காலி தனியதோர் மதிப்பினைக் கொடுத்துக்கொண்டிருந்தது.

அழகிய மேசையிலே, ரெலிபோனும், ரெலிபோன் அட்டவணைப் புத்தகமும் மட்டுமே இருந்தன. வேறு புத்தகமோ கடதாசிகளோ இருக்கவில்லை.

எனக்குப் பக்கத்தில் இருந்த திரு. கணபதிஐயரிடம் திரு. கி. வா. ஜ. இருக்கிறாரா என்று கேட்டுவைத்தேன். எனக்கு முன்னர் திரு. கி. வா ஜ.வைத் தெரியாது. ஆனால் திரு. கி. வா. ஜ. 1956-ம்

ஆண்டிலிருந்து கலைமகளில் எனது சிறு கதைகளைப் பிரசுரித்து வந்துள்ளார். அதன் பொருட்டுப்பல கடிதங்களும் எழுதியுள்ளார். எனது முதல் சிறுகதைத் தொகுதியான தாம்பூலராணியினை திரு. கி. வா ஜ.வுககே சமர்ப்பணம் செய்துள்ளேன்.

இந்திய இதழ்கள் அனைத்திலும் எழுதுவதற்கு எனக்கு வழியைத் திறந்து தந்தவர் திரு. கி. வா. ஜ. வேயாகும். அதன் பயனாக திரு. கி வா. ஜ வைக் கண்டு பேச வேண்டுமென்ற பெருவிருப்பம் ஏற்பட்டது. அதனாற்றான் திரு கணபதி ஐயரிடம் விசாரித்தேன்.

''அதோ மேஜை காலியாக இருக்கிறது. திரு. கி. வா. ஜ. வெளியூர் சென்றிருக்கிறார் வருவதற்கு நான்கு நாட்கள் ஆகும்'' என்றார்.

கலைமகள் காரியாலயத்தில் எனக்கு ஓர் வாரத்தினுக்கு மேலாக அலுவல் இருந்ததனால் திரு. கி. வா. ஜ-வந்தவுடன் பார்க்கலாம் என்ற எண்ணத்தில் திரு. கா ஸ்ரீ. ஸ்ரீ., திரு. ரங்கநாதன் முதலியவர்களுடன் சம்பாஷித்து விட்டுத் திரும்பினேன் திரும்பும் வேளைதான் கண்ணன் ஆசிரியர் திரு. ஆர்வியைக் காணவில்லையே என்று கேட்டேன்.

''அவர் முதலில் இந்த அறையிலேதான் இருந்தார். பின்னர் தனிமையை நாடி வேறு ஒரு இடத்தினுக்குச் சென்றுவிட்டார்'' என்று கூறிய திரு. கா. ஸ்ரீ. ஸ்ரீ. அவர்கள் என்னை அழைத்துச் சென்று அறிமுகம் செய்து வைத்தார்.

கலைமகள் காரியாலயத்தில் அறிமுகமான அனைவரும் இலங்கை இந்தியர் பிரச்சினையைப்பற்றியே பேசினார்கள். அனைவருக்கும் இலங்கை இந்தியர் பிரச்சினை தான் இலக்காக இருந்தது.

அன்று நான் கலைமகள் காரியாலயத்தினுக்குச்சென்ற நோக்கம் நிறைவேறவேயில்லை. இருந்தாலும் அது முதலாக நான் புரசவாக்கம் இருந்து தினமும் மயிலாப்பூருக்குப் போய் வந்துகொண்டேயிருந்தேன். நான் செல்லும் ஒவ்வொரு வேளையும் திரு. கி. வா. ஜ. வின் நாற்காலியைப் பார்க்கத் தவறவேயில்லை. அது காலியாகவே இருந்தது.

நான்கு நாளில் திரு. கி.வா.ஜ. வந்து விடுவதாகக் கூறினார்கள். ஆனால் ஒரு வாரமாகியும் அவர் வரவேயில்லை. எப்படியும் திரு. கி. வா. ஜ. வைப் பாராமல் சென்னையை விட்டுப் புறப்படுவதில்லையென்று தீர்மானித்தேன். அதற்கேற்ப கலைமகள் காரியாலய அலுவல்களும் நீண்டு கொண்டே இருந்தன.

திரு. கி. வா. ஜ இலங்கை வந்த போதெல்லாம் என்னைப் பற்றி விசாரித்ததாக நண்பர்கள் கூறினார்கள். இலங்கை வந்த வேளைகளில் நானும் திரு. கி. வா. ஜ. வைப் பார்க்க முனைந்தேன். ஆனால் சந்தர்ப்பம் கைகூடவேயில்லை.

வழமைபோல் அன்றும் கலைமகள் உரிமையாளரின் அறையினுட் சென்று பேசி விட்டு வெளியே வந்தபோது, காலியாக இருந்த நாற்காலியில் ஒருவர் வீற்றிருப்பது தெரிந்தது. அந்த அரியணை நாற்காலி திரு. கி. வா. ஜ. வுக்கென்றே ஒதுக்கப் பட்டதாயிற்றே! மற்றவர்கள் ஒருபோதும் அதில் அமர்வதில்லையே! ஆகவே உற்று நோக்கினேன். திரு. கி. வா. ஜ. வேதான். முன்னர் அவரை ஓர்போதும் பார்க்காவிடினும், அவரது புகைப்படங்களைப் பார்த்ததனால் மட்டிட்டுக் கொள்ள முடிந்தது.

தூய கதர் ஆடை அணிந்து, நெற்றியிலே பட்டையாக விபூதி அணிந்தவாறிருந்த கலைமகள் ஆசிரியர் திரு. கி வா. ஜ. வின்தோற்றம் எடுப்பாகவேயிருந்தது. அதே வேளை எளிமையாகவும் இருந்தது.

பெரும்பாலும் இந்தியாவிலே ஆயிரக் கணக்கான சந்தாதாரர்களுக்காகவே அச்சிடப்படும் கலைமகள் ஆசிரியரின் அமைதியானதோற்றம், கலைமகள் குடும்பத்தினுக்குத் தலைவராக இருக்கிறாரென்ற பெருமையைச் சொல்லாமல் சொல்லியது.

இலக்கியப் பணிக்கென்றே ஆரம்பத்தில் தொடங்கப் பெற்று சொற்ப பிரதிகள் அச்சிடப்பட்ட கலைமகள், காலத்துக் கேற்றவாறு வளர்ந்து இன்று தமிழ் நாட்டில் முன்னணி இலக்கியப் பத்திரிகையாகத் துலங்குவதென்றால், அந்தப் பெருமை திரு. கி.வா. ஜ. வுக்கு மட்டுமே உரித்தானதாகும்.

கலைமகள் குடும்பத்திலே சகபத்திரிகைகள் தோன்றுவதற்கும், பிரசுராலயம் வகுத்ததற்கும் ஆலோசனை கூறி வழி நடத்தியவர் திரு. கி. வா. ஜ. வாகும்.

கலைமகள் காரியாலயத்தில் நூற்றுக் கணக்கானவர்கள் பணியாற்றுவதற்கு வித்திட்டவர் திரு. கி. வா. ஜ. வேயாகும். ஆதலினால் கலைமகள் காரியாலயத்தில் அவருக்கென்றே தனி ஓர் மதிப்பு இருக்கச் செய்தது.

கலைமகள் காரியாலயத்தில் தனக்கென்று ஓர் பெருமையை அன்பு வழியிலே தேடிக்கொண்ட திரு. கி. வா. ஜ., நூற்றுக்கணக்கான நூல்களின் ஆசிரியராகும். அவரது நூல்கள் பல்வேறு துறைகளிலும் வெளிவந்துள்ளன. சிறு கதைகளை திரு. கி. வா. ஜ. தனக்கே உரிய ஓர் நடையிலே எழுதுவார். கட்டுரைகள் எழுதுவதிலே திரு. கி. வா. ஜ - வுக்கு அலாதியான ஓர் கைவந்த புதுமை நடை. கவிதைகளுக்கு விளக்கம் கொடுப்பதிலே கைதேர்ந்தவர். கவிதைகள் புனைவதிலும் ஆற்றல்கொண்டவர்.

கவிஞராக, எழுத்தாளராகத்துலங்கிய திரு. கி. வா. ஜ. இலக்கிய நயம் சொட்டும் சிறந்த பேச்சாளராகும். எழுதுவதைப் போலவே நயம் சொட்டப் பேசுவதிலே திரு: கி. வா. ஜ-வுக்கு நிகர் திரு. கி. வா-ஜ.வே தான்.

இத்தனை பெருமைகொண்ட திரு. கி. வா. ஜ. கலைமகள் காரியாலயத்தில் சாது போல் அமர்ந்திருந்தது என் உள்ளத்தை வெகுவாகக் கவர்ந்தது. அந்தக் கவர்ச்சியிலே என்னை மறந்தவாறு கலைமகள் காரியாலய ஆசிரியர் அறையினுள் புகுந்தேன்.

'வாங்க ஸார்' என்று என்னை வரவேற்ற மஞ்சரி ஆசிரியர், திரு. கி. வா. ஜ-வுக்கு அறிமுகம் செய்துவைத்தார்,

'வணக்கம்' என்று கரம் குவித்தேன்.

பதிலுக்கு வணக்கம் செலுத்திய திரு. கி. வா. ஜ. அருகிலே இருந்த நாற்காலியில் உட்காரும்படி கூறிவிட்டு என்னை ஏற இறங்க உற்றுப்பார்த்தவாறு,

'நீங்கள் தானா? நான் எதிர்பார்த்ததற்கு முற்றிலும் மாருக இருக்கிறீர்களே!' என்று புன்னகை தவழக் கூறினார்.

'நீங்கள் எப்படி எதிர்பார்த்தீர்கள்...' என்றவாறு ஏறிட்டு நோக்கினேன்.

'அனுபவம் மிக்கவராக, ஐம்பது வயதைக் கடந்தவராக இருப்பீர்களென்று நினைத்திருந்தேன்' என்றார்.

'அப்படியா? எதற்காக அப்படி நினைத்திருந்தீர்கள்' என்று கேட்டுவைத்தேன்.

'நான் உங்களைக் காணவில்லை. இருந்தாலும் உங்களது எழுத்துவன்மையைக் கொண்டுதான்' என்று அகம் மலரக் கூறினார் திரு. கி. வா. ஜ.

அன்னாரது மகிழ்ச்சியிலே, நானும் பங்குகொண்டு இரண்டு மணித்தியாலங்களாக இலக்கிய வட்டத்தைச் சுற்றி வார்த்தையாடினோம்.

நான் இலங்கையிலிருந்து வந்ததனால், சென்னை நகரின் சிறப்பான இடங்களையும் பார்த்து மகிழவேண்டியவைகளையும்பற்றி திரு. கி. வா. ஜ. கூறினார்.

அவர் கூறியவற்றில் சென்னையில் தங்கிநின்ற காலையில் சில இடங்களையும் சில புதுமைகளையும் போய்ப் பார்த்திருந்தேன். இன்னும் பார்க்காதவைகள் பல இருந்தன. ஓய்வான வேளைகளில் அவைகளையும் பார்த்து முடித்தேன்.

கலைமகள் காரியாலயத்தில் எனது அலுவல்களும் ஓரளவு முடிவாகின. எனக்குக் கிடைத்த விசாவில் மூன்று வாரங்கள் சென்னையிலே கழிந்துவிட்டன. இன்னும் ஒரு வாரந்தான் இருந்தது. ஆகவே தஞ்சாவூருக்குச் செல்லவேண்டிய நிலைமை எழுந்ததனால் புறப்பட ஆயத்தமானேன். அந்த வேளை திரு. கி. வா. ஜ. வின் நினைவு எழுந்தது. ஆகவே இறுதியாக அவரைப் பார்த்துப் பிரியாவிடை பெற்றுச்செல்லும் முகமாகக் கடைசித் தடவையாகக் கலைமகள் காரியாலயத்தினுள் நுழைந்தேன்.

என்னைக் கண்டதும் திரு. கி. வா. ஜ. புன்முறுவல் தவழ வரவேற்றார். தஞ்சாவூருக்குப் புறப்படுவதாகக் கூறவும்,

'சென்னையைப் பார்த்து முடித்துவிட்டீர்களா' என்று கேட்டார்.

''ஓரளவு பார்த்தேன், சென்னையிலுள்ள எல்லாப்பத்திரிகைஆசிரியர்களையும் பார்த்தேன், நாவலுக்காகத் தஞ்சாவூரைப் பார்க்கவேண்டிய நிலைமைதான் இனி உள்ளது'' என்றேன்.

''நல்லதுதான், உங்கள் நாவல் இலங்கைக்கும், இந்தியாவுக்கும் ஓர் கலைப்பாலமாக அமைய வேண்டும். அந்த நாவலினை இந்திய இதழுக்கே கொடுத்து விடுங்கள்'' என்று ஆசி கூறினார் திரு. கி. வா. ஜ.

"புலிக் கொடியான் ஈந்த வாள்முனை வாழ்வு'' என்னும் எனது நாவல் இரு நாட்டுக்கும் நிச்சயமாக ஓர் கலைப் பாலமாகவே அமையும் என்றேன்.

"உங்கள் எழுத்தில் தமிழ் நாட்டு மக்களுக்குப் பற்று இருக்கவே செய்கிறது. ஆகவே உங்கள் நாவல் நிச்சயமாக வெற்றி ஈட்டும்'' என்று வாழ்த்துக் கூறியதுடன் நாவல் எழுதுவதின் முக்கியமான சில சம்பவங்களையும் எடுத்துக் கூறினார்.

''புகை வண்டிக்கு நேரமாகிறது. நான் வருகிறேன்'' என்று கரம் குவித்தேன்.

''போய் வாருங்கள், இரு நாட்டுக்குமான இலக்கியப் பாலத்தைப் பலப்படுத்துங்கள்'' என்று கடைசியாக ஆசி கூறினார் திரு. கி. வா. ஜ.

கலைமகள் காரியாலயத்தை விட்டு வெளியே வந்தேன், முண்டகன்னி அம்மன் வீதியிலே தானே கலைமகள் காரியாலயம் இருக்கிறது. ஆகவே முண்டகன்னி அம்மனையும் தரிசித்து விட்டுச் செல்லலாமென்ற நிறைவுடன் கோயிலினுட் சென்று வழிபட்டேன்.

கலைமகள் காரியாலயத்தில் கம்பீரமாக வீற்றிருந்து அமைதியாகப் பணி புரியும் திரு. கி. வா. ஜ. தமிழ் நாட்டு வாசகர்களுக்கு என்னை அறிமுகம் செய்து வைத்த நன்றிக் கடனை முண்டகன்னி அம்மனுக்குச் செலுத்திவிட்டு, மன நிம்மதியோடு வெளியேறினேன்.

விமரிசன விந்து

செந்தமிழ்மணி: பண்டிதர் திரு. பொ. கிருஷ்ணபிள்ளை அவர்கள்

மேலை நாட்டுத் திறனாய்வு:

திறனாய்வு என்னும் விமரிசனம் மேலை நாட்டிலே ஒரு பெருங் கலையாகக் கருதப் பட்டு வளர்ந்து வருகிறது. உலகப் புகழ் பெற்ற செகப் பிரியர் முதல் இற்றை நாட் புலவர் வரை எல்லோர் ஆக்கப் பாடுகளை யும் பற்றி எத்தனை எத்தனையோ விமரிசன நூல்கள், சஞ்சிகைகள் வெளிவந்து கொண் டிருக்கின்றன. இந்தத் திறனாய்வுகளை. நேரே கவியின் ஆக்கப் பாடுகளைப் படிக்க விடாது தடுக்குங் குப்பைகளென ஒதுக்கி விடுவாருமுளர். மத்தியூ ஆனல்ட், வால் டர் பேடர் போன்றோருடைய விமரிசனங் கள் கலைக்குரிய அம்சங்களெல்லாஞ் செவ் வனே பொருந்தியவையாய் புலவர்களு டைய உள்ளக் கிடக்கைகளையும் தெள்ளி திற் புலப்படுத்துவனவாய் உள்ளன. அவ ற்றை வாசிக்கும்போது நாமொரு புத்தம் புது உலகிலே புலவர் நடுவிலே உலவுவது போன்ற உணர்ச்சி எய்துகிறோம். மறை மலையடிகளார் இவர்களுடைய அடிச் சுவட் டைப் பின்பற்றி நல்ல முறையிலே முல்லைப் பாட்டு, பட்டினப் பாலை என்பவற்றிற்குத் திறனாய்வுடன் கூடிய ஆராய்ச்சி உரை வரைந்துள்ளார். மேலைத் தேச இக் காலச் சிறந்த விமரிசன நுட்பங்கள் இவர் தம் இவ் விரு நூலிலுங் காணப்படுகின்றன. விமரி சனம் விஷய விளக்கத்திற்கும், உள்ளொ ளியை ஏற்படுத்துந் தூண்டுதலுக்கும் விசே ஷமாக உதவுகின்றது. அது எங்கள் அறி வைத் தூண்டுவதிலும் பார்க்க எங்கள் உள்ளத் துணர்ச்சிகளைத் தூண்டுவதிற் சிற ந்த பங்கு கொள்ளுகின்றது. விமரிசனத் தில் கவிதையை விளக்குவதனினும் புல வனின் மேதா விலாசத்தைப் பற்றித் தீர்க் கமாக எடை போடுதலே சிறப்புடைத் தாகும். பழைய சான்றோர் தங் கருத் துக்களை இந்த விமரிசன ரீதியில் தந்துள் ளமையை இனிக் காண்போம்

நம் சான்றோர், நூல்களை அணுகும் முறை:

சேக்கிழார் பெருமான் அறுபத்து மூன்று நாயன்மார்களது திவ்விய சரி தத்தை அழகு தமிழில் அன்பொழுகப் பாடினார். திருமுறைகளிலே தோய்ந்த அவர் திருவுள்ளம் சமய குரவர் மாட்டுத் தெய்வத்துக்குச் சமமான பக்தி செலுத் தும் நிலையை எய்தியது. மனிதனை மனித னாக மதித்து நடத்துகவென்று இன்றைய சமுதாய அரசியல் வாதம் கூறுகின்றது. ஆயின் சேக்கிழாரடிகளுடைய சைவ உறுதி இவ்வரசியற் கொள்கை உதிக்க முன்னரே மனிதராகப் பிறந்த அடியார் களைத் தெய்வ நிலையில் வைத்துப் பார்க் கும் பண்பாளராக அவரை ஆக்கியது சமய குரவர் மூவரையேயன்றி ஞான சம் பந்தப் பெருமானுடைய திருவருள் பெற்று, பாண்டி நாட்டில் ஒடுங்கிய சைவத்தை மீண்டும் தளிர் விட்டு ஒளி பெறச் செய்த மங்கையர்க் ரசியாரை "மங்கையர்க்குத் தனியரசியெங்கள் தெய் வம்" என்று உளங்குளிரப் பாடச் செய் தது. அடியார்களை மகேசுரனாகப் பாவிக் கும் பெரும் பண்பைத் தமிழ் நாட்டிற் புகுத்தியவர் சேக்கிழார். அதனை வலியு றுத்தி இற்றைவரை ஈழத்திலே அந் நெறி யைக் காத்துத் தந்தவர் ஆறுமுக நாவலர் பெருமான்.

ஆன்றோரை மதித்தும் துதித்தும் சேக்கிழார் உரைகாணுந்திறன்:

தமது அருங்காப்பியத்தில் நாயன்மார் களுடைய அருளிப்பாடல்களுக்குக் குறிப் பாகவும் வெளிப்படையாகவும் விளக்கம்

காண்கிறார் சேக்கிழார் பெருமான். சைவ உலகுக்கேயன்றி முழு உலகிற்கும் ஒரு பெரும் வாழ்த்தாக அமைந்த "வாழ்க அந்தணர்" என்பதை முதலாக உடைய திருப் பாசுரத்துக்குப் பொருள் காண்கிறார் சேக்கிழார். மிகவும் பய பக்தியுடன் அதனையருளிச் செய்தவருடைய தாள்களை வணங்கித் தம் அறிவுக் குறைவையும் குறிப்பிட்டு அதன் மேலேதான் உரையும் அவர் தம் உளப்பாங்கும் காண்கிறார்.

"வெறியர் பொழிற் சண் பையர் வேந்தர்
மெய்ப் பாசுரத்தைக்
குறிஎ றிய எல்லை அறிந்து கும் பிட்டேன்
அல்லேன்
சிறியேன் அறிவுக் கவர் தந்தி நப் பாசந் தந்த
நெறியே சிறியான் அறி நீர்மை கும்பிட்டேன்
அன்பால்"

அநுபூதி மான்களுடைய பாடல்களுக்கு உரை வரைவோர் அவர்களைத் துதித்து மதித்தே வரைதல் வேண்டும். அவர்கள் கூறுவனவெல்லாம் அவர்கள் தம் சொந்த அநுபவத்திற் பட்டவையே. இறை அநுபவத்தோடொட்டியவை பிழைபட வழியில்லையன்றே! ஆகவே அத்தகைய பெரியோர்களை நாம் அணுகும் போது எமது அறிவுத் துணிவு கொண்டு அங்ஙனம் செய்தல் "நாய்வால் கொண்டு கடலாழம் பார்ப்பது" போலாகும். இந்த இடத்திலே தான் கீழைத்தேய மேலைத்தேய அறிஞர்கள், நூல்களை அணுகும் முறையில் ஏற்படும் வித்தியாசத்தைப் பார்க்கிறோம். வெறும் உலகியல் அறிவோடு காப்பியம் செய்வோருக்கும் இறை பக்தி விஞ்சி ஏற இதயத்தாற் கவிதை செய்வோருக்கும் உள்ள வித்தியாசம் தான் எத்துணை பெரியது! ஆகவே தான் பெரிய புராணச் சருக்க முடிவு ஒவ்வொன்றிலும் கதாநாயகனாகிய சுந்தர மூர்த்தி சுவாமிகளுக்கு சேக்கிழார் பாடியருளிய துதிகள் நம் உள்ளங்கவர்ந்து அவர்தம் திருவுள்ளத்தையும் நமக்குக் காட்டுகின்றன

"நேசம் நிறைந்த உள்ளத்தால்
நீலம்நிறைந்த மணி கண்டத்
தீசனடியார் பெருமையினை
எல்லாவுயிரும் தொழ எடுத்துத்
தேசம் உய்யத் திருத் தொண்டத்
தொகைமுன் பணித்த திருவாளன்
வாச மலர் மென் கழல் வணங்க
வந்த பிறப்பை வணங்குவாம்."

இராமனைப் பல ஆண்டுகளுக்குப்பின் காணப் பேராசை மீதூரும் பரதன் அவனைக் காணும் பாக்கியந் தனக்குக் கிட்டியதே என நினைந்து பெரியோரைக் கும்பிட்டதோடமைந்துவிடாது தன்னைத் தானே கும்பிட்டது போல, சேக்கிழார் சுவாமிகளும் சுந்தரர் திருவடியைப் போற்ற வந்த இந்த மானிடப் பிறப்பிற்கே பெருவந்தனஞ் செலுத்துகின்றார். ஒரு திறம்பட்ட விமரிசகன் விளக்கம், வெளிப்பாடு, உயிர்ப்பு ஆகியவற்றால் ஒரு நூல் உண்மையிலேயே எத்தகையது என அதன் பொருளடக்கம் அதன் தத்துவம் அதன் அழகமைதித் தன்மை ஆகியவற்றை நாம் அறியச் செய்கிறான். இந்த முறையில் சேக்கிழார் தமக்கு முந்திய நாயன்மார் தந்த திருமுறைகளை எப்படி அணுகி விமரிசகராகத் திகழ்கின்றாரென்பதை நாம் பெரிய புராணத்தை உளங்கொண்டு கற்பதனாலே உணர்ந்து கொள்ளல் கூடும்.

அன்பர் அகம் அளந்த அண்ணலாரும் ஆறுமுக நாவலரும்:

தமக்கு முந்திய திருமுறை தந்தோரில் சேக்கிழார் வைத்த பெருமதிப்பை, அவர் தம் அடிச்சுவட்டைப் பின்பற்றி நல்லூர் ஆறுமுக நாவலர் பெருமானும் சேக்கிழார் மீது வைத்துள்ளாரென்பது, அவர் தந்த விமரிசனம் போன்ற பெரிய புராண சூசனத்தால் நாம் அறிந்து கொள்ளலாகும் சேக்கிழார் பெருமானை "அன்பர் அகம் அளந்த அண்ணலார்" என்று ஆன்றோர் குறிப்பிடுவர். இக்காலத் திறனாய்வாளரும் இந்த ஆய்வின் பயன் கவி செய்தோனின் உள்ளக் கிடக்கையை அறிதலேயாம் என்பர். சிவதொண்டர் திருவுள்ளமறிந்து சேக்கிழார் பெரிய புராணந் தந்துள்ளமையைப் பற்றிக் குறிப்பிடும்போது

உமாபதி சிவனார் செய்தற் கரியவையா யினும் ஒரு வாற்றாற் செய்து முடிக்கக் கூடியன எவை, செய்து முடிக்க இயலா தது யாது, என, ''கருங் கடலைக் கை நீத்துக் கொளலெளிது முந்நீர்க் கடற்க ரையின் நொய்ம்மணலை எண்ணியளவிட லாம்... ...சங்கரன்றாள் தமது சிரங்கொடி ருத் தொண்டர் புராணத்தையளவிட நஞ் சேக்கிழார்க் கெளிதலது தேவர்க்கு மரிதே'' என அரியதினும் அரியதைப் புலப்படுத்தியுள்ளார். அடியார் தம் திரு வுளப் பாங்கறிந்தே சேக்கிழார் காப்பி யஞ் செய்தமையால் இங்ஙனங் கூறலா னார் உமாபதி சிவனார். ''கருங்கடலைக் கைநீத்துக் கொளலெளிது'' என்ற உமா பதியார் வாக்கை இற்றை நாளில் கை கால்கள் உதவிகொடு கருங்கடல் கடந்த நவரத்தினசாமி, ஆனந்தன், மிகிர் சென் என்போர் புலப்படுத்தி விட்டார். எல்லை யில்லாத சிவபக்தி, கருவி நூல்களில் நிரம் பிய அறிவு, சித்தாந்த சாத்திரப் பேர றிவு ஆதியவற்றுடன் சேக்கிழார் மீது தாம் கொண்ட பேரன்பும் நாயன்மார்மீது கொண்ட ஆரா அன்பும் ஒரு சேர நல்லை நாவலர் பெரிய புராணத்திற்கு எவரும் நினைக்க முடியாத சூசனம் வரைந்தார். அதனை முற்ற முடியப் பெறத் தமிழ்நாடு முழுத் தவஞ் செய்திலது

திறனாய்வுக்கு வித்தான பேருரையாசிரியர்:

நாவலர் பெருமான் விமரிசனத்தைப் பற்றி எழுதமுன் உயர் நூல்களுக்கு உரை தந்த நம் பேருரை யாசிரியர்கள் எழுத் திலே விமரிசன வித்தமைந்திருத்தலை ஒரு உதாரணமாகக் கொண்டு காண்போம் பாங்கிக்குத் தான் கண்ட தலைவியது அவயவ நயங்கூறும் தலைமகள்

''குவவின கொங்கை குரும்பை.........
கண்மலர் செங்கழுநீர்.........
(திருக்கோவையார் 108ம பாடல்(

எனக் குறிப்பிட்டளவில் அமைந்து விடாது அடுத்து வரும் பாடலிலும்,

சீரியோன் வைத்த அன்பினகன்று....
........காரென்று
....அவன் பூங் கழல் யாம்.
பேசத் திரு வார்த்தையிற் பெரு நீளம் பெருங்
கண்களே''

எனவும் நீட்டிக் கூறுவதன் காரணத்தை உரையாசிரியர் நாமின்புறக் காட்டுகின் றார். முந்திய பாடலிலே தலைவியின் அவய வங்கள் பல கூறுந் தலைவன் ''கண்மலர் செங்கழு நீர்'' எனக் கண்களைக் குறிப் பிட்டதோடமைந்துவிடாது கண்ணிற் கென ஒருமுழுப் பாடலுந் தருகின்றானே யெனின் ''கண்களாற் பெரிதும் இடர்ப் பட்டானாகலானும், தோழியைத் தனக்குக் காட்டிய பேருதவியை உடையனவாகை யாலும் (திருக்கோவை 18, 51-ம் பாடல் கள்) முன்னர்க்கண்மலர் செங்கழுநீரென் றும் அமையாது பின்னும் இவ்வாறு கூறி னன். இவ்வளவிலே தமது உரை நுட்பங் காணும் முறையை நிறுத்திவிடாது 'கண் ணிற்குப் பிறிது வகையான் உவமங்கூறாது இங்ஙனம் அகல முதலாயின கூறவேண்டி யது எற்றிற்கெனின் அவை கண்ணிற் கிலக்கணமுங் காட்டியவாகும். என்னை இலக்கணமாமாறு ?

''கண்ணிற் கியல்பு கசடறக் கிளப்பின்
வெண்மை கருமை செம்மையகலம்
நீளமொளி யென நிகழ்த்துவர் புலவர்''

ஆயின் இதனுட் செம்மை கண்டிலேமென் பார்க்குச் செம்மையுங் கூறிற்று ... ... அது செம்மையாற்றோன்றும் வரியென அறிக'' என வெறும் உரை வரைந்தமைந்துவிடாது உரை விருந்தே தந்து கவியின் உள்ளக் கிடக்கையுங் காட்டி மேலும் மேலும் கவி தையை நயந்து படிக்கத் தூண்டுதலுந் தருகிறார். மேற்றிசைத் திறனாய்வாளர் காட்டும் ஆய்வுக்கு நல்லிலக்கணத்தை நாந் திருக்கோவையாரின் உரையாசிரிய ரிடங் கண்டுகளிக்கிறோம். சிலப்பதிகார உரையாசிரியர்களிடமும் இத்தகைய பெரு நலன்களைக் காணும்போது மேலை நாட்ட வர் ஆய்வு நூல்களைப் படிக்குங்கால் எமது தண்டமிழ் உரையாசிரியர்கள் தமிழை

வண்டமிழாக்கும் வாய்ப்பின் காரணத்தையும் அறிகின்றோம். சுருங்கக்கூறின் நமது மெய்ப்பாட்டியலைப்பற்றி அயல்நாட்டறிஞர் அறிய நேரிடின் விமரிசனக் கலைக்கு வித்து ஏற்கனவே தமிழில் அமைந்திருப்பதை அறிந்து அவர் இறும்பூதெய்தாது விடுவரோ-?

சேக்கிழாரை அணுகும் நாவலர் :

இப்பொழுது நாவலர் சூசனத்திலிருந்து அவர் கவியின் உள்ளக் கிடக்கையை நன்கு அறிந்துகொண்டமையைப் பார்ப்பாம் மநு நீதிகண்ட சோழன் தன் மைந்தன் மேலே தேரூர்ந்து கொன்றமை குற்றமா அன்று எனத் தாமே விவாதமெழுப்பி விடையுந் தருகின்றார் நாவலனார் 'இந்தப் பசுவானது தன்னினம்போலன்றி மனிதருக்கு உரிய அறிவை உடையதாகி, ஆராய்ச்சி மணியை அசைத்தமையால், எல்லையின்றி எழுந்த இரக்கம்பற்றி அப்பசுவின் கன்றைக் கொன்றமையை மனிதரது குழந்தையைக் கொன்றமையாகக் கொண்டாராதலாலும் ... புண்ணியமாயிற்றென்றுணர்க' .. பிற உயிர்களுக்கு வருந் துன்பத்தைத் தமக்கு வருந்துன்பம்போலக் கொண்டு பேணும் இரக்கமுடைமையே அறிவினாலாகும் பெரும் பிரயோசனமாம்.'

கருணாநிதியாகிய சிவனது விதிப்படி நடுவுநிலைமை சிறிதும் வழுவாது முறை செலுத்துதல் தமக்குக் கடனாதலால், தாம் அப்படியே முட்டாமல் முறைசெலுத்தில், தமக்குப் பின்னும் தமது பூமியிலுள்ள உயிர்கள் இடுக்கணின்றி இனிது வாழ்தல் வேண்டு மன்றுந் தங்கருத்தை வேண்டுவார் வேண்டியதே ஈவாராகிய அச்சிவன் முற்றுவித்தருளுவர் என்னுந் துணிவுடனே அம்மகனைக் கொன்றார்.''

இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களிலே சேக்கிழாரும் தமது கருத்தை தெளிவுறுத்தத் தவறமாட்டார் '... இவ்வான் மனமழியுந் துயரகற்ற மாட்டாதேன் வருந்துமிது தனதுறு பேரிடர் யானுந் தாங்குவதே கருமம் ''

வளைந்த சிவலிங்கத்தை நிமிர்த்த அரசன் செய்த முயற்சிகளினால் - சேனையும் ஆனையும் இழுத்தும் - அது நிமிராதிருப்ப,

'' சேனையுமானை பூண்ட திரளு மெய்த்
தெழாமை நோக்கி
யானுமிவ் விளைப்புற்றெய்க்குமிது
பெறவேண்டும் ''

என்று குங்கிலியக் கலயர் தாம் கழுத்திலே கயிறுபூண்டிழுத்தமைக்குச் சேக்கிழார் சிறந்த முறையிற் காரணங்காட்டுகின்றார். அன்பிற்குத் தோல்வி ஏற்படுவதே இல்லை. ஆனை சேனை செய்யமுடியாததைக் கலயர் முடித்துத் தமது தாழ்மையையும் அன்பின் பெருக்கையும் காட்டினார்.

கண்ணப்பர் ஏனையோர்போல வீழ்ந்து வணங்கிச் சிவனை வழிபடாததற்குச் சுவையுடன் அருமையுமமைய, ''இந் நாயனார் சுவாமியைக் கண்ட வழி வணங்குதல் பயின்றறியாதவராதலானும், தாய்தந்தையர் தங்களுக்கு இனிய பிள்ளையைக் கண்டவுடன் பேராசையினால் மிக விரைந்து ஓடிப் போய், தழுவி மோத்தல் உலகியற்கை ஆதலானும் தமக்கு இனியவராகிய சுவாமியைக் கண்டவுடனே அதி மோகமாய் விரைந்து ஓடிச்சென்று தழுவி மோந்தார் என்க '' எனக் காட்டிய கூற்று உளத்தை விட்டகலுதல் உளதோ?

இயற்பகை நாயனார் தம் மனைவியையே தமக்குத் தருமாறு கேட்ட அடியாருக்கு அங்ஙனமே உவந்தளித்த செய்தியின் குற்றமின்மைபற்றி நாவலர் ஏதுக் காட்டுமிடத்து,

'' கனியினுங் கட்டி பட்ட கரும்பினும்
பனிமலர்க் குழற் பாவை நல்லாரினும்
தனிமுடிகவித் தாளு மரசினும்
இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே''

என்ற அப்பர் அருட்பாடலின் இரண்டாம் அடிக்கு விரிவுரை காண்பார்போல 'மெய்யுணர்வுடையோர்கள், தமக்கு உரிய மனைவி மைந்தர் முதலிய உயிர்ச் சார்புகளிலும் வீடு பொன் முதலிய பொருட் சார்புகளி

லும் ... சிவனே தமக்கு மிக இனியர் என்று தெளிந்து, அச் சார்புகளோடு கலந்திருப் பினும் அவைகளிடத்தே பற்றுச் சிறிது மின்றி .... சிவனடியார்களையும் சிவலிங்கத் தையும் சிவன் எனவே கண்டு, வழி பட்டு வாழ்வார்கள் .... ஒரு காமக் கிழத்திமேல் அதி தீவிரமாய் முறுகி வளரும் காமத்தினலே விழுங்கப்பட்ட மனசை உடைய ஒருவன், தனக்கு உரிய எப் பொருள்களையும் தான் அனுபவித்த லினும் அவர் அனுபவிக்கக் காண்டலே தனக்கு இன்பமெனக் கொள்ளுதல்போல தமக்குச் சிவன் எனவே தோன்றும் சிவ னடியார்கள் மேலே அதி தீவிரமாய் முறுகி வளரும் அன்பினலே விழுங்கப்பட்ட மனசை உடைய இந்நாயனர்........ பனி மலர்க்குழற் பாவை நல்லாரினும் சிவனே தமக்கு இனியர் என்று கொண் டார் என்பது துணியப்படும்....... காமக் கிழத்தியர் வடிவிற் காணப்படும் ஆடை சாந்து ஆபரணம் முதலாயின காமுகரை வசீகரித்து, நினைக்குந்தோறும் காணுந்தோறும் இன்பம் ஜனிப்பிக்கு மாறு போல, விபூதி ருத்திராக்கம் முதலிய சிவ வேடமானது, மெய்யடியாரை வசீக ரித்து, நினைக்குந்தோறும் காணுந்தோறும் இன்பம் ஜனிப்பிக்கும். இது ''சேலுங்கய லும் திளைக்கும் கண்ணாரிளங்கொங்கை யிற் செங்குமம் போலும் பொடியணி மார் பிலங்கும்'' என்னுந் திருப் பல்லாண்டா லும் அறிக இந்நாயனரும். சிவ வேடத் தைக் கண்டவுடனே அதனல் வசீகரிக்கப் பட்டு, இன்ப மேலிடப் பெறுதலால் தம் வயத்தரல்லராவர்.''

இங்ஙனம் விமரிசனத்துக்கு வித்திடு வார் போல சான்றோர் தந்துள்ள விளக்கங் களை வாசித்து நம் கலையின் சிறப்பை நாம் அறிந்து கொள்ளுவதுடன் செம்மை சான்ற அம் மரபு நெறி நின்று இலக்கியங்களைக் கற்றலும் படைத்தலும் இன்றியமையா தனவாம்.

With Best Compliments

from

J. K. K. NATARAJAH & COMPANY

(EXPORTERS & IMPORTERS)

137, MALIBAN STREET, COLOMBO 11
and
57, SEA STREET, COLOMBO 11

கங்கை போன்றவர்

— சி. வைத்தியலிங்கம் —

பரமேஸ்வரனின் ஜடாமுடியிலிருந்து கீழிறங்கிவந்து, கங்காதேவியானவள், பூமியைவளம்படுத்தி ஜீவராசிகளைப் போஷித்துக் காத்துவருகிருள். கி வா.ஜகந்நாதன் அவர்களை நினைக்கும்போது கங்கையின் நினைவுதான் வருகிறது.

கி. வா. ஜ. அவர்கள் குரு சிஷ்ய பரம்பரையிலேவந்தவர். டாக்டர் சாமிநாதையர் அவர்களுடன் சிஷ்யராகவும் பெற்ற பிள்ளைபோலவும் ஒன்றிஇருந்து தொண்டுகள்செய்து, படித்துப் பண்படைந்தவர், ஐயர் அவர்கள் தமிழ் ஏட்டுச்சுவடிகளை ஆராய்ந்து, பிரதிகள் எடுத்துப் பதிப்பித்த பெருந்தொண்டில், வியாசபகவானுக்கு உதவிய விநாயகப்பெருமானைப்போல், உற்றதுணையாயிருந்து இரவும் பகலும் அயராதுழைத்த பெருமகன்- கல்வி, தவம், சீலம் இவற்றினுல் உயர்ந்து விளங்குபவர்.

இங்ஙனம் குருசிஷ்ய பரம்பரையிலே வந்த ஜகந்நாதன் அவர்கள் 'கலைமகள்' பத்திரிகையின் ஆசிரியபீடத்துக்கு வந்தது தமிழ் நாட்டின் தவம் என்றே கருதலாம். பண்டிதர்கள் எழுதிவந்த தமிழ் வசனம் போல் கடினமான பாஷையில் எழுதாமல், சரளமான தமிழில், ஊற்றுநீர்த் தெளிவுடன் எழுதத்தொடங்கலானுர். கங்கையைப்போல கீழிறங்கிவந்து, மக்களுடன் கலந்து அவர்களுடைய அறிவுப்பசியைத் தீர்க்கவேண்டுமென்ற எண்ணத்துடன் எழுதலானுர். தானே சிறுகதைகள் எழுதத்தொடங்கியதல்லாமல் சிருஷ்டி இலக்கியத்துக்கு முக்கியத்துவம் அளிக்கத் துணிவுடன் செயலாற்றினுர். இதனுல் அவருடைய வாசிகவட்டம் வளர்ந்துவந்ததோடு புதுமையான இலக்கிய சிருஷ்டிகளும், சோதனைகளும் பெருகிவளரத் தொடங்கின. புதுமைப்பித்தன், ராஜகோபாலன், சிதம்பரசுப்பிரமணியன், சி சு செல்லப்பா முதலியவர்களின் உயர்ந்தசிருஷ்டிகள் கலைமகளில்தான் முதன்முறையாக வெளிவந்தன- இலங்கையர்களாகிய சம்பந்தன், இலங்கையர்கோன், வைத்தியலிங்கம், முதலியவர்களின் எழுத்துக்கும் மதிப்புக் கொடுத்துக் கலைமகளில் இடம் அளித்து ஊக்கம் கொடுத்தவரும் கி. வா. ஜகந்நாதன் அவர்களே. சிறுகதைகளல்லாமல் தமிழ் நவீன வளர்ச்சிக்கும் அவர் இன்றும் அயராது ஊக்கம் கொடுத்துவருகிருர். கலைமகளில் வெளிவரும் நாவல்களை வாசித்து மகிழ்ந்துவருவோர் இதை அறிவார்கள்.

இதோடு அவர் நிற்கவில்லை. சங்ககால இலக்கியங்களைச் சாதாரண ஜனங்களும் படித்து ரசிக்கவேண்டுமென்று அவர் விரும்பினுர். ஆகவே அவைகளிலிருந்தும், தேவாரத் திருமுறைகளிலிருந்தும் சில பகுதிகளை எடுத்து இலகுதமிழில் விளக்கம் தந்து பலநூல்களை வெளியிட்டிருக்கிருர். இதனுல் பண்டிதர்கள் மாத்திரம் படித்துவந்த பழங்கால இலக்கிய நூல்களைப் பாமரசனங்களும் ஓரளவு அறிந்து ரசிக்க, கைவிளக்குகள்போல் இந்நூல்கள் விளங்குகின்றன.

கி. வா. ஜகந்நாதன் அவர்கள் இன்றும் பழைய ரிஷிகாலமண்ணில் காலூன்றி சலனமில்லாமல் ஸ்திரமாய் நிற்கிருர். ஆனுல் என்றும் புதுமையை வரவேற்கும் உள்ளுணர்வுடன் வளர்ந்து கொண்டுவருகிருர். அதனுல் அவர் உச்சிக்குடுமியுடனும் விபூதிப் பூச்சுடனும் எங்கு சென்ருலும் பண்டிதர்களும், பாமரர்களும், அவரைக் கௌரவித்து மதிப்புக் கொடுக்கிருர்கள். அவர் பேச்சைக் கேட்க ஆயிரக்கணக்கில் கூடுகிருர்கள். அவ்வளவு தூரம் அவர்களுடைய அறிவுத்தாகத்தை அவர் தீர்த்துக் கொண்டு வருகிருர்.

இன்று, கி வா. ஜ. அவர்களின் வாழ்க்கையிலே அறுபது பொன் ஆண்டுகள் நிறைவுபெறுகின்றன தமிழுக்காகத் தியாகஞ் செய்த வாழ்க்கை இது.

சிறு வயதுமுதல் எழுதிக்கொண்டு வரும் அவர்கை இன்னும் பல்லாண்டுகள் எழுதிக்கொண்டேயிருக்கவேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

தமிழ்த் தாத்தாவின் தலைமாணாக்கர்

— முதலியார் குல. சபாநாதன் —

1935 ஆம் ஆண்டு என்ற ஞாபகம். திருவேட்டீஸ்வரன் பேட்டையிலுள்ள தியாகராஜ விலாஸத்தில் தமிழன்னைக்கு அருந்தொண்டாற்றிவந்த தமிழ்த் தாத்தாவைக் கண்குளிரக் கண்டு உரையாடச் சென்றேன். அங்கே மாணவர் சிலர் சூழ்ந்திருந்தனர். எனது பெயரைக் கேட்டதும் மாணவர்களில் ஒருவர் ''இவர் பூவைப் பற்றியும் தாமரைப் பூவைப்பற்றியும் ''ஈழகேசரி'' பத்திரிகையில் தொடர்ந்து நல்ல முறையில் ஆராய்ச்சி செய்து எழுதியுள்ளார்'' என்று என்னைத் தமது ஆசிரியப் பிரானுக்கு அறிமுகஞ் செய்துவைத்தார். ''ஐயா அவர்களைப்பற்றி புனை பெயரில் கட்டுரை எழுதியதும் நீங்கள் தானே'' என்று அம்மாணவர் கேட்டார். அந்த இளைஞருடைய அபார ஞாபகசக்தியைக் கண்டு வியப்புற்றயான் ஆம் என்று பதிலளித்தேன். பின்னர் அம்மாணவரை ஆசிரியர் எனக்கு அறிமுகஞ் செய்து வைக்கும்பொழுது ''இவர்தான் ஜெகந்நாதன். வித்துவான் பரீட்சையில் முதலாவதாகத் தேறிப் பரிசும் பெற்றுள்ளார்'' என்று கூறினர். அன்று தொடக்கம் வித்துவான் கி வா. ஜ. அவர்களுக்கும் எனக்குமிடையே ஏற்பட்ட நட்புரிமை நாளடைவில் வளரத் தொடங்கியது.

மேலும் தாம் நடத்திவந்த கலைமகள் என்னும் திங்கள் வெளியீட்டில் ஈழத்துப் புராதன கோயில்கள் பற்றியான் எழுதிய கட்டுரைகளைப் பிரசுரித்து என்னைத் தாய் நாட்டுத் தமிழறிஞர்களுக்கும் அறிமுகஞ் செய்து வைத்தார்கள் அத்துடன் நில்லாது தினமணி, சுதேசமித்திரன், ஹனுமான் முதலிய பத்திரிகை ஆசிரியர்களுக்கும் அறிமுகஞ் செய்துவைத்து அந்தப் பத்திரிகைகளிலும் எனது கட்டுரைகள் இடம்பெறச் செய்தார்கள். கி வா. ஜ. அவர்கள் இலங்கைக்கு விஜயஞ் செய்த போதெல்லாம் எனது குடிசையையும் தரிசிக்கத் தவறுவதில்லை. இதனால் அவர்கள் எங்கள் குடும்பத்தினரின் அருமை நண்பராகத் திகழ்கின்றார். அண்மையில் கோலாலம்பூரில் கி.வா.ஜ. அவர்கள் என்னைக் கண்டதும் கட்டியணைத்துத் தம் மகிழ்ச்சியைத் தெரிவித்து என் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரையும் பற்றி விசாரித்தார்.

என் அருமை நண்பர் ஜகந்நாத ஐயரின் குருபக்தியும் முருக பக்தியும், என்னைப் பெரிதும் கவர்ந்துள்ளன. முருகனைப்பற்றி யான் அறிந்து கொள்ளவேண்டுமென்று ஆசைப்பட்ட விஷயங்கள் யாவற்றையும் அவர் எழுதிய வழிகாட்டி, பெரும் பெயர் முருகன், கந்தர் அநு பூதிச் சொற்பொழிவுகள், ஆதியாம் நூல்கள் வாயிலாகப் பன்முறை படித்துப் படித்து மகிழ்வது வழக்கம்.

இலக்கியம் இலக்கணம் சம்பந்தமாகப் புது மெருகு கொடுத்து பயப்படாமல் படிக்குமாறு அவர் எழுதிய நூல்களோ பல. பழந்தமிழ் நூல்கள் புதிய

தோற்றப் பொலிவுடன் திகழச் செய்த மாயவித்தைக்காரன் கி.வா ஜ. என்றும் கூற லாம்.

முருகனைப்பற்றிச் சொற்பொழிவாற் றும் பொழுது தன்னை மறந்து அவன் மய மாகவே மாறிவிடுகின்றார். முருகன் திரு வுருவத்தைக் கண்ட விடத்து, கண்ணீர் மல்கி, தன்னைமறந்து புத்தம் புதிய கவி களை யியற்றித் தோத்திரஞ் செய்ததை யான் நன்கறிவேன்.

தமிழ்த் தொண்டும் சமயத் தொண் டும் ஆற்றிவரும் அன்பர் வித்துவான் கி.வா.ஜ. அவர்களுக்கு ஈழநாட்டிலும் அறுபதாண்டு நிறைவு விழா எடுக்கத் தமிழன்பர்கள் ஒழுங்கு செய்திருப்பது கண்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். கி.வா.ஜ. அவர்கள் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து சைவப்பணியும் தமிழ்ப்பணியும் மேலும் மேலும் தொடர்ந்து ஆற்றிவர வேண்டுமென்பதே எனது பிரார்த்தனை யாகும்.

திரு. வி. க. அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு வழிகாட்டுந் தொண்டை மேலும் மேலும் ஜகந்நாதன் ஆற்ற முருகன் அருள் பாலிப்பானாக எனக் கூறிய ஆசி மொழி கி.வா ஜ அவர்களின் வாழ்க்கை முழுவ தற்கும் மிகப் பொருத்தமான ஆசிமொ ழியாக, நிறைமொழியாக விளங்குவது கண்டு முருகபக்தர்கள் பெருமிதங்கொள் ளாதிருக்க முடியாதன்றோ?

அன்பர் கி.வா ஜ. அவர்களுக்கு கவி யியற்றுவதில் ஒரு தனி ஆர்வமுண்டு முருகனைப்பற்றி ஆயிரக்கணக்கான பாடல் களை ஆக்கியுள்ளார். சில சமயங்களில் எனக்கு எழுதும் கடிதங்களே கவிமயமா கத் திகழும் அவற்றில் ஒன்றினைமட்டும் ஈண்டெடுத்துக்காட்ட விரும்புகின்றேன்.

தபால் பெட்டி : 604 போன் : 3003

கலைமகள்

மாதப்பத்திரிகை
மயிலாப்பூர் - சென்னை. 31-7-45

அன்புடையீர், சபாநாத வெனும்பெயரீர்
சிலமதிமுன் அனுப்பி இங்கே
என்புடையே வரவிடுத்த கடிதத்தில்
கட்டுரைகள் எழுது வேனென்
றின்புடைய செய்திபொறித் திட்டனிர்; மற்
றதைமறந்தே இருத்திர் கொல்லோ?
முன்பினிய கட்டுரைகள் வரைந்ததுபோல்
இனிப்பலவும் முயறல் வேண்டும்.

கலைமகளைத் தமிழறிவார் காதலித்தே
வாழ்த்துகிறார்; கலைஞர் பல்லோர்
நிலையுடைய கட்டுரைகள் பலவழங்கி
உதவுகின்றார்; நித்த நித்தம்
பலபலவாம் புத்துறைகள் எவையுண்டங்
கவையெல்லாம் பரக்கக் காட்டும்
விலைமலிந்த கட்டுரைகள் வேண்டுமெனத்
தேடுகின்றேன்; வேட்கையாலே.

பக்கங்கள் மிகக்குறைவா யிருந்தாலும்
இவ்வளவில் பாங்கி னோர்ந்து
மிக்கசுவை தருங்கதையும் அறிவளிக்கும்
கட்டுரையும் மிளிர வார்த்துத்
தொக்கவன்பர் களிகூரச் செய்கின்றோம்;
மேன்மேலே சுடரும் ஞானம்
ஒக்கவலர் கட்டுரைகள் தேடுகின்றேன்:
நீவிரினி உய்த்தல் வேண்டும்.

இலக்கியமே யாகுக, நற் சரித்திரமே யாகுக,
மற்றிரண்டு மன்றித்
துலக்குவதற் குரியபண்பார் நாடோடிப்
பாடல்களின் சுவையே ஆக,
புலக்கணஞ்சேர் அறிவுடையீர், அடுத்தடுத்தே
கலைமகட்குப் பொறித்தல் வேண்டும்.
அலக்கணின்றி யிறையருளால் சுகமேநீர்
இருப்பிரென அகங்கொள் கின்றேன்.

இங்ஙனம்
அன்பன்
கி. வா. ஜகந்நாதன்

விடுகதையில் மரபுகள்

(வட்டுக்கோட்டை, மு. இராமலிங்கம்)

மத்திய இந்தியாவில் மைக்கல் மலைகளில் (Maikal Hills) கொன்ட் பாத்தன் என்னும் இரு பெரும் பழங்குடி மக்கள் வாழ்கின்றனர். இவர்கள் பாடுவது கவிதைப் பாடல்கள், ஆடுவது விடுகதை அபிநயம். தங்களுடன் போட்டியிடும் அயற்கிராமத்து மக்கள் விடை இறுக்கும்வரை அப்பாடல்களை மீண்டும் மீண்டும் பாடி, அவ் விடுகதைகளுக்கு விளக்கங் கொடுக்கும் முறையில் ஆடுவார்கள். அயற்கிராம வாசிகளும் தம் விடைகளை ஆடல் பாடல்களாலேயே இறுப்பர்.

இப்படியான பாடல்கள் பலவற்றை வெரியர் எல்வின் (Verrier Elwin) போன்ற கலைஞர்கள் தம் மைக்கல் மலை நாட்டார் பாடல்கள் (Folk - Songs of the- Maikal Hills) என்னும் நூலில் மொழி பெயர்த்துத் தந்திருக்கின்றனர் அவற்றுள் ஒன்று இது.

The black bird has a black nest
It feeds on the black grass
It climbs on a stone to drink water
It comes home in a litter
In a barber's house it is born as a boy.

இதனைத் தமிழில் தருகையில்

கரும் பட்சிக்கு கருங் கூடுண்டு
அது உண்பதுமோ கரும் புல்லு
அது நீர் குடிக்கக் கல்லில் ஏறும்
அது வீடு மீளும் குஞ்சுகளோடு
நாவிதன் வீட்டில் நன்மகனாகப் பிறக்கும்

என மொழிபெயர்க்கலாம். இதன் விடை, நாவிதன் சவரக் கத்தி. கத்தி கறுப்பு கருங்கூடு மயிர்த் திரள். சாணைக் கல்லில் ஏறிய பின் சூட்டைத் தணிக்கத் தண்ணீரில் அமிழ்த்துவர். சவரத்தில் கத்தியில் விழும் கிருமிகள் குஞ்சுகள். நன் மகனாகப் பிறத்தல் தீட்டப் படுதல்.

மைக்கல் மலைத் தொல்குடி மக்கள் பாடி ஆடும் இன்னொரு விடுகதையின் ஆங்கில மொழிபெயர்ப்பு வருமாறு

In Chunukpur there was a theft
In Chutukpur the thief was caught
In Gaddipur the thief was tried
In Nakhunpur he was executed.

சுனுக்புரியில் களவு நடந்தது
சுதுப்புரியில் கள்ளன் பிடிபட்டான்
கடிப்புரியில் விசாரணை நடந்தது
நகுன்புரியில் கொல்லப்பட்டான்

இதன்விடை பேன். தமிழ் நாட்டில் பேனுக்கு வழங்கிவரும் விடுகதை இது.

இருண்டதொரு காட்டினிலே
மிரண்டதொரு பன்றியை
எட்டுப் பேர் துரத்த
இரண்டு பேர் குத்த
இறந்தது அந்தப்பன்றி

இதனை மேலே தந்த மைக்கல் மலைத் தொல்குடி மக்களின் விடுகதையோடு ஒப்பு நோக்கிப் பாருங்கள்.

அஸ்வமேத யாகத்தில் விடுகதைப் பாடல்கள் பாடுவதும் விடைகள் இறுப்ப

தும் மரபு. ருசியாவில் விடுகதைகளுக்கு விடையிறுக்கும் அறிவுக்கூர்மையைப் பரிசோதித்த பின்னரே பெண்ணையும் மாப்பிள்ளையையும் விவாகஞ் செய்து வைப்பர். உலகின் பிறபாகங்களில் விடுகதைக்கு விடையிறுத்து ஒருவன் இராசகுமாரி ஒருத்தியை மணந்ததும, இன்னொருவன் மரணதண்டனையினின்றும் தப்பியதும் கூறப் படுகிறது. அதுபோலவே மேற்கூறிய பழங்குடி மக்களின் விவாக காலங்களில் பெண்ணை அழைத்துவரச் செல்லும் மாப்பிள்ளையின் பிரதிநிதி பெண் வீட்டார் கேட்கும் விடுகதைகளுக்கு விடையிறுத்த பின்னரே பெண்ணை அழைத்துச் செல்லலாம்.

விடுகதைகளுக்கு விடையிறுப்பதுடன் நில்லாது வேர்ஹோர் (Birhor) என்னும் பழங்குடி மக்களின் விவாகங்களில் வேடிக்கையான வேறு சம்பவங்களும் நிகழ்கின்றன. மாப்பிள்ளை வீட்டில் பெண் வீட்டாரை வேட்டைக்கு உபயோகிக்கும் வலைமீது உட்காரவைத்து "நீங்கள் வரும் வழியில் என்ன நிகழ்ந்தது?" எனக்கேட்பார்கள். "வழியில் ஒரு பெண்ணைக்கண்டோம். உன் தகப்பனார் எங்கே என வினவினோம். குடிசைவேயும் புல் பிடுங்கச் சென்றுவிட்டார் என்றாள். உன் தாயார் எங்கே என வினவினோம். நேற்றுப் பிடுங்கிவைத்த நாற்று நடப்போய்விட்டா என்றாள்"

இந்த விடுகதையின் ஆங்கில மொழி பெயர்ப்பு வெரியர் எல்வின் (Verrier Elwin) தந்தவாறு இது.

Q. Where is your father gone?
A. My father is gone to catch the rains of the heaven.
Q. Where is your mother gone?
A. She is gone to take a dead person inside the house.

யாழ்ப்பாண விடுகதை ஒன்றில் 'உன் தகப்பனார் எங்கே?" என்ற வினவுக்கு "என் தகப்பனார் மழைக்கம்பி வழியே ஏறி விண்ணுலகம் பார்க்கப் போய்விட்டார்' என்று சிறு பையன் விடையிறுத்தான்.

இந்தச் சந்தர்ப்பத்தில் களவுக் காதலர் கையாண்ட விடுகதைகள் என்னும் எமது நூலில் 52-ம் 53-ம் பக்கங்களில் நாம் தந்திருக்கும்

வினா: வெயில் ஒழுகும், மழை ஒழுகா
வீட்டிலிருக்கும் பெண்ணே!
என்ன செய்கிறாய்?

விடை: தலை வேகுது உடல் அவியுது

வினா: ஆச்சி எங்கே?

விடை: நேற்றுச் செத்த பிணத்தை
இன்று அடக்கஞ் செய்யப்
போய்விட்டா

வினா: அப்பு எங்கே?

விடை; முள்ளில்லாக் காட்டில்
எலும்பில்லா நாயுங் கொண்டு
வேட்டையாடப் போய்விட்டார்

என்பன போன்ற விடுகதைகளுடன் ஒப்பு நோக்கிப் பாருங்கள். முள் இல்லாத காடு=கடல்; எலும்பில்லாத நாய்=வலை; அஃதாவது மீன்பிடிக்கப் போய்விட்டார் என்று சொன்னாள்.

மைக்கல் மலைகளில் வாழ்ந்து வரும் தொல் குடி மக்களிடையே வழங்கி வரும் இரு கதைகள் வருமாறு:

1

ஒரு பெண் தன் புருஷனின் தம்பியுடன் களவில் கூடவிரும்பினாள். தன் தமையனுக்குப் பயந்து அவன் மறுத்தான். அவளோ பிடிவாதமாக நின்றாள். ஈயின் பாலும் (Milk of a fly) நாணலின் நாரும் (Pith of a reed) தலையில்லா ஆடும் (headless goat) ஒற்றைக்கால் காடையும் (One-legged quail) கொண்டுவந்தால் கண்ணில்லாக் குதிரையில் (horse without eyes) ஏறி வருவேன் என்றான். அவ்விடுகதையின் விடை

யை அவள் உசாவி அறிந்து அவன் கேட்டவை தேனும் (honey), கரும்பும் (Sugarcane), பொரித்த அரிசியும் (Parched barra) கத்தரிக்காயும் (brinjal) என்றும் கண்ணில்லாக் குதிரை செருப்பு (Sandals) என்றும் கூறினுள். மேலும் மறுக்க முடியாமல் அவனும் அவளுக்கு இசைந்தான்.

2

ஒரு பிராமணன் பிச்சைக்குச்சென்ருன். ஒரு சிறுவன் மட்டும் வீட்டிலிருந்தான். மற்றவர்கள் எங்கேயெனப் பிராமணன் வினவினன். ''ஆச்சி ஒன்றை இரண்டாக்கப் போய்விட்டா. அவ வந்திருந்தாலும் வரமாட்டா. வானத்தால் சொரிவதைத் தடுக்க அப்பு சென்றுவிட்டார். போவோர் வருவோரிடம் ஏச்சு வாங்க அண்ணு போய்விட்டார். நான் ஒன்றைப் பரிசோதித்து முழுவதையும் அறியப்போகின்றேன்'' என்ருன். பிராமணனுக்கு ஒன்றும் புரியவில்லே. அதனே விளங்கவைத்தால் அத்தொல்குடிமகன் கல்வியில் தன்னிலும் சிறந்தவன் என்பதை ஒப்புக்கொள்வதாகப் பிராமணன் வாக்களித்தான்.'' ஆச்சி கொள்ளுக்குற்றப் போய்விட்டா, ஆறு பெருகிவிட்டது அதனல் அவ வரமுடியாது. அப்பு (குடிசை வேயும்) புல்லு வெட்டப் போய்விட்டார். அண்ணர் முள்ளுங்கொண்டு பாதை அடைக்கப்போய்விட்டார். ஒரு சோறு கொண்டு ஒருபானே சோறு பதம் பார்க்கப் போகின்றேன் நான்'' என்ருன் அச்சிறுவன். பிராமணன் வெட்கித் தலே குனிந்தான்.

With best Compliments

A. K. SANGARAN & Co.,

SANGARAN'S BUILDING

Cable: "AKSANGAR"
Dial : 2753

887, Old Moor Street,
COLOMBO-12.

நீளத் தமிழால்
நிலமளந்தோன்

— நாவற்குழியூர் நடராஜன்

செய்ய தமிழ்கமழச் செஞ்சுவைநூல் சொன்மாரி
பெய்து கொழிக்கும் பெருமுகிலை - வையம்
ஐயன், கலைமகளின் ஆசான், மணிவிழா
எய்து ஜெகந் நாதனெனு மின்று.

சங்கத் தமிழ்மரபுச் சான்றோர் வழக்குக்குந்
தங்கத் தமிழறிஞர் சால்புக்கும் - இங்கோர்
அணிவிழா வென்றெடுத்தார், அந்தண் ஜெகந்நாதன்
மணிவிழா வாய்முடிந்த வாறு.

பொன்னின் தமிழைப் புதுமெருகிட் டவ்வமிழ்தைத்
தின்னப் பயப்படா தீர்களென - முன்னி
வழிகாட்டி வாருங்கள் பார்க்கலா மென்றோன
அழியா அழகுடையா னும்.

நீளத் தமிழால் நிலமளந்த தாலே விண்
றீழ மளந்த இசையாலோ - சோழ
அகநாதம் பாரெல்லாம் ஆக்கு தமிழ்வாணா!
ஜெகநாத னானைய்நீ செப்பு

கவிதைப் பேச்சு

— வித்தியாரத்தினம் நவ வியூர் சோ. நடராசன —

''வெள்ளிக் கிழமை ப ‹ ற் கோச்சியில் வருகிறேன். கண்டி டேஷனில் சந்திக்க'' என்று ஒரு தந்தி பேசுகிறது. அதை வாசித்தவர் ஆளணியோடு டேஷனுக்குச் சென்று தமது நண்பனைவரவேற்று அழைத்துச்செல்கிறார் கண்டியிலே இரண்டு கிழமை தங்கிப்பார்க்க வேண்டியவற்றைப் பார்த்துவிட்டு ஊர் திரும்பிய நண்பன் தனது கண்டி நன்பனுக்கு நன்றி கூறி எழுதும் கடிதத்தில் 'கண்டியைப் பார்த்தேன். ஆகா''! என்று எழுதுகிறார். தந்தியிற் கண்ட பேச்சும், கடிதத்தில் கண்ட பேச்சும் கருத்தை வெளிப்படுத்த மொழியாலமைந்த பேச்சுக்கள்தாம். ஆனால் இரண்டுக்கும் வித்தியாசமுண்டு. முன்னையது கருத்தை மாத்திரம் தெரிவிக்கிறது. பின்னையதில் உள்ள ''ஆகா'' என்ற சொல் கருத்தோடு உணர்ச்சியையும் புலப்படுத்துகின்றது.

இதிலிருந்து நாம் கவிதைப் பேச்சுக்கும், கட்டளைப் பேச்சுக்கும், இவை போன்ற பேச்சுக்களுக்குமிடையேயுள்ள பேதங்களை அறிந்து கொள்ளலாம். பேச்சுப் பலதிறப்படும். அவற்றில் கவிதைப் பேச்சு மிகப் பயனுடையதும், அறிவும் ஞானமும் வழங்குவதும் அனுபூதியிலிருந்து உதிப்பதும் ஆகும். அதனால் நாகரிக சாதனங்களில் ஒன்றாக அது காலாகாலமாய் மதிக்கப்பட்டு வருகிறது.

கவிதைப் பேச்சின் உருவம், அதன் பொருள் என்பவற்றைப் பற்றி நமது இரசிகர்கள் ஆதியிலிருந்தே ஆராய்ந்து வந்திருக்கிறார்கள். மொழியினால் நடைபெறும் இந்தப் பேச்சிலே இரண்டு அமிசங்களுண்டு. ஒன்று சொல்லு, மற்றது பொருள். இதை வாக்கும் அர்த்தமும் என்பார் காளிதாசர். உரையும் உரைக்கப்படும் பொருளும் என்ற இரண்டின் தன்மைகளையும், இலக்கணகாரரும் தத்துவ அறிஞரும் ஆராய்ந்துள்ளனர். சொல்லும் பொருளும் கூடியதே இலக்கியமெனப்படும் சாகித்யம் சாகித்தியம் என்ற சொல் இணக்கமெனப் பொருள்படும். இங்கே சொல்லும் பொருளும் இணங்கும் இணக்கத்தைக் குறிப்பிடலாம். சொல்லும் பொருளும் இணைபிரியாது நிற்பதுபோல உடன் விளங்கும் பார்வதிபரமேஸ்வரனென இரகுவமிச ஆசிரியர் தமது காவியத்தைத் தொடங்குகிறார். இவ்வாறு கவிதைப் பேச்சை அர்த்த நாரீஸ்வரருக்கு உவமை கூறுவது இந்திய மரபு.

சொல்லும் பொருளும் இணைவதும் அவற்றிடையேயுள்ள இலக்கண அமைதியும் எல்லாப் பேச்சுக்கும் பொதுவானவையே. இவை எல்லாப் பேச்சுகளிலும் காணப்படும் இலக்கணம். ஆனால் கவிதைப் பேச்சுக்கும், சாதாரணப் பேச்சுக்குமுள்ள வித்தியாசமென்ன? சாத்திரங்கள், சூத்திரங்கள் எல்லாவற்றிலும் இந்தச் சொற்பொருள் இணைவு உண்டல்லவா? கவிதைப் பேச்சு இவற்றிலிருந்து சற்றே வித்தியாசமுடையது அழகுடையது. விசேடமுடையது. இந்த விசேடத்தை, சிறப்பை, வனப்பை ஆராய்வதே கவிதைத் திறனாராய்வென ஒருவாறு கூறலாம். வனப்பென்று தொல்காப்பியர் கூறுவது கவிதைப் பேச்சிற் காணப்படும் அணியையே என்பர் கவிதைப் பேச்சுக்குரிய அணிகள் கவியின் கற்பனைத் திறமையாலுண்டாவன அவை ''கவி வியாபாரம்.'' எத்தனை அணிகள் இலக்கணத்திலே காணப்பட்டாலும் அவைகளின் தனிக் கற்பனையிலே தோன்றிப் பேச்சை ரசவித்தை செய்யாவிட்டால் கவிதைப் பண்பு உண்டாக மாட்டாது அணியென்பது, பூணும்

கலனையும், அக் கலன்களால் உண்டாகும் அழகையும் ஒரு சேரக்குறிக்கும். அது வன ப்பென்ற வாருயிற்று. வனப்பென்பது அழகு, அழகே அணியாகிறது. (சௌந்தர்யம் அலாங்கார!) இதனைப் பேராசிரியர் வனப்பென்பது பெரும்பான்மையும் பல உறுப்புத் திரண்ட வழிப்பெறுவ தோரழகாகலின்'' என்பர் (தொல். செய். 547 உரை)

இந்த அணியை பாமகர் போன்ருேர் வக்கிரோக்தியெனவுங் குறிப்பிடுவர். வக்கிரோக்தி என்பது குறிப்புப் பொருளுள்ள பேச்சு. அதாவது சொல்லும் பொருளை நேரடியாகக் குறிப்பிடாமல் குறிப்பாக உணரவைக்கும் பேச்செனக் கொள்ளலாம். இஃது அணிகளால் உண்டாகக் கூடிய பேச்சாகும். அணிகள் பல பேச்சில் உடனிழைவதால் உண்டாக்கக்கூடியது. இதுவே கவிதைக்குரிய விசேடமெனப் பாமகர் கருதினர். சாதாரணப் பேச்சுக்கும் கவிதைப் பேச்சுக்குமுள்ள வித்தியாசம் இதுவேயென அவர் ஒருவாறு கவிதைப் பேச்சின் உயிர் நிலையை மட்டிட்டுக் கொள்ள முயன்ருர். அதிசயோக்தியைப் பற்றிக் கூறுமிடத்து ''உலகியலுக்கு (மேற்பட்டு)க் கோசரமாகும் வார்த்தை'' என அவர் குறிப்பிடும் போது வக்கிரோக்தியின் தன்மையை உணர்த்துகிருரெனக் கொள்ளலாம். உலகம் என்பது இம்மை. அதற்கு மேற்பட்டது அம்மை. இந்த அம்மையே வக்கிரோக்தி என்பது பாமகர் கருத்துப்போலும்.

இது இரசிகரிடையே நிலவிவந்த சம்பிரதாயமானதால் எந்தக் காலத்திலே தோன்றியதென்று வரையறுக்க முடியாது. ஆனல் மிகப் பழையதொரு மரபென்று மாத்திரம் ஊகிக்கலாம். இதனையே தொல்காப்பியர் வனப்பு எட்டனுள் அம்மையெனக் குறிப்பிட்டிருக்கலாம். மற்று அம்மை என்பதற்கு இதனேடு தொடர்புள்ள மற்றுமொரு பொருளைக் குறிப்பிடலாம். சுவை லௌகீகம், அலௌகீகமென இரு வகையுடையதென்பது வடமொழி அணியியலார் கருத்து. லௌகீகம் இம்மையுலகத்து பாவங்களைக் குறிக்கும். அலௌகீகம் அம்மையுலகத்ததாய், அதாவது பாவமல்லாத பாவங்களால் உண்டாக்கப்படும் சுவையைக்குறிக்கும்.

பாவமென்பதை விளக்குவதானல் அகப் பொருள் நூலார் புணர்தலும் புணர்தல் நிமித்தமும் என்று கூறுமிடத்துக் காட்டும் நிமித்தத்தைக் குறிப்பிடலாம். இவை மேலே விளக்கப்படும். அம்மையென்னும் அதிசயோக்தி உலகியல் வழக்கல்லாத நாடக வழக்கு. நாடக வழக்காவது கவியின் கற்பனையிலுண்டாவது. ''கவிகல்பிதம்.'' நாடகம் என்பது பாவனை நிறைந்தது. பாவனை கற்பனையின்பாற்பட்டது. காவியத்திலே சுவையைத் திட்டமாகப் புலப்படுத்துவதற்குக் கற்பனையில்லாவிட்டால் முடியாத காரியமாகும். நாடக வழக்கெனத் தமிழிலக்கணகாரர் கூறுவது உண்மையில் கற்பனை வழக்கே. அது கவிமரபாகிறது அந்தக் கவி மரமையே, கவிசம்பிரதாயத்தையே, கவிசமயத்தையே அன்பினைந்திணை அகப்பொருள் இலக்கணமாக்கிற்று. எனவே உலகியல் வழக்கை அதிசயோக்தியால் நாடக வழக்காக்கி அதன் மூலம் சுவையை வெளிப்படுத்தும் புலனெறிவழக்கே காவியங்களிலும் சங்க நூல்களினும் பாவிகமாகப் பேசப்பட்டன. பாவிகமென்பது ஒரு கவிதையில் (நாடகத்தில்) பரந்து பட்டு நிற்கும் பொருள் எனக்கொண்டனர். கவிதைக்கு மூன்று சக்தியுண்டென்று கூறுவர். அவை அபிதை, பாவகத்துவம், போஜகத்துவம் என்று வகுத்துக் கூறுப. அபிதை என்பது சொல்லொடு பொருளாய் வரும் நேரடிக் கருத்து. பாவகத்துவமென்பது கற்பனையிலே கவி காட்டிய பிம்பங்களை உள்ளவாறே பாவனைசெய்து கண்முன் கொண்டு வருதல். இதனையே பேராசிரியர் மெய்ப்பாடெனக் குறிப்பிடுவர். சாதாரணமாக மெய்ப்பாடென்பது பாவங்களிலொன்ருன அனுபவத்தையே குறிக்கும். உவகைச் சுவையான சிருங்கார ரசத்தை ஆராயவந்த அகப்பொருளுடையார் திணைகளையும் ஒழுக்கங்களையும் வகுத்துப் பலவகைத்துறைகளையும் கொண்டனர். இவையெல்லாம் விபாவம், அனுபாவம், சத்வபாவம், சஞ்சாரிபாவம், கல்

தாயீபாவங்களென்ற வகையில் அடங்கும். இவ்விபாவங்களால் உய்த்துக்காட்டப்படுவதே உரிப்பொருளான ரசம் எனக் கொள்ளலாம். ஐந்திணையும் அதன் முதற்பொருள் கருப்பொருள் என்பனவும் விபாவத்திலடங்கும். விபாவத்தை ஆலம்பனம் உத்தீபனம் என் இரண்டாக வகுப்பர் வடமொழி அணியியலார். ஆலம்பன விபாவம் முதற்பொருளையும் உத்தீபன விபாவம் கருப்பொருளையும் உணர்த்தும். காலமும் இடமுமான முதற்பொருட் பின்னணியில் உத்தீபன விபாவமான கருப்பொருள் வகைகள் தோன்றி அனுபாவமான மெய்ப்பாட்டினாலும் சத்துவபாவமான விறலினாலும், சஞ்சாரிபாவமான அழுகை, சிரிப்புப்போன்ற குறிப்புக்களினாலும், (இவை யெல்லாம் மெய்ப்பாடு) சுவையென்ற உரிப்பொருளைத் தோற்றுவிக்கும் இச்சுவைப் பொருளே அகப்பொருளில் உவகையென்ற உரிப்பொருளாகும். கூடல், பிரிதல், கற்பு, களவு என்ற ஒழுக்கங்களெல்லாம் உவகைச் சுவையில் பலபட்ட அமிசங்களேயாகுமெனலாம். ஆனால் பேராசிரியர் தொல் செய்யுளியல் 204 ஆம் சூத்திர உரையிலே ''உய்த்துணர்ச்சியின்றி செய்யுளிடத்து வந்து சொல்லப்படும் பொருள் தானேவெளிப்பட்டாங்கு (கண்ணீர் அரும்பல், மெய்ம்மயிர்சிலிருத்தல் முதலாகிய சத்துவம் படுமாற்றான்) வெளிப்படச் செய்வது மெய்ப்பாடென்னும் உறுப்பாம். கவிப் பொருளுணர்ந்தால், அதனானே சொல்லப்படும் பொருள் உய்த்து வேறு கண்டாங்கு அறிதலை மெய்ப்பாடென்றான். அது தேவருலகங் கூறினும் அதனைக் கண்டாங்கறியச் செய்தல்'' என இந்தப் பாவிகத்தை விளக்குகிறார் போற்றெரிகிறது. அதாவது செய்யுளிலே சொற்களால் தோற்றுவிக்கப்படும் பிம்பம் சுயமாக மனத்திலே ஒருபடத்தை உண்டாக்க அதனால் பாட்டை வாசிப்போன் கண்ணீர் கலுழ்ந்து புளகாங்கிதங்கொள்வான். இவ்வாறு கவியின் கற்பனை ரசிகனிடத்துக் கண்கண்ட தோற்றமாகிறது. அமராவதியைக் கற்பனை செய்து எழுதினாலும் அதைப் பிரத்தியட்சமாகக் காட்டுவது பாவிகம் (அதாவது கற்பனையுலகம் உண்மையுலகமாதல்) என்கிறார். இது பேராசிரியர் மெய்ப்பாட்டுக்குக் கொண்ட ஒரு கருத்தாகும். உண்மையில் மெய்ப்பாடென்பது வடமொழியாளர் கூறும் அனுபாவமே. அது இரண்டுவகையென்பர். வடமொழி அணியியலார். ஒன்று தன்னிச்சையாகக் கையை அசைத்தும் புன்முறுவல் காட்டியும், கடைக்கண்பார்வை எறிந்தும் காட்டுவன மற்றது தன்னிச்சையின்றி இயல்பாக உண்டாகும் மெய்ம்மயிர்சிலிருத்தல் கண் துடித்தல் போன்றவை. இவற்றைச் சத்துவ பாவமென்பர். தமிழிலே இதற்கு விறல் எனப் பெயருண்டு. இம்மெய்ப்பாட்டுக்கும், பேராசிரியர் கூறும் ''தேவருலகங் கறினும் அதனைக் கண்டாங்கறியச் செய்தல்'' என்ற பொருட்பாடான மெய்ப்பாட்டுக்கும் வேற்றுமையறியலாம். பேராசிரியர் மெய்ப்பாட்டுக்கு வழங்கிய பொருள் வடமொழி அணியியலார் கூறும் பாவிகத்தையே குறிப்பிடுகிறதெனலாம். பாவிகத்துக்குத் தமிழிலக்கணங்களிற் கூறப்படும் பொருள்கள் பலதிறத்தவாயிருக்கின்றன காப்பியத்தின் உள்ளுறை பாவிகமெனக் கருதப்படுகிறது. 'நிகழ்ந்ததையேனும் எதிர்வதையேனும் கண்முன் நிகழ்வதாகத் தோற்றச் செய்யும் அமைதியே பாவி''கமென்பது காவியப் பிரகாசிகையில் கண்ட மம்மடாச்சாரியார் கருத்து.

பாவிகத்துக்கு உதாரணங் காட்டிய பேராசிரியர் கலித்தொகை 81ஆம் பாடலைக் குறிப்பிடுவர் அது வருமாறு:-

மையற விளங்கிய மணிமருளவ்வாய்தன்
மெய்பெறு மழலையின் விளங்குபூணனைத்தரப்
பொலம்பிறை யுட்டாழ்ந்த புனை வினையுருள்
கலன்
நலம்பெறு கமழ் சென்னி நகையொடு துயல்
வர
உருவெஞ்சாதிடை காட்டுமுடை கழலந்துகி
வரிபொலி கிண்கிணி யார்ப்போவா வடிதடப்
பாலோடலர்ந்த முலைமறந்து முற்றத்துக்
கால்வறேர் கையினியக்கி நடைபயிற்ரு
வாலமர் செல்வ னணிகால் பெருவிற
போல வருமென் னுயிர்.

இங்கே கவி ஒரு குழந்தையின் நிலையைச் சொல்லாற் புனைந்து காட்டுகிறார். பாடலைப் படிக்கும்போது அதன் விம்பம் மனத்தில் உருப்பெறுவதையே பாவிகமென்று காட்டவந்த பேராசிரியர்பொருட்பாடாகி மெய்ப்பாடே அஃதென்று கூறி. ''நோக்கறுப்பால் உணர்ந்த பொருட்பிழம்பினைக் காட்டுவது மெய்ப்பாடெனவும், ''இக்கருத்தினால் கவி கண்காட்டுமெனவுஞ் சொல்லுப'' எனவுங் குறிப்பிட்டார். கண் காட்டுதல் பிரத்தியட்சப் படுத்தல். கண்டாங்கு அறியச் செய்தல்.

கவிதைப் பேச்சு. சொல்லினால் வரும் நேரடிப் பொருளோடு அச்சொற்களின் சமுதாய ஆற்றலால் குறிப்புப் பொருளையுங் காட்டுமென்ற கருத்து, கவிதைப் பேச்சின் விசேடப் பண்பு அதிசயோக்தி, வக்கிரோக்தி என்ற கூற்றுக்களிலே ஆரம்பத்தில் தெளிவின்றி மறைந்திருந்தது. நாளடைவில் பல ஆராய்ச்சியாளரின் சிந்தனையினால் அது வெளிப்படலாயிற்று.

கவிதைப் பேச்சின் விசே ம் அணியில் மாத்திரந் தங்கவில்லை அது வெளியலங்காரம். உள்ளே சுபாவமாயமைந்த விசேடப் பண்புண்டு அதுவே குணம் எனப்படுமென்ற கருத்தும் வலியுறுத்தப்பட்டது. இக்குணங்களைச் செறிவு (இறுக்கம்) தெளிவு. சமநிலை இன்பம் (இனிமை) ஒழுகிசை உதாரம், (குறிப்புப் பொருள்) எளிமை (இலகுவாகப் பொருள் தெரிதல்) காந்தம் (உயர்வு நவிற்சி, மகிழ்ச்சியைத் தருதல்) வலிமை சமாதி என்று வகைப்படுத்தி இவைதாம் நிரந்தரமான பண்புகள், அணிகள் அநித்தியமானவை எனக் குறித்தனர். இவை குணம்; இவற்றை உண்டாக்குவது ரீதி ரீதியாவது சொற்களின் விசேட அமைப்பு (விசிட்ட பதரசனை) அந்த அமைப்பே குணத்தை உண்டாக்கும். எனவே கவிதைப் பேச்சின் விசேடப் பண்பு ரீதியாற் பிறந்த குணமென ஒரு கருத்துண்டானது. உவமை, உருவகம், தீவகம், தற்குறிப்பேற்றம் போன்ற இன்னோரன்ன அலங்காரங்கள் சொல்லோடு சம்பந்தப்பட்டவை. இவை கவிதைப் பேச்சை அணிசெய்யலாம். ரீதியென்ற சொல்லடுக்கு கவியின் கற்பனையையும் கவித்துவ சக்தியையும், அவனுடைய பண்பாடு, கல்வி, வியுத்பத்தி (கலைச் சார்பு) என்பவற்றையும் அனுசரித்துப் பலவகைப் படும். அதை இலக்கணப்படுத்துவது ஆராய்ச்சிக்குப் பயனுடையதாயிருக்கலாம். ஆனால் கவிதைப் பேச்சின் விசேடப் பண்பைச் சுட்டிக்காட்டப் பெரிதும் பயன்படாது. அலங்காரம், ரீதியென்பன வெளியுருவங்கள். கவிதைவாசகம் புலனுடைய ஆவேசத்தால் உண்டாகும் அகக் காட்சியின் புலப்பாடு. அதை வகைப்படுத்தி முத்திரையிடுவது, புள்ளி விபரம் தயாரிப்பது போலாகும். ஆனால் அப்புள்ளி விபரங்கள் காட்டும் பிண்டப் பொருள் ஒன்றுண்டு. அதுதான் கவிதைப் பேச்சிலுள்ள அழகு. மற்று ரீதி ஒவ்வொரு புலவனும் ஒவ்வொரு ரீதியையும் போக்கையும் தனது காட்சிக்கேற்றவாறு பயன்படுத்துவான், இப்போக்குகள் மரபென்னும் புள்ளி விபரத்துள் அடங்கலாம். ஆனால் அம்மரபிலே தனித்தன்மை கோலங்காட்டும். அத்தனித்தன்மையே கவியின் தனிப் பண்பாகும்.

அப்போது கவிதைப் பேச்சிலுள்ள தனிப்பண்பு எத்தகையது? எவ்வாறு தோன்றுகிறது? ஏன் இவ்வணிகள் அழகைக் கொடுக்கின்றன என்ற வினாக்கள் எழும். ரீதி என்பது கவிதைப் பேச்சின் விகற்பம் அது எத்துணை வெற்றி பெறுகிறதோ அத்துணை அழகுண்டாகும். அழகு ஒன்றே. இருந்தால் அழகு இருக்கவே செய்யும். இல்லாவிட்டால் அலங்கோலந் தான். அலங்காரமன்று. அழகுக்கு விகற்பமில்லை. ஏற்றத் தாழ்வில்லை; கவிதைப் பேச்சிலே எந்த அமிசத்துக்கு குணமும் அணியும் அழகூட்டுகின்றன? கவிதை வாசகம் சாதனமன்று. அது கவியின் காட்சி முழுவதும் நிரம்பிய பிண்டம். உயிர்ப்புள்ள முழுமை. அதனால் குணாலங்காரங்களைப் பிரித்து வேறுபடுத்தித் தனியழகு அமிசங்களாகக் கற்பனை செய்வது பொருந்தாது எனவே கவிதைப் பேச்சென்ற உடன் குணவணிகளால் அழகு பெற்று

லும், அவ்வுடலுக்கு உயிரில்லாவிட்டால் பயனெங்கே!

எனவே கவிதைப் பேச்சின் விசேடம் அது பேசாத பேச்சிலேயமைந்திருக்கிற தெனப் பின்னர் கொண்டனர். நேரடியாகக் காணும் பொருள் ஒருபுறமிருக்க குறிப்பாலே இறைந்துகிடக்கும் பொருளுண்டெனவும் அதுவே கவிதைக்கு உயிர் எனவும் கண்டனர். இதனைத் தொனி என்றார்கள். சொல்லுக்கு நேரடிப்பொருளான அபிதையும் குறிப்புப் பொருளான இலக்கணையுமுண்டென வகுத்தனர். ஆனால் சொல்லும் பொருளுஞ் சேர்ந்து வேறு குறிப்புக்களையும் உணர்த்தும். அக்குறிப்புக்கள் அக்கவிதைப்பேச்சிலே உறைந்து, பரவி, இறைந்து இருப்பதால் அதனை இறைச்சிப்பொருள் எனவுங்கொண்டனர். இது கவியின் குறிப்பு. உவமை உருவகம் என்பவற்றுக்கும் அப்பாற் பட்டதொரு பேச்சு இது. இது உள்ளுறையாக உவமமாமாயிருக்கும்.

அறுமருப் பெழிற் கலை புலிப்பாற்பட்டென
சிறுமறி தழீஇய தெறிநடைமடப் பிணை
பூளை நீடிய வெறவருபறந்தலை
வேளை வெண் பூக்கறிக்கும்
ஆளில் அத்தமாகிய காடே
(புறம்-23)

கலைமான் புலியினாற் கொலையுண்டதும், தாய்மான் தனது குட்டியை அணைத்துக் கொண்டு வெறித்துக்கிடந்த அந்த வனாந்தரத்தில் வேளைச் செடியின் வெள்ளைப் பூக்களை மேயும் என்ற கருத்து இதில் வெளிப்படையாக இருக்கிறது. இதில் அந்நாட்டரசன் பகைவரைக்கொன்றபோது கைம்பெண்கள் தம் இளம்புதல்வரைக் காக்கும்பொருட்டுத் தாம் உயிரோடிருப்பதற்காக இலைகுழைகளைத் தின்றுவது உயிர் வாழ்கின்றார் என்ற தொனிப் பொருள் இறைந்து நிற்பதைக் குறிப்பால் உணரலாம்.

எனவே கவிதைப் பேச்சின் விசேடம் குண அணிகளால் வெளிப்படும் தொனிப் பொருளேயென்ற ஆராய்ச்சி பிறந்தது.

ஆனால் தொனிப்பொருளும் பாட்டின் வடிவத்தையே காட்டுமன்றி அதன் பிண்டப் பொருளின் தன்மையைக் காட்டாதென்பது தெரிந்தது. அதாவது கவிதைப் பேச்சிலடங்கியுள்ள வெளிப்படைக் கருத்தையும், அதில் வியஞ்சனமாகி இறைந்துகிடக்கும் உள்ளுறைப் பொருளையும் காட்டுமேயன்றிக் கவியின் அகக் காட்சியை முற்றாகக் காட்டாதென்பது தெளிவாயிற்று. பேசி வெளிப்படுத்தும் சாதனமாயுள்ள கவிதை பேசாத பேச்சினாற் பல குறிப்புக்களையுணர்த்துகிறதென்பது தொனி வாதத்தின் தாற்பரியம். ஆனால் அனுபவப்பேச்செல்லாம் இத்தகைய எச்சப் பொருள்கள் தொக்குநிற்கும் இயல்புடையனவே. அவ்வெச்சப் பொருளாகிய தொனியை வெளிப்படைப் பேச்சிலிருந்து பிரித்து ஓர் அழகாகக் காட்டுவது பாட்டின் முழு முதற்றன்மையில் ஆராய்ச்சியைச் செலுத்தாது ஓர் அவயவத்தில் நோக்கைச் செலுத்துவது போலாகும். சொல்லின் அழகுகளை ஆராய்ந்து குண ரீதி அணி எனக் கண்டவர்கள் இப்போது சொல்குறிககும் பொருளில் உள்ள ஒரு மறைப்பொருளைச் சுட்டிக்காட்டிக் கவிதைப் பேச்சுக்கு அதுதான் உயிர் எனக் கொண்டார்கள். கதை, யானை கண்ட குருடரின் கதைபோலாகிவிட்டது. ஒருவர் காலையும் மற்றொருவர் கையையும், வேறொருவர் காதையுங் காட்டி யானையென்றது போலாயிற்று. யானையின் அமைப்பை வகுத்துக்காட்ட அவையெல்லாம் அவசியமே. ஆனால் அவையெல்லாம் சேர்ந்த முழுப் பொருளாயுள்ளதே யானை.

கவிதைப் பேச்சும் முழுப் பிண்டப் பொருள். அது உடலும் உயிரும் சேர்ந்த அபின்னமான சேர்க்கை. பிரித்து அறிந்து கொள்ள முடியாதது. சொல்லும் பொருளும் அந்நியோந்நியமாகச் சேர்ந்த சேர்க்கையே கவிதைப் பேச்சு. உயிரின்றி உடல் உதவாது; உடலின்றி உயிர் பயன்படாது. பொருளை அழகிய அணி நிறைந்த குணமுள்ள சொற்களால் புனைந்து செய்வது கவிதைப் பேச்சென்று கொண்டவர்கள். ஆரம்பத்திலே எடுத்துக்காட்டிய ''ஆகா''

என்ற அசைவில் அடங்கிய உணர்ச்சியை, ரசத்தை, சுவையை, சாரத்தை, உருப் பொருளைக் கணக்கிலெடுக்காதுவிட்டனர். கவிதைப் பேச்சிலே வெறும் கருத்துக்கள் மாத்திரம் வெளிப்படவில்லை. முதற் பொருள், என்ற காலமும் இடமும், கருப் பொருள் என்ற விபாவங்களும், மெய்ப் பாடுகள் என்ற அனுபாவங்களும், விறல் என்ற சத்துவ பாவங்களும் சேர்ந்து இரசம் என்ற உரிப் பொருளை உண்டாக்குகின்றன. இவ்வுரிப் பொருளே கவியின் அந்தரங்க நோக்கம்; நோக்கமென்று சொல்வதிலும் பார்க்க நோக்கத்தின் சாரம் அல்லது ரசம் என்று கூறலாம். இது கவிதைப் பேச்சு முழுவதிலும் ஊடுருவி நிற்கும். இந்தச் சத்துவ பாவங்களையே தொல்காப்பியர் முப்பத்திரண்டென விதந்து கூறினர் எனலாம். 'பண்ணைத்தோன்றிய எண்ணான்கு' பண்ணையென்பது அரங்கு என்னும் பொருளது என்பதைப் பேராசிரியர் சுட்டிக் காட்டுவர். நாடகத்தில் தெளிவாகக் காட்ட உவந்த இந்த ரசவைபவம் காவியத்தில் சொல்லென்னும் அபிநயத்தால் உய்த்துக் காட்டப்படுகிறது.

தொனிவாதிகள் இந்த உணர்ச்சியைச் சொல்லாற் காட்ட முடியாதெனவும், குறிப்பாலேதான் காட்ட முடியுமெனவும், கொள்ளவே இரசவாதிகள் அவர்களுடைய வாதத்தை அப்படியே ஏற்றுக்கொண்டு, கவி உணர்ச்சியை உய்த்துக் காட்ட முடியாவிட்டாலும், அதற்கு நிமித்தமான காரணங்களையும், அக்காரணங்களால் உண்டாகும் விளைவுகளையும், (இவைதாம் அகப் பொருளிற் காணும் முதற் பொருள், கருப்பொருள், துறை, கூற்று மெய்ப்பாடு முதல்யன) விவரித்து அவ்விவரணங்களைக் கற்பனையால் உயர்த்தி விசித்திரப்படுத்தி நாடக வழக்காக்கி (உலகியல் வழக்கை நாடக (கற்பனை) வழக்காக்கி) அதன் மூலம் சொல்லிலும் அவை குறிக்கும் பொருளிலும் உள்ள தொனியின் ஆற்றலால் கேட்போர் புலத்தில் ஓர் இன்பத்தை உண்டாக்குவான்; அது உரிப்பொருளான சுவை என்று கண்டனர். இச்சுவை பாவிகத்தால் உண்டாவது. பாவிகமென்பது பேராசிரியர் கருத்துப்படி பொருள்பாடான மெய்ப்பாடு; 'கவி கண்காட்டும், ''தேவருலகங் கூறினும் அதனைக் கண்டாங்கறியச் செய்யும்''. அகப் பொருட் கவி சம்பிரதாயமான, புலனெறி வழக்கை இவ்வாறு பார்க்குமிடத்து செந்தமிழ்ப் பேரிசைப் புலவர்கள் கவித்திறனை எத்துணைப் பொருத்தமாக ஆராய்ந்தனர் என்பது தெளிவாகும். வட மொழி அலங்கார சாத்திரம் இதற்குப் பெருந்துணை புரியுமென்பதை கி. வா. ஜ. தமது தமிழ்க் காப்பியங்கள் என்ற அரிய ஆராய்ச்சி நூலிற் சுட்டிக் காட்டுகிறார். அவற்றை ஒரு நெறிப் படுத்தி வட மொழி அணியியலார் மதங்களோடு வைத்து ஆராய்ந்தால் பெரும் பயன் உண்டாகும். இதனை இக்கட்டுரையில் விரிப்பின் பெருகுமென அஞ்சுகிறோம். ஆனால் இத்துணை ஆராய்ச்சியின் அவசியத்தை வித்துவான் வே. வேங்கடராஜுலு ரெட்டியார் பரணர் என்ற நூலிலும் பிறண்டும் குறிப்பிட்டுள்ளார். பரணர் (பக்கம் 157-158) இல் வரும் குறிப்புப் பின்வருமாறு :-

''ஆசிரியர் தொல்காப்பியனார் மெய்ப் பாடுகளைக் கூறுமிடத்து ஒவ்வொரு மெய்ப்பாடும் நந்நான்கு பொருளிற் பிறக்கும் என்றும் அவை இன்னவை என்றும் கூறினாராயினும், அவர் மெய்ப்பாட்டின் (ரசத்தின்) இயல்பினை விரித்துக் கூறினரல்லர், பின்னும் உடைமை முதலாக

முப்பத்திரண்டு மெய்ப்பாடுகளும் உள்ளன எனக் கூறினர். அவ்வெட்டனேடு இவற்றிற்குள்ள வேறுபாடும் விளங்கு உரைத்திலர் இவற்றுல் மெய்ப்பாட்டியலை ஆசிரியர் சுருக்கமாகவே கூறியுள்ளார் என்பது புலனுகும். வடமொழியில் இவற்றை விரித்துக் கூறும் நூல்கள் பல. அவற்றைப் பின்பற்றிக் கன்னடம் முதலிய திராவிட மொழிகளிலும் சிற்சில நூல்கள் தோன்றியுள்ளன. தமிழிலோ தொல்காப்பியத்தோடே நின்றது'

மெய்ப்பாடென்பது பல மொழிகளிலே விளக்கப்படுவதிலிருந்தும் ஆராய்ச்சியின் அவசியம் மேலும் வற்புறுத்தப்படுகிறது. வடமொழியிலேயே வக்கிரோக்தி முதலிய சொற்கள் பலவகையில் விளக்கப்படுவதால் இது தமிழில் இவ்வாறு பலபட விளக்கம் பெறுவது நூதனமன்று. ஒப்பியல் முறையில் ஆராய்ந்தால் பலவிடயங்கள் தெளிவு பெறுமென நினைக்கிறேன். சுவை ஆராய்ச்சி மிக்க சுவையுடையது.

★ மீனுட்சி கல்யாணம் ★

(நாட்டிய நாடகம்)

முற்றிலும் புதுமைவாய்ந்த
ஒரு கலை நிகழ்ச்சி

★

5-9-1966
மகளிர் கல்லூரி
பிளவர் வீதி, கொழும்பு.

7-9-1966
சரஸ்வதி மண்டபம்
பம்பலப்பிட்டி.

காணத்தவருதீர்கள்

தொடசல்

— *தான்தோன்றிக் கவிராயர்*

ஐயைந்தாண் டாய்எமக்கென் றண்ணல் ஜகந்நாதச்
செய்யோன் புரிந்தபணி செப்பரிதே! — உய்மாறெம்
தேசத் தெழுதத் தெரிந்தாரை ஊக்குவித்தோன்
நேசத்தை நெஞ்சே நினை!

★

மூத்தார், எமக்கு முதல்வர், முன் னோடிகளென்
றேத்திப் புகழும் எழுத்தாளர் மாத்தகைமை
கண்டு தனது 'கலைமகளி'ல் வாய்ப்பளித்த
தொண்டினை என் நாடே தொழு !

★

இங்குள்ளோர் நூல்கள் எடுத்துப் பதிப்பித்தே
அங்குள்ளோர்க் கெல்லாம் அறிவித்தோன் — எங்கள்
பலரை 'எழுதெழுதென் பத்திரிகைக் கென்போன்
மலரடி என் நாடே மதி !

★

தென்னகமும் ஈழத் திருநாடும் வெவ்வேறென்
றெண்ணுமல் ஈழத் தெழுத்தாளர்க் — கந்நாள்தொட்
டுக்க மளித்த உயர்சிந்தை யாளனின்முற்
போக்கினை என் நாடே புகழ் !

பல்துறை வித்தகர்

'கலைமகள்' ஆசிரியர்

திரு. கி. வா. ஜகந்நாதன்

அவர்களது

மணிவிழாவில்

வழங்கிய

பாராட்டு

செந்தமிழ்ச் செல்வ,

எமது அழைப்பை அன்புடன் ஏற்று எமது நாட்டுக்கு வருகை தந்து எம்மைப் பெருமைப்படுத்தியதன் பொருட்டுத் தங்களுக்கு நன்றியைத் தெரிவிப்பதோடு தங்கள் வரவு நல்வரவாகுக என்று மட்டற்ற மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றோம்.

தமிழே உருவாகவமைந்த தங்களுக்கு அறுபது ஆண்டு பூர்த்தியாகிய இச்சமயத்திலே தங்களை நேரிலே கண்டு உபசரிக்கவும், அளவளாவி மகிழவும் அரியதொரு வாய்ப்புக் கிடைத்தமை பற்றி நாமனைவரும் பேருவகையடைகின்றோம்.

சிந்தனை, சொல், செயல் மூன்றாலும் சென்ற ஐம்பது ஆண்டுகளும் தந்நலம் கருதாது தமிழ்நலம் ஒன்றினையே கருதி அல்லும் பகலும் அயராது சேவை செய்த தாங்கள் சங்கச் சான்றோர்கள் கூற்றுக்கு எடுத்துக் காட்டாக இலங்குகின்றீர்கள். இந்த உலகம் அழியாமல் தொடர்ந்து நிலைப்பதற்கு நூதனமான காரணமொன்றைக் கண்டு பிடித்த சங்ககாலப் புலவனொருவன் பெறுதற்கரிய கிடைப்பினும் அதனைத் தான் மட்டுமே தனித்து உண்ணுமல் எல்லோருக்கும் பங்கிட்டுண்ணும் பண்பாளர் ஒரு சிலராவது இருப்பதே உலகம் நிலைப்பதற்குக் காரணம் என்கின்றார். தமிழை அமிழ்த

மெனக் கொள்வது வழக்கம். தாங்கள் மிக அரிதில் முயன்று பெற்ற தமிழமுதத்தைத் தாங்கள் மட்டுமே தனித்துண்ணுமல் கவிதையாகவும், கட்டுரையாகவும், விமர்சனமாக வும், சிறு கதையாகவும் இன்னும் பற்பல விதமாகவும் பாகம்பண்ணி ஏனையோரும் உண்ணும்படி வாரி வாரி வழங்கிக் கொண்டிருக்கும் தந்நலமற்ற தங்கள் தமிழ்ச் சேவையினுல்தான் உலகம் நிலைத்திருக்கின்றது என்று கூற எம் உள்ளம் விழைகின்றது.

தமிழிலக்கியப் பரப்பிலே, தாங்கள் பிரவேசித்த அளவு துறைகளிலே பிரவே சித்துத் தங்களளவு வெற்றியுங் கண்டவர்கள் வேறெவருமே இலரெனக் கருதுவது மிகையாகாது. தாங்கள் செய்த செயற்கரிய சேவைகளுள் எதை விதந்து சொல்லித் தங் களைப் பாராட்டலாமெனத் தெரியாது திகைப்படைகின்ருேம்.

சாதாரண மக்கள் அணுகமுடியாதிருந்த சங்க இலக்கியங்களுள் முக்கியமான எட்டு த்தொகையைச் சங்க நூற்காட்சிகள் என்ற பெயரில் தாங்கள் எழுதிய நூல்கள் மூலம் எல் லோரும் விளங்கவும் சுவைக்கவும் செய்த தங்கள் ஆற்றலைப் பாராட்டுவதா? பத்துப் பாட்டுள் முதன்மையான திருமுருகாற்றுப் படைக்கு, 'வழிகாட்டி' என்ற பெயரில் வழிகாட்டிய சிறப்பை வியப்பதா? 'பயப்படாதீர்கள்' என்ற தலைப்பில் தாங்கள் இய ற்றிய நூல் மூலம் தொல்காப்பியத்தைக் கண்டு நாம் பயப்படாதபடி செய்த சாதுர் யத்தைப் பாராட்டுவதா? பன்னிரண்டு திருமுறைகளையும் எல்லோரும் இலகுவில் விளங் கிப் பயனடையும்படி பன்னிரண்டு திருமுறைமலர்களாக்கித் தந்த காருண்யத்தை நயப் பதா? 'நீங்களும் கவிபாடலாம்' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரைகள் மூலம் இளம் கவிஞர்கள் பலரை உருவாக்கிய பெருமையை உன்னி மகிழ்வதா? இதைவிட இனி எவ் விதத்திலும் சிறப்பாகப் பதிப்பிக்க முடியாது என்று கருதத்தக்க அளவு அதி சிறப்பாகத் திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பை வெளியிட்ட தங்கள் ஆற்றல் கண்டு அதிசயிப்பதா? எவ் விதம் நோக்கினும், தங்களைப் பூரணமாகப் பாராட்டுவதென்பது இயலாத செயலென் பதை ஒப்புக்கொள்வதன் மூலமே தங்களைப் பாராட்டுவதைத் தவிர வேறு வழி எதை யும் அறிகிலேம்.

தங்கள் நூல்களின் நயத்தை எங்ஙனம் நவில்தொறும் நவில்தொறும் மேலும் மேலும் உணர்கின்ருேமோ அதைப்போலவே பண்புடையராகிய தங்கள் தொடர்பால் ஏற்படும் உள்ளத்துயர்வையும் தங்களோடு பயில்தொறும் பயில்தொறும் மேலும் மேலும் உணர்கின்ருேம்,

தங்கள் வாழ்வு தமிழ் வாழ்வு. தங்கள் உயர்வு தமிழின் உயர்வு.

ஈடிணையற்ற தங்கள் தமிழ்த்தொண்டுக்கு எல்லா விதத்திலும் உறுதுணையாக அமைந்துள்ள மாண்புமிக்க தங்கள் தர்மபத்தினியும் தாங்களும் எல்லா நலன்களுடனும் நெடிது காலம் இனிது வாழ இறைவன் அருள்புரிவானுக.

கி. வா. ஜ. மணிவிழாச் சபையினர்
கொழும்பு
1-9-66

கி. வா. ஜ. மணிவிழா
சிறுகதை-கட்டுரைப் போட்டிகள்

"தினகரன்" மூலம் நடத்தப்பட்ட இப்போட்டிகளில்

தங்கப் பதக்கங்கள் பெறுபவர்கள் :

சிறுகதை

திரு. கே. தம்பையா,
4, சோமசுந்தரம் வீதி,
வெள்ளவத்தை.

கட்டுரை

செல்வி சே. சித்திரலேகா,
அரசினர் மத்திய கல்லூரி,
மட்டக்களப்பு.

இரண்டாம் பரிசு பெறுவோர் :

சிறுகதை

திரு. எஸ். ஜோன் ராஜன்,
94, சேர்ச் ரோட்,
கொழும்பு-15.

கட்டுரை

திரு. இ. தருமலிங்கம்,
சி - 194, இராஜவத்தை,
சர்வகலாசாலை பார்க்,
பேராதனை.

இவர்களுக்கு எமது பாராட்டுகள்.

நன்றி

இம்மலரில் இடம் பெற்றுள்ள கட்டுரைகளுட் பல திரு. கி. வா. ஜ. அவர்கள் சம்பந்தமானவை. அவர்களோடு நீண்ட நாள் தொடர்புகொண்ட அன்பர்கள் சிலர் அவர்களுடைய அருங் குணங்களை இருதய பூர்வமாகப் பாராட்டி அவர்களை மனமார வாழ்த்தியுள்ளனர். கட்டுரைகள் எழுதி மலரினைச் சிறப்பித்த அன்பர்கள் அனைவருக்கும் நன்றி.

கி. வா. ஜ மணிவிழாவினையொட்டிக் கட்டுரைப்போட்டி யொன்றும் சிறுகதைப் போட்டி யொன்றும் ஒழுங்கு செய்திருந்தோம். ஏராளமான கட்டுரைகளும் சிறுகதைகளும் கிடைத்துள்ளன. போட்டியில் பங்குபற்ற முன்வந்த தமிழன்பர் அனைவருக்கும் கட்டுரைகளையும் கதைகளையும் நிதானமாக வாசித்துப் பரிசில்களுக்கு ஏற்றவற்றைத் தெரிவு செய்து தந்த அறிஞர்களுக்கும் போட்டி விவரங்களை விளம்பரம் செய்ய உதவிய தினகரன் பத்திராதிபர் அவர்களுக்கும் கடமைப்பட்டவர்களாகின்றோம்.

கி. வா. ஜ. மணிவிழாவுக்குப் பொருள் தந்து உதவிய தமிழ்ப் பெருமக்களுக்கும் மணிவிழா மலருக்கு விளம்பரம் தந்து உதவிய பெருமக்களுக்கும் இன்னும் வெவ்வேறு விதங்களில் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்த அன்பர் அனைவருக்கும் மனமார்ந்த நன்றி.

— மணிவிழாச் சபையினர்



"சிரித்திரன்"

நகைச்சுவைச் சித்திரத்
திங்கள் ஏடு

•

★ சிரிப்புச் சித்திரங்கள்

★ சிரிகதைகள்

★ சிரிப்புக் கேள்வி பதில்கள்

★ சிரிப்புத் துணுக்குகள்

படியுங்கள்! சிந்தை மகிழச் சிரியுங்கள்!

•

விபரங்களுக்கு :

S. SIVASWAMY,

140 - 2/4, ST. SEBASTIAN STREET,

COLOMBO.

அச்சக

அன்பர்கள்

தங்கட்குத் தேவையான

உயர்தர காகிதங்களைக்

கிழ்க்கண்ட முகவரியில்

பெறலாம்.

RAVILUX COMPANY LTD.,

63, KEYZER STREET - COLOMBO 11

'Phone : **2 2 6 9**

'Grams : **"RAVILUX"**

நவீன அழகிய உயர்தர
தங்க ஆபரணங்கட்கு எங்கள்
தங்க மாளிகைக்கு
விஜயம் செய்யுங்கள்



சகல விதமான ஆடர் வேலைகளும்
குறித்த நேரத்தில்
திருப்திகரமான முறையில்
சகாய விலையில்
செய்து கொடுக்கப்படும்

ஜெயா தங்க மாளிகை,

97, செட்டியார் தெரு, கொழும்பு-11,

for Modern Jewellery

Visit

JAYA JEWELLERS,

79, SEA STREET, COLOMBO-11. Phone: 78736

With the Compliments

of

SAMUEL SONS & CO LTD

சிறந்த ஆபரணங்கட்கு

V

மாலா ஜுவல்ரி

100, செட்டித் தெரு,
கொழும்பு-11

For all your Hardware
requirements
visit

CHANDSREE HARDWARE STORES

GENERAL HARDWARE MERCHANTS

91/14, Messenger Street,
COLOMBO.12

With Best Compliments

from

S-H-A-R-A-Z

676, GALLE ROAD,
COLPETTY

'Phone : **8 3 3 3 2**

With

Compliments

NEW

PHONE 7452

LEELA

Press

PRINTERS

BINDERS

33 ST. SEBASTIAN HILL

COLOMBO 12

With Best Compliments

VIBGYOR

SILKSCREEN PRINTERS
29 HAMER'S AVENUE,
WELLAWATTE.

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD
ONE-DOLLAR
DOLLAR BRAND

நீடித்துழைக்கும்

பல வகையான

அலுமீனியப்

பாத்திரங்களையும்

பெறுவதற்குச்

சிறந்த

இடம்

டாலர் கார்ப்பரேஷன்,

14, டாம் வீதி, கொழும்பு-12.

தொலைபேசி: 6910

"செய்தி"

கலை, இலக்கிய, அரசியல்

வார இதழ்

★ அறிவுக்குணவூட்டும் கட்டுரைகள்

★ இன்சுவைக் கவிதைகள்

★ சிறுகதை-சினிமா பகுதிகள்

★ தரம்வாய்ந்த அரசியல் விமர்சனங்கள்

இத்தனையும் உண்டு! ★ அத்தனையும் கற்கண்டு!!

வருட சந்தா ரூ. 10/-

விபரங்களுக்கு :

'செய்தி' காரியாலயம்,

241, கொழும்பு வீதி,

கண்டி.

தொலைபேசி : 7281

நியூ லீலா அச்சகம், கொழும்பு-12.

303